
கல்கி
KALKI 1.10.89 ரூ. 2.50
ஹிட்லருக்குப் பிறகு
வந்த ஹிட்லர்கள்


மில்க் பிக்கிஸ் பிரியர்களுக்கு
ஒளிமயமான வருங்காலம் இருக்
BRITANNIA
Milk Bikis
பிரிட்டானியா மில்க் பிக்கிஸ்
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா

அயோடைஸ்டு உப்பு ஆபத்தானதா?



• டாக்டர் ராமதாஸ்.

கல் உப்பு, பௌடர் உப்பு (டேபிள் ஸால்ட்) போல இப்போது 'அயோடைஸ்டு உப்பு' என்று வந்துள்ளது. அயோடின் சத்து நிறைந்த இதை உபயோகிக்குமாறு அரசே விளம்பரம் செய்கிறது. அயோடின் சத்து குறைவானால் வரும் வியாதிகளைப் போலவே, அதிகமானாலும் வியாதிகள் வரும் என்பதும் அதனால் இந்த உப்பை உபயோகிக்கக் கூடாது என்பதும் ஒரு சாரார் கருத்து. உண்மை என்ன? தைராய்டு மற்றும் அணுக்கதிர் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந. ராமதாஸ் கூறுகிறார்...

''மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் தேவையானது அயோடின் சத்து. இது நாளொன்றுக்கு நூறு மைக்ரோ கிராம் நம் உடலில் சேர வேண்டும். (ஒரு மைக்ரோ கிராம் என்பது ஒரு கிராமில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு). இது நாம் அன்றாடம் உண்ணும் உணவு தானியங்கள், காய்கறி, தண்ணீர், பால் போன்றவற்றிலிருந்து இயற்கையாகவே நமக்குக் கிடைத்து விடும். ஆனால் காலப்போக்கில் ஏற்பட்ட சுற்றுச் சூழல் — மண்வளப் பாதிப்பு போன்றவற்றால் இச் சத்து நமக்கு இயற்கையான முறையில் கிடைப்பது வெகுவாகக் குறைந்து விட்டது. முதலில் மலைப் பகுதிகளில் மட்டுமே இருந்த இந்த நிலை தற்போது சமவெளிப் பகுதிக்கும் வந்து விட்டது. சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி சுமார் பதினான்கு கோடி மக்கள் அயோடின் பற்றாக்குறைப் பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். இது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டும் வருகிறது.




• அயோடின் குறைவால் தைராய்டு பாதிப்பு....

''அயோடின் சத்து போதுமான அளவுக்குக் கிடைக்காமல் போனால் கழுத்துப் பகுதியிலுள்ள தைராய்டு சுரப்பி பாதிக்கப்படும். அதனால் உடல்வளர்ச்சியும்மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படும். கழுத்துப் பகுதியும் வீங்கிப் போகும். கருவுற்ற பெண்களாக இருந்தால் கருவின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

''இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அயோடின் சத்துள்ள அயோடைஸ்டு உப்பைப் பயன்படுத்துமாறு அரசு விளம்பரம் செய்கிறது. அயோடைஸ்டு உப்பில் ஏராளமான அயோடின் இருக்கிறது என்பதும் அதனால் பாதிப்பு ஏற்படுகிறது என்பதும் சரியல்ல. ஒரு கிலோ அயோடைஸ்டு உப்பில் ஒரு கிராம் அயோடின்தான் உள்ளது. அப்படியே நமது உடலில் அயோடின் அதிகமாகிப் போனாலும், அதிகமான அயோடின் சிறுநீர் மூலம் வெளியேறி விடும் என்றே உலக சுகாதார நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் போன்றவை செய்த பல ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

சந்திப்பு: **தில்லப்பா**



• கணேசன்: ''ஆரணிப்பட்டு அழுத்தமான பட்டு!''



• ஆர்.என்.சாமி — ''ஆரணிப்பட்டு நாங்கள் விற்பதில்லை!''


ஆரணிப் பட்டும் அங்குள்ள பிரச்னையையும்!



• எம்.எல்.ஏ. தவானன்

ஆரணி பஸ் ஸ்டாண்டுக்கும் விறகுக் கடைக்கும் வித்தியாசமே கிடையாது! காரணம், ஆக்ரமிப்பு. பஸ் ஸ்டாண்டு மட்டும்தான் என்பதில்லை; கடைத் தெரு வெங்கும் இதே கதிதான்! நடைபாதையைத் தேடிப் பிடித்துக் கடைத் தெருவுக்குள் நுழையவே படாதபாடுபட வேண்டியிருக்கிறது. எல்லா ஊரிலும் போல இங்கும் ஓடாத மணிக் கூண்டு கடிகாரம்!

''ஏமாந்தவங்க ஊர் சார் இது. வாய் செத்த ஜனங்க... இல்லைன்னா, பக்கத்திலுள்ள செய்யாறை விட இது பெரிய ஊராயிருந்தும் சப்—கலெக்டர் ஆபீஸ், சர்க்கரை ஆலை, கல்லூரிகள்... என்று எல்லாவற்றையும் செய்யாறிலேயே அமைத்த போது, இந்த ஜனங்க சும்மா இருந்திருப்பாங்களா? தங்கள் ஊருக்கும் வேணும்னு போராடியிருக்க மாட்டாங்களா? ஒண்ணும் செய்யலை. புலவர் கோவிந்தன் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் தமது தொகுதிக்கே கொண்டு போய் விட்டார். இப்படி எல்லாமே செய்யாறுக்குப் போய் விட்ட வயித்தெரிச்சலைத் தணிக்கவோ என்னவோ, ஆரணியில் தீயணைப்பு நிலையத்தை மட்டும் வைத்திருக்கிறார்கள்...'' என்று ஆற்றாமையோடு கூறுகிறார் ஆரணி



• ஓடாத மணிக் கூண்டு....

மக்கள் சேம நலச் சங்கத் தலைவரும் வியாபாரியுமான பலராம நாயுடு.

குடிநீர்ப் பிரச்னை பற்றி விசாரித்த போது, ''பரவாயில்லை'' என்று சந்தோஷத்தோடு சொன்ன பலராம நாயுடு, '''நாட்டுத் தண்ணி' க்குப் பஞ்சமே இல்லை. போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில் கூட தைரியமாய் விற்கிறார்கள்...'' என்றார்.

ஆரணி வியாபாரிகள் சங்கம் அங்குள்ள மருத்துவமனைக்குத் தன் செலவிலேயே கட்டில், மெத்தை, ரப்பர் ஷீட், தொழு நோயாளிகளுக்கு மருந்துகள், துணிகள்... என்று பல வகைகளிலும் உதவியிருக்கிறது. இப்படி வசதிகள் பல இருந்தாலும் ஆஸ்பத்திரி நிலைமை சுமுகமாக இல்லை.

நகர சபைத் தலைவரின் மனைவியும் ஆரணி எம்.எல்.ஏ. மனைவியும் இந்த ஆஸ்பத்திரியில் நர்ஸ்களாகப் பணியாற்றுவதால் ஏகப்பட்ட பாலிடிக்ஸ்! இந்தப் பாலிடிக்ஸுக்கே நேரம் சரியாக இருப்பதால் நோயாளிகளுக்காக ஒதுக்கப்படும் நேரம் மிக மிகக் குறைவு என்பது உள்ளூர்க்காரர்களின் வாதம்.

தொழில் வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டால் ஆரணியிலிருந்து ஐந்து கி.மீ. தள்ளியுள்ள தனியார் நூற்பு ஆலை ஒன்றும் மற்றுமுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட நெல் அரவை ஆலைகளையும் தவிர வேறு பிரமாதமாக ஒன்றுமில்லை. மழை அடிக்கடி பொய்த்துப் போவதாலும், பர்மிட், கோட்டா கெடுபிடிகள் இருப்பதாலும் நெல் அரவை ஆலைத் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை இருப்பதில்லை. ''இந்த பர்மிட் கோட்டா ஸிஸ்டம் எப்போது ஒழிகிறதோ அப்போதுதான் தொழிலில் நேர்மை இருக்கும்'' என்று இங்கே கூறுகிறவர் யார் தெரியுமா? நம்புங்கள், இ. காங்கிரஸ் முன்னாள் எம். எல். ஏ. ராஜாபாபு!

அடுத்தது பட்டு நெசவுத் தொழில். ''ஆரணிப்பட்டு அழுத்தமான பட்டு சார்...'' என்றார் பட்டு நெசவாளர் கணேசன். உண்மையா? தமது ஊர் அபிமானத்தில் அவர் அப்படிச் சொன்னாரே தவிர, மற்றபடி ஆரணிப்பட்டு, காஞ்சிபுரம் பட்டு ஆகிய இரண்டுக்கும் வித்தியாசமெல்லாம் ஏதும் இல்லை. எந்த ஊர்ப் பட்டாக இருந்தாலும் பணத்துக்குத் தகுந்த தரம் என்பதே உண்மை! முறுக்கு இழைகள் கொண்ட (சரிழை) கெட்டிப்பட்டு வேண்டுமென்றால் விலை அதிகம்தான்; 'யார் இந்தக் கனத்தைச் சுமப்பது' என்று இப்போது மாடர்ன் பெண்மணிகள் மெலிதான சரக்கையே விரும்புகின்றனர். ஒப்பு நோக்க மலிவு விலை. சென்னைக் கடைகளில் நீங்கள் எந்த ஊர்ப் பட்டு வேண்டும் என்று கேட்கிறீர்களோ, 'அந்த ஊர்ப் புடவைதான் இது' என்று சத்தியம் பண்ணுவார்கள்! ஆனால் ஆரணியில் ஒரு பெரிய ஜவுளிக் கடையில் நுழைந்த போது, ''நாங்கள் ஆரணியில் தயாராகும் பட்டுப் புடவைகள் விற்பதில்லை; மற்றபடி காஞ்சீபுரம், தர்மாவரம், பனாரஸ் எல்லாம் இருக்கு!'' என்றார் கடை உரிமையாளர் ஆர். என். சாமி. இது எப்படி இருக்கு? இவர் செங்குந்தர் சங்கப் பிரமுகர், சமுதாய, பொருளாதாரத் தொண்டு மன்றத்தின் ஆரணித் தலைவரும் கூட.

''ஜரிகை வேலைப்பாட்டைப் பொருத்த மட்டில் காஞ்சிப்பட்டு பிரமாதமாகத்தான்



• பலராம நாயுடு: ''ஏமாந்தவங்க ஊர்சார் இது..''

இருக்கும்'' என்று அதற்கு மட்டும் விட்டுக் கொடுத்துப் பேசும் ஆரணி நெசவாளர் கணேசன், தொடர்ந்து சொன்னார்: ''குடும்பமே முழுக்க வேலை செய்தால் ஒரு மாதத்துக்கு ஒரு தறியில் 24 கஜம் புடவை (அதாவது ஆறு கெஜம் புடவைகள் நாலு) நெய்யலாம். கூலி 800 ரூபாய் கிடைக்கும்!''

தீபாவளிக்குப் பட்டுப்புடவை தப்பித் தவறி வாங்கினால் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் போது புதிதாக வர இருக்கும் சம்புவராயர் மாவட்டத்தில் சேர இருக்கிறது ஆரணி. ''எங்களுக்குத் துளியும் இதில் இஷ்டமில்லை'' என்கிறார் நகர இந்திரா காங்கிரஸ் தலைவர் கண்ணப்பன். ''செய்யாறு, போளூர், வந்தவாசி, ஆரணி மக்கள், திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு,வர இருக்கும் சம்புவராயர்மாவட்டத்தில் இணைய விரும்பவில்லை. காரணம் கிட்டத்தட்ட 80 கி.மீ. தூரம் மாவட்டத் தலைநகருக்குச் செல்ல வேண்டும். இந்தப் புதிய மாவட்டத்தினால் இரண்டு தாலுக்கா மக்கள் — அதாவது, செங்கம், திருவண்ணாமலை தாலுக்கா மக்கள்தான் பயன் பெறுவார்கள்.''

சரி ஆரணியின் முன்னேற்றத்திற்காகத் தற்போதைய எம்.எல்.ஏ. (தி.மு.க.) வான ஏ. சி. தயாளன் என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்?

''முள்ளிப்பட்டு அருகில் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. பூச்சி மலைக் குப்பத்தில் விவசாயக் கல்லூரி வர வாய்ப்பிருக்கிறது. தொழில் நுட்பப் பள்ளி அல்லது கலைக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன். ஆதனூர் அருகில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு அனுமதி கிடைத்தாகி விட்டது. பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள ஆரணியில் நெசவாளர்களுக்கு வேண்டிய சாய ஆலை, சிறு முதலீட்டில் பேப்பர் மில், பட்டுப் புழு வளர்ப்பு போன்றவையும் விரைவில் செயல்பட உள்ளன. பாலாற்றுத் தண்ணீரை நகருக்குக் கொண்டு வருவதற்கான 85 லட்சம் செலவில் ஒரு திட்டமும் தீட்டப்பட்டுள்ளது...'' என்று ஏராளமாக அடுக்கிக் கொண்டே சென்றார் தயாளன்.

நமது நாட்டில் திட்டங்களுக்கா பஞ்சம்? ஆரணிக் கோட்டை இன்று பாழடைந்து போய், குதிரை லாயங்கள் மட்டுமே காரியாலயங்களாகப் பயன்படுவது போல, தயாளனின் திட்டக் கோட்டைகளும் ஆகி விடாமல் இருந்தால் சரி!

— ப்ரியன்

படங்கள்: ஸ்ரீஹரி

கவிதை பாடும் நேரம்!



○○ சுப்ரீம் கோர்ட்
தலைமை நீதிபதி
பந்து வீசினார் —
கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு
க்ளீன் போல்டு!

○○ சர்க்கரை விலை
ஏழிலிருந்து ஒம்பதானதும்
எங்க வீட்ல
எல்லாருக்கும்
டயபடீஸ்!

○○ தமிழ் சினிமா வைக்கிற
தலைப்புக்களைப் பார்த்தா,
ஏங்க இப்படிக் கூட
வச்சிருவாங்களோ —
'எங்க அம்மா ஒதப்பா'!

○○ எம்பதாயிரம் டன் அரிசி
நாப்பதாயிரம் ஆச்சாம்.
போய்ச் சொல்லியே அனுப்பாதவங்க
போஸ்ட் கார்டு போட்டாவா
அனுப்புவாங்க?

— சித்தார்த்.



* மேலே: ஸ்டாலின், ஹிட்லர், முஸலினி; கீழே: ஜியா, இடி அமீன், மாஸேதுங். ஓவியர்: ராமு.

இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்கியது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு 1939ல். இன்று உலகெங்கும் அந்த நாளைப் பொன் விழாவாகக் கொண்டாட முடியாது போனாலும் நினைவுபடுத்திக் கொள்கிறார்கள். காரணம், 'மீண்டும் ஓர் உலகப் போர் தோன்றி விடக் கூடாது: மீண்டும் ஒரு ஹிட்லர் உருவாக இடமளித்து விடக் கூடாது' என்ற கவலைதான்!

இரண்டாவது உலகப் பெரும் போரில் இறந்தவர்கள் ஐந்து கோடி பேர்! போர் தொடங்கிய சமயம் இங்கிலாந்திலிருந்து சுமார் அறுபத்தைந்தாயிரம் சிறுவர் சிறுமியர் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப் பட்டு விட்டனர். இதன் நோக்கம், 'ஒரு வேளை யுத்தத்தில் இங்கிலாந்து அழிந்து பட்டாலும் பிரிட்டிஷ் இனம் மடிந்து விடக் கூடாது: பிரிட்டன் மீது உரிமை கொண்டாட பிரிட்டிஷ் இனம் வாழ வேண்டும்' என்பது தான். பெற்றோரைப் பிரிந்து குழந்தைகளும், குழந்தைகளைப் பிரிந்து பெற்றோரும் சொல்லொணா மனத்துயருக்கு உள்ளானார்கள்.

ஹிட்லருக்குப் பிறகு வந்த ஹிட்லர்கள்!



* நமது நடிகர் திலகம் தரிக்காத வேஷம் எது? படத்தில் 'ஹிட்லர்' உமாநாத்தாக!

கடலில் மூழ்கடிக்கப்பட்ட வியாபார, மற்றும் யுத்தக் கப்பல்கள்; நகரங்களில் தரைமட்டமான தொழிலகங்கள், குடியிருப்புக்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை.

மக்கள் துப்பாக்கிகளால் சுடப்பட்டும் குண்டு வீச்சுக்கு ஆளாகியும் இறந்தது மட்டுமல்ல; தூக்கிலே தொங்கியும், கூண்டுக்குள் அடைத்து விஷப்புகை செலுத்தப்பட்டும், தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டும், உயிரோடு புதைக்கப்பட்டும், தலை வெட்டப்பட்டும் கூட்டம் கூட்டமாக மடிந்தார்கள்! புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளைச் சோதனை செய்து பார்க்கப் பயன்படுத்தப் பட்டதில் ஏராளமான பேர் இறந்தார்கள்! இந்தக் கோர கிருத்தியங்களைச் செய்தவன் ஜெர்மானிய அதிபர் அடால்ஃப் ஹிட்லர். யுத்தம் என்பதே கொடுமையெனில் அந்த யுத்தத்தை நடத்துகிறவன் ஒரு சர்வாதிகாரக் கொடுங்கோலனாக இருந்து விட்டால் கேட்கவா வேண்டும்?

அவனுடைய கொடிய மனம் முக்கியமாக யூதர்கள் மீதுதான் பாய்ந்தது. ஜெர்மனிக்



* இந்திரா காந்தி எமெர்ஜென்ஸி அறிவித்ததும் முரசொலி அசாதாரணத் துணிச்சலுடன் வெளி விட்ட கார்ட்டூன். ஓவியர்: செல்லப்பன்.

குள்ளேயே யூதர்கள் வேட்டையாடப் பட்டது மட்டுமல்ல; ஜெர்மானிய வீரர்கள் போலந்தைக் கைப்பற்றிய போது, அங்கு வாழ்ந்த யூதர்களை லாரி லாரியாக அள்ளிக் கொண்டு போய்க் கொன்று குவித்தார்கள்; மகிழ்ந்தார்கள்! அந்த அளவுக்கு இனத் துவேஷத்தை ஜெர்மானிய மக்களிடமும் ராணுவத்தினரிடமும் வளர்த்து விட்டிருந் தான் ஹிட்லர். 'செத்துப் போன யூதர்கள் அதிர்ஷ்டசாலிகள்' என்று கைதாகியிருந்த இதர யூதர்கள் எண்ணுமளவில் அவர் களைப் பல்வேறு விதமான சித்திரவதை களுக்கு உள்ளாக்கினான்.

ஹிட்லருடைய கொடுங்கோன்மையால் இறந்து போன யூதர்களின் எண்ணிக்கை ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக ஐம்பது லட்சம் பேர்!

'தேசிய சோஷலிஸ்ட் ஜெர்மன் தொழி லாளர் கட்சி'யில் சாதாரண உறுப்பினரா கச் சேர்ந்த ஹிட்லர், மிக விரைவில் அக் கட்சியின் தலைவனாகவும் பிறகு ஜெர்மானிய நாட்டின் தலைவனாகவும் உயர, அவனுக்கு உதவியது அவனுடைய வாக்கு வன்மை! கேட்பவரை மகுடியில் மயங்கும் சர்ப்பம் போல் ஆக்கி விடும் அவன் சொற்பொழிவு. 'ஜெர்மானியர் மட்டும்தான் ஆளப் பிறந்த ஆரிய இனத்த வர்; மற்றவரெல்லாம் அடக்கி ஆளப்பட வேண்டியவர்கள்; அடிமைகளாகவே வாழப் பிறந்தவர்கள்' என்பது அவன் உருவாக்கிய புதிய சித்தாந்தம். இந்த முட்டாள்தனத்தை அவன் முழுமையாக நம்பிப் பிரசாரம் செய்தது கூட வியப் பில்லை; அதை விட ஆச்சர்யம், அவன் பிரசாரத்தை ஏற்று, பல்லாயிரக்கணக்கான வர்கள் அவனுக்குத் துணை நின்று, அவன் காலால் இட்ட பணியைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி வைக்கத் தயாராக இருந்தது தான்!

யூதர்களிடம் ஹிட்லர் அத்தனை வெறுப்புக் கொள்வதற்குச் சில காரணங்கள் இருக்கத்தான் செய்தன. ஜெர்மானியப் பொருளாதாரமே அவர்கள் வசம் இருந்தது. அவர்களில் சிலர் நாட்டு நலனை விடச் சுயநலனையே பெரிதாக நினைத்தார்கள். ஆனால் இதன் மறு பக்கத்தைக் காண ஹிட்லர் தவறி விட்டான். யூதர்கள் மகா அறிவாளிகள். அந்த அறிவாற்றலால் அவர் கள் வளர்ந்த போது, ஜெர்மானிய நாடும் வளர்ந்தது. உலக யுத்தம் காரணமாக அகதி களாகப் பல்வேறு நாடுகளில் குடியேறிய யூதர்கள் — விஞ்ஞான மேதைகள்; பொருளா தார நிபுணர்கள் — தங்கள் அறிவாற்றலால் அந்நாடுகளை உயர்த்தி உன்னத நிலைக்குக் கொண்டு வரப் பெரிதும் உதவியிருக்கிறார் கள்.

அவ்வளவு ஏன், உலக யுத்தம் முடிந்த பிறகு, ஆட்சியிலும், மக்களிடமும் மனப் பான்மைகள் மாற, மேற்கு ஜெர்மனி அசாதாரண வளர்ச்சி பெறவும் அந்த யூதர் களே நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பலவிதங்களில் உதவியுள்ளனர். ஆக, யூதர் களை, அவர்களிடமிருந்த சில குறைகளைக் களைந்து நல்வழிப்படுத்துவதற்குப் பதி லாக, அவர்கள் மீது வெறுப்பை வளர்த்துக் கொண்டதுதான் ஹிட்லர் செய்த மாபெரும்



"பஸ்ஸில பிக்பாக்கெட் அடிச்ச கேடியை நேத்திக்கு 'விடாதே பிடி'ன்னு துரத்திக்கிட்டு ஓடினீங்களே... என்ன ஆச்சு...?"

"அந்தாளு போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே புகுந்துக்கிட்டுத் தப்பிச்சிட்டான்..."

— வி. கிருஷ்ணகுமார்.

குற்றம். அதன் விளைவாக, அவன் நமது புராணங்களில் பேசப்படுகிற அரக்கர்களையெல்லாம் விடக் கொடிய அரக்கனாக விளங்கினான்!

ஹிட்லருக்கு முன்னாலும், சம காலத்திலும், அவனுக்குப் பின்னாலும் பல கொடுங்கோலர்கள் இருந்திருக்கிறார்கள். அவனுடைய எல்லாக் குணாதிசயங்களையும் இவர்கள் அடைந்திராவிட்டாலும், பலப்பல தருணங்களில் அவனை நினைவுபடுத்துகிற மாதிரி இவர்கள் நடந்து கொண்டதுண்டு. 'ஹிட்லரைப் போல நடந்து கொள்கிறானே' என்று பேசி, எழுதப்பட்டவர்கள்; ஹிட்லருடன் ஒப்பிட்டு கார்ட்டூன் சித்திரம் வரையப்பட்டவர்கள் பலர்.

தலைமைப் பதவிக்கு வந்து விட்டவர்களைச் சூழ்ந்து கொண்டு, அளவுக்கு மீறித் துதிபாடி, இச்சகம் பேசுகிற கும்பல் எங்கேயும் உண்டு. இவர்களைத் தடுத்து, எட்ட நிறுத்துகிற மன வலிமை இல்லாத தலைவன், நல்லவனாக இருப்பினும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பினும் நாளடைவில் சர்வாதிகாரியாகி விடுவான்!

லெனின், மாஸேதுங், சியாங்கே ஷேக், ஸ்டாலின், சுகர்னோ, இந்திரா காந்தி போன்றோரிடம் சர்வாதிகாரப் போக்கு வெவ்வேறு வகையிலும் அளவிலும் வெளிப்பட்டதற்கு இந்தத் தனிமனிதத் துதி அதிகரித்ததுதான் முக்கியக் காரணம்.

ஹிட்லரோடு சமகாலத்தில் இத்தாலியில் வாழ்ந்த கொடுங்கோலன் முஸலினி. அவனும் அவனுடைய காதலி கிளாராவும் புரட்சி இயக்க வீரன் ஒருவனின் இயந்திரத் துப்பாக்கியால் நான்கடி தூரத்திலிருந்து சரமாரியாகச் சுடப்பட்டுச் செத்தார்கள். ஹிட்லரின் புத்திசாலித்தனம் முஸலினிக்கு இல்லாததால், மிலான் நகரின் சந்தைத் திடலில் இருந்த விளக்குக் கம்பம் ஒன்றில், இருவரின் உடல்களும் கட்டித் தொங்க விடப்பட்டன.

குறிப்பிடத் தகுந்த சர்வாதிகாரிகளுள் முக்கியமானவன் இடி அமீன். நைல் நதி உற்பத்தியாகும் செழிப்பான உகாண்டா நாட்டின் அதிபராக விளங்கியவன்.

இரண்டரை லட்சம் உகாண்டா மக்களை ஈவு இரக்கமில்லாமல் கொன்று குவித்தவன் இந்த இடி அமீன். அமைச்சர்கள், வங்கி கவர்னர், கம்பாலா நகர மேயர், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர், தலைமை நீதிபதி என்று பல தரப்பினரின் படுகொலைக்கும் இடி அமீன் காரணமாயிருந்தான். 'சிங்கப்பூர்' என்ற உகாண்டாவின் விசேஷச் சிறையில் கொண்டு போய் அடைக்கப்பட்டு, சித்திரவதை செய்து கொன்று நைல் நதியில் வீசப்பட்ட பிணங்களின் 'தினசரி நிலவரம்' 150 வரை உயர்ந்தது!

கொலை செய்வதை விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் நடத்திக் காட்ட மலயாமு என்பவன் அவனுக்கு வாய்த்தான். இந்தச் 'சாதனை'களுக்காக மலயாமுவுக்குப் பதவி உயர்வுகள் தந்தான் இடி அமீன்!

உகாண்டாவில் இருந்த பிரிட்டிஷ் கம்பெனிகளை எல்லாம் தேச உடைமை ஆக்கி விட்டு, "உகாண்டாச் சிங்கம்" "இங்கிலாந்தை வென்றவன்", அமெரிக்காவை அடி பணிய வைத்தவன்" என்றெல்லாம் தனக்குத்தானே பட்டங்களைச் சூட்டிக் கொண்டவன் இடி அமீன். துணைவேந்தர்களை மிரட்டிப் பல்கலைக் கழக 'டாக்டர்' பட்டங்களைப் பெற்றவன்.

எட்டாண்டு காலக் கொடுங்கோல் ஆட்சியைப் பொறுக்க முடியாமல், அதிருப்தியாளர்கள், தான்ஸானிய அதிபர் நைரேரேயின் உதவியோடு உகாண்டாவுக்குள் நுழைந்த போது —

இடி அமீனின் இருபதாயிரம் படை வீரர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓடினார்கள். இடிஅமீனும் தன் மனைவி மதீனாவுடன் இரவோடு இரவாக நாட்டை விட்டே ஓடினான். எங்கு போனான் என்பது தெரியாது. லிபியாவுக்குப் போயிருக்கலாம் என்பது ஓர் அனுமானம்.

ஹிட்லரையும் முஸலினியையுமே தனக்கு வழிகாட்டியாகக் கொண்டவன் அர்ஜெண்டைனாவின் ஜுவான் டி. பெரோன். பெண்கள் விஷயத்தில் மிக மோசமானவனாக இவன் இருந்தான்.

"சுவையான சம்பவங்கள்"—

" மானம் காத்த கண்ணன் போல்..."

1984 — ஆம் வருடம் நாங்கள் சென்னை வந்து ஒரு வருடமே ஆகியிருந்த நிலைமையில் எங்கள் வீட்டில் எனது அக்காவிற்குத் திருமணம் நிச்சயமாகியது. முன்பின் அறியாத ஊரில் யார் யாரிடமோ கடன் வாங்கியும் நகைகளை பாங்கில் வைத்தும் திருமணத்தை முடித்தோம். எங்கள் தகப்பனாரின் வருமானம் எங்களின் படிப்பிற்கும், வட்டிக்குமே சரியாக இருந்தது. எப்படிக் கடன்களை அடைக்கப் போகிறோம் என்று மலைப்பாக இருந்தது.

1985 — ஆம் வருடம் என் அண்ணன் ஸ்ரீராம் சிட்ஸில் சேரும்படி சிபாரிசு செய்தார். மற்ற சில சிட் ஃபண்டுகளில் அடைந்த அனுபவம் எங்கள் மனத்தில் பயத்தைக் கொடுத்தாலும் நம்பிக்கையுடன் ஸ்ரீராம் சிட்ஸில் இரண்டுச் சீட்டுகளில் (ரூ. 10,000; ரூ. 5,000) சேர்ந்தோம்.

இந்த நிலையில் 1986 — ஆம் வருடம் எங்களுக்குக் கடன் கொடுத்திருந்த பெண்மணி ஒருவரும், அவரது அண்ணனும் திடீரென்று ஒருநாள் வந்து "கடன் கொடுத்த மொத்தப் பணத்தையும் திருப்பிக் கொடுத்தால்தான் இந்த வீட்டை விட்டுப் போவோம். இல்லாவிடில் உங்களுடன் நாங்களும் இந்த வீட்டிலேயே இருப்போம்" எனக் கூறி அமர்ந்து விட்டனர். நாங்கள் இருந்த நிலையில் அவர்களுக்கும் சாப்பாடு போட்டு வீட்டில் வைத்துக் கொள்வது இயலாத காரியம். இரவு வீட்டிற்கு வந்த எங்கள் தகப்பனார், அவர்கள் இருவரிடமும் கெஞ்சி அந்த மாதத்திற்குள் பணத்தைக் கொடுத்துவிடுவதாகக் கூறி ஒருவாறாக அனுப்பி வைத்தார். அவர்களை அனுப்பிவிட்டோமே தவிர, எப்படிப் பணத்தைக் கொடுக்கப் போகிறோம் என்றே தெரியவில்லை.

அப்போது எங்கள் அண்ணன்தான் ஸ்ரீராம் சிட்ஸில் உள்ள இரண்டு சீட்டுப் பணத்தை ஏலத்தில் எடுக்கலாம் என்று அறிவுரை கூறினார். நல்ல சமயத்தில் ஏலத்தில் எடுக்கவும் முடிந்தது. வந்த பணத்தைக் கொண்டு அவர்களின் கடனையும் அடைத்து நகைகளையும் மீட்டோம்.

பின்பு சில நாட்களில் எங்க்ள் பெரிய அண்ணனுக்கும் வரதட்சணை வாங்காமல் கல்யாணம் செய்வதற்கு ஸ்ரீராமில்தான் சீட்டு சேர்ந்து பணம் எடுத்து முடித்தோம். தற்போது எங்கள் வீட்டிலுள்ள சுவர் கடிகாரம் முதல், ஃபிரிட்ஜ், டீ. வி. வரை ஒவ்வொரு பொருட்களும் ஸ்ரீராமில் மேலும் சீட்டுக் கட்டிய பணத்தில் வாங்கிய பொருட்கள்தான்.

அன்று மிகவும் கஷ்ட நிலையில் இருந்த எங்கள் குடும்பத்தின் மானம் காத்த கண்ணனாக வந்தது ஸ்ரீராம் சிட்ஸ். இன்று எங்கள் குடும்பத்தின் நபர்கள் அனைவரும் அதன் உறுப்பினர்களாக உள்ளோம் என்று கூறிக் கொள்வதில் நாங்கள் அனைவரும் மிகமிக மகிழ்ச்சி கொள்கிறோம்.

இப்படிக்கு,

உமா சுப்பிரமணியம்,
12, நேரு தெரு, நாகல்கேணி,
குரோம்பேட்டை, சென்னை — 44.

'தர்மத்தின் தலைவன்', 'வாரி வழங்கும் வள்ளல்' என்று எல்லோரும் தன்னைக் கூற வேண்டும் என்பதற்காகப் பல இலவசத் திட்டங்களை வாய்க்கு வந்தபடி அறிவித்துக் கொண்டிருந்தான் பெரோன். 'கஜானா காலியாகி விட்டது' என்று அமைச்சர்கள் சொன்ன போது, 'நோட்டுக்களை அடித்துக் குவியுங்கள்' என்று சொன்ன பொருளாதாரப் புலியாக விளங்கினான்.

லஞ்சம் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடியது. 'எனக்கு ஒரு லட்சம் டாலர் கொடுத்தால் நீ பத்து லட்சம் டாலர்கள் சம்பாதித்துக் கொள்ளலாம்' என்ற எழுதாத ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினான்.

ஐம்பத்தோரு வயதைத் தாண்டிய பெரோன் தன்னை முப்பத்தைந்து வயதுக் காரனாகக் காட்டிக் கொள்வதில் பெரும் கவனம் செலுத்தினான். மக்கள் முன் தோன்றும் போது விலையுயர்ந்த பட்டாடைகள் அணிந்து கவர்ச்சிகரமாக வருவான். ஏழை மக்களுக்கு நாடு முழுவதும் ஒருவேளை சாப்பாடு, வேலையில்லாதவர்களுக்கு வாரம் தோறும் உதவித் தொகை, கவிஞர்களுக்கும், நடிகர்களுக்கும், பயில்வான்களுக்கும் பரிசுகள் — என்று கஜானாவைக் காலி செய்வதில் நிபுணனாக விளங்கினான் பெரோன். இவனுடைய கடைசிக் காலத்துக் காதலியாக விளங்கிய நடிகை மரியா இஸபெல்லா, லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்கினாள். அதிகாரிகள் பெற்ற லஞ்சத்தில் பங்கு வசூலித்தாள்.

இவை ஒருபுறமிருந்தாலும் கடைசி வரை பெரோனுக்கு அடித்தள மக்களின் ஆதரவு இருந்தது. அவன் இறந்தான் என்பதையே அவர்களால் நம்ப முடியவில்லை. அவனுக்கு அஞ்சலி செலுத்த எழுபது லட்சம் பேர் வந்ததாகக் குறைந்தபட்ச மதிப்புப் போடப்பட்டது!

சொந்த நாட்டில் சாவதற்குக் கூட உரிமையில்லாமல், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அந்நிய நாட்டில் அகதியாகச் செத்துப் போனான் ஈரான் மன்னன் ஷா.

'ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடிய ஓர் அரச வம்சத்தை நிறுவுவேன்' என்று முடிசூட்டிக் கொண்ட ஷா, பதின்மூன்று ஆண்டுகளில் பரிதாபப்பட்டுப் போனான்.

பெட்ரோல் வளம் மிக்க நாட்டில் கோடி கோடியாக வந்த வருமானம் முழுவதையும், மக்களுக்குப் பயன்படாமல் தன்னுடைய உல்லாச வாழ்வுக்கும் நவீன இராணுவத்தைக் கட்டிக்காக்கவும், அதிகார வர்க்கத்துக்குமே செலவிட்டான்.

சபீனா என்ற சாதாரணப் பெண்ணின் மோக விழிகளில் மயங்கித் தன்னையே இழந்தவன் இந்தப் பாதுஷா. அவள் ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடினான். ஒரு கட்டத்தில் "மன்னனே பரவாயில்லை இந்த சபீனாதான் தலைகால் புரியாமல் ஆடுகிறாள்" என்று அதிகாரிகள் நினைத்தார்கள்.

லண்டனில் ஷா கட்டிய விருந்தினர் மாளிகைக்கு ஆன செலவு ஒரு கோடி ரூபாய். அந்தப் பல மாடிச் சொகுசு மாளிகையின் கதவுக் கைப்பிடிகளும், குழாய் மூடிகளும் தங்கத்தால் ஆனவை.

புரட்சி வெடித்தது. இறுதி வரை மன்னனுக்கு விசுவாசமாக இருந்த தளபதிகள் 'பத்திரமாக' அவனை இரவோடு இரவாக விமானம் ஏற்றி அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆட்சியைப் பிடித்தார் மதத் தலைவர் அயதுல்லா கொமேனி.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக இருந்து கொண்டே, மிகச் சாமர்த்தியமான முறையில் கூலிக் கொலைகாரனை ஏவித் தன்னுடைய அரசியல் எதிரியான நினாய் அக்கினோவைச் சுட்டுக் கொன்றுவிட்டு முதலைக் கண்ணீர் வடித்தவன் பெர்ட்டினண்ட் மார்க்கோஸ். சமீப கால நடைமுறைகளின்படி வாடகைக் கொலைகாரனும் சுட்டுக் கொல்லப்பட்டான்! பின்னர் போலியான விசாரணைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. எதிர்ப்புக் கிளம்பியது. கொலை செய்யப்பட்ட அக்கினோவின் மனைவியே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வென்றாள்! மார்க்கோஸ் அமெரிக்காவுக்கு ஓடிப் போனான்.

இவனுடைய சரிவுக்கும் காரணமானவள் இமெல்டா என்கிற பெண்தான். மார்க்கோஸின் மனைவியான பிறகு, தன்னுடைய குடும்பமே இனிப் பரம்பரையாகப் பிலிப்பைன்ஸை ஆள வேண்டும் என்று எண்ணத் தொடங்கி அதற்கான பணிகளில் ஈடுபட்டாள் இமெல்டா.

ஏராளமான வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு மார்க்கோஸ் தம்பதியின் சகோதரர்கள், மற்றும் சித்தப்பா, பெரியப்பாக்களே அவற்றின் தலைவர்கள் ஆக்கப்பட்டார்கள். ஒவ்வொரு வாரியத்தின் பட்ஜெட் தொகையிலும் கால் பாகம் இமெல்டாவுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பது மார்க்கோசின் கண்டிப்பான உத்தரவு! கடைசியில் நாட்டை விட்டே போய்ச் சேர்ந்தார்கள். நின்று நிலைத்தது அபகீர்த்தி மட்டுமே!

தொகுப்பு:

சேலம் சக்திக் கொடி; சுப்ர பாலன்

(இக்கட்டுரையை எழுத இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை ஒன்றும், "உலக மகா சர்வாதிகாரிகள்" என்ற நூலும் உதவின. பிரசுரம்: மணிமேகலைப் பதிப்பகம்; சென்னை — 17. விலை ரூ. 41/-.)



போலி குற்றச்சாட்டுகள்
வி.பி.சிங்
மீது போலி
அஜய் சிங் வெளியிட்டுள்ள சொத்து விவரம்
இறங்கு கீழே!
பிரேமதாசா
வரதராஜப்பெருமாள்
ஜே.வி.பி
இறங்கு கீழே!
சமாதானம் பேசுங்கோ! நான் போறேன்!
எப்படியோ நெருப்பை அணைச்சுட்டேன்! என் சாமர்த்தியம்!
இவர் இல்லேன்னா ராஜீவ் நெருப்பை அணைச்சிருக்க மாட்டாரா?
எல்லாத்துக்கும் கருணாநிதி தான் காரணம்!



கல்கி

1989 அக்டோபர் 1
மலர் 48 இதழ் 9
சுக்ல புரட்டாசி 15



சாதி எனும் சதி! அது யார் செய்த சதி?

"ரோம் நகரம் பற்றி எரிந்த போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானாம்" என்பதாக ஆங்கிலத்தில் ஒரு வழக்கு உண்டு. மதுரை மாவட்டத்தில் இனக்கலவரங்கள் உச்சகட்டத்தை அடைந்திருந்த போது நமது தலைவர்கள் நடந்து கொண்ட விதம் மேற்படி வழக்கைப் பலருக்கு நினைவூட்டியிருந்தால் வியப்பதற்கில்லை. உதாரணத்துக்குக் கலைஞரையே எடுத்துக் கொள்வோம். நீரோ மன்னனைப் போல் அல்லாது அவரது மனம் இந்த இனக்கலவரம் கண்டு பதைக்கத்தான் செய்தது. வேதனையை வெளிப்படுத்தி அவர் பேசத்தான் செய்தார். ஆனால் கோவையில் பேசாமல் மதுரைக்கு ஓடோடிச் சென்று பேசியிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்! உத்தரவுகளைப் பிறப்பித்தார்; அமைச்சர்களை அனுப்பினார்; போலீஸை முடுக்கிவிட்டார்; முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பணத்தை வாரி வழங்கினார்; எல்லாம் சரிதான். ஆனால் மகனின் வாரிசு உரிமை நிர்ணயிக்கப்படுகிற இடத்தை விட்டு அசைய அவர் தயாராக இல்லை! ஸ்டாலினுக்குப் பக்கபலமாகக் கோவையிலேயே இருந்து விட்டார். அந்த அளவில் அரசியல் சுயநலமும் பந்தபாசமும் சதி செய்து அவரை இவ்விஷயத்தில் கவிழ்த்து விட்டன!

ஜெயலலிதாவை எடுத்துக் கொள்ளுங்கள்! "போடி என்னுடைய தொகுதி; அங்கு அமைதி நிலவக் குழு அமைக்கிறார்களாம்; என்னைக் கலந்தாலோசிக்கவில்லையே! என்ன அநியாயம்!" என்று குறைப்பட்டுக் கொண்டார். இவரை ஒதுக்கி விட்டது தான் முக்கியமாகப் போய் விட்டது! மக்களின் அவதி இரண்டாம் பட்சமாகிவிட்டது! தமது தொகுதி என்று கூறினாரேயொழிய, அவரும் அங்கே போகவில்லை. தம்மால் நியமிக்கப்பட்ட கமிட்டியை அனுப்பினார்!

வாழப்பாடியார், வழக்கம்போல் தி. மு. க. ஆட்சி மீது பாய்ந்தார். 'கலவரத்தை உடனே ஒடுக்காமல் வளர விட்டுவிட்ட, கையாலாகாத ஆட்சி' என்று சாடினார். கருணாநிதியின் சங்கடத்தில் குளிர்காயத் தமக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்.

ராஜீவ் காந்தி சும்மா இருப்பாரா? கலைஞர் ஆட்சி சரியில்லை என்று உணர்த்த வேண்டும்; தமிழக மக்களிடம் தமக்குத்தான் கரிசனம் என்று காட்டிக் கொள்ள வேண்டும். எனவே சிதம்பரத்தை ஸ்பெஷல் விமானத்தில் பறந்தோடி வரச் செய்தார். அவரும் கலவரம் அடங்கிய பிறகு வந்து சேர்ந்தார்! ஆக மொத்தம், அரசியல் ஆதாயத்துக்கு மக்களின் அவதியை அனைவரும் பயன்படுத்திக் கொண்டனர்!

ஒரு ஹரிஜனப் பெண் கொலை செய்யப்பட்டதையடுத்துக் கைதான ஒருவனை மனநோயாளி எனக் கருதிப் போலீஸார் விட்டுவிட, ஹரிஜனங்கள் விஷயத்தில் அரசு அசட்டையாக இருப்பதாக எண்ணிய ஹரிஜனத் தலைவர் ஜான் பாண்டியன், ஹரிஜன் அல்லாத இதர ஹிந்துப் பெண்களைப் பற்றி இழிவாகப் பேச, இனக்கலவரம் வெடித்தது. அப்புறம் அதைப் போலீஸ் அடக்கி, மீண்டும் வெடித்து, அடங்கி, இப்போது நீதி விசாரணையில் வந்து நின்றிருக்கிறது விஷயம். 'போலீஸ் காலதாமதமின்றி இயங்கியதா? அத்துமீறி நடந்து கொண்டதா? மீண்டும் இத்தகைய கலவரம் வெடிக்காதிருக்க என்ன யோசனை?' என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து நீதிபதி பாஸ்கரன் அறிக்கை சமர்ப்பிப்பார். அது சில காலம் பேசப்பட்டுப் பின்னர் எத்தனையோ பல விசாரணைக் கமிஷன் அறிக்கைகளைப் போல் தூசி போர்த்திக் கொண்டு தூங்கும்!

"சாதி என்பதே ஒரு சதிதான்!" என்று கருணாநிதி கூறினார். "மக்களை அழிக்க வந்த சதி, சாதியாக உருவெடுத்தது" என்றார். சரி, அந்தச் சதியைப் புரிந்தவன் யார்? சந்தேகமில்லாமல் அரசியல்வாதிதான்! "படிப்பு, மற்றும் வேலை வாய்ப்புக்கு மட்டுமே சாதி; மற்ற விஷயங்களில் சாதி வேற்றுமை வேண்டாம்" என்று இறைஞ்சுகிறார் கருணாநிதி. 'அவற்றில் மட்டும் எதற்குச் சாதி?' என்ற கேள்வி எழுவது ஒருபுறமிருக்க, 'மற்ற விஷயங்களில் சாதி இல்லாமலா இருக்கிறது?' என்ற கேள்வியும் எழுகிறது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒவ்வோர் அரசியல்வாதியும் நடத்துவது சாதி அரசியல்தானே? எதில் சாதியை அவன் புகுத்தாமல் இருந்திருக்கிறான்? கலைஞர் நெஞ்சில் கைவைத்துச் சொல்லட்டும்!

"சாம்பல் நிறமொரு குட்டி — கருஞ்சாந்து நிறமொரு குட்டி;
பாம்பு நிறமொரு குட்டி — வெள்ளைப் பாலின் நிறமொரு குட்டி.
எந்த நிறமிருந்தாலும் — அவை யாவும் ஒரே தரமன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும் — இஃதேற்றமென்றுஞ் சொல்லலாமோ?"

என்று பாடினான் பாரதி. இதனை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் தகுதியை நமது தலைவர்கள் இன்று இழந்து நிற்கும் பரிதாபம்தான் இனக்கலவரங்களுக்குக் காரணம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வாழப்பாடியார் போராட்டம் அறிவிக்கிறாரே?



* போராட்டம்!

* என். ஆர். சுப்பிரமணியம், பூனாம்பாளையம்.

? காங்கிரஸ் நடத்தவிருந்த காக்கை பறக்க விடும் திட்டம் குறித்து...?

! தேர்தலின் போது சேவல்களும் புறாக்களும் பட்டபாடு போதாதா? இப்போது காக்கைகளையும் இவர்கள் பங்குக்கு சித்திரவதை செய்ய வேணுமா? அந்தக் காக்கைகளை மேனகா காந்திதான் காப்பாற்ற வேண்டும்... 'கத்திப்பாரா சந்திப்பில் நேரு பறக்க விடுவது காக்கையல்ல' என்பதைக் காங்கிரஸ்காரர்களுக்கு அவர் எடுத்துச் சொல்லலாம்!

* ஆர். கோபாலன், ஸ்ரீரங்கம்.

? வாட்டர் கேட், போஃபர்ஸ் — ஒப்பிடுக.

! வாட்டர் கேட் விட்டுக்கு அனுப்பி விட்டது; அது மானஸ்தர்கள் வாழும் நாடு!

* நல்லாலம் காசிதாசன், கீழ்கொவளவேடு.

? விட்டுக் கொடுப்பது; விடாப்பிடியாக இருப்பது — எது சிறந்தது?

! சின்ன விஷயங்களில் விட்டுக் கொடுத்து அதன் மூலம் ஒரு பெரிய விஷயத்தை விடாப்பிடியாக இருந்து முடிப்பதுதான் சிறந்தது.

* ராஜேந்தர் பிரியன், திருச்சி.

? புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட எம். எல். ஏ. வீட்டை அரசு எடுத்துக் கொண்டு விட்டதே?

! 'சட்டங்களை இயற்றுகிறவர்களே நாம் தானே; அதனால் சட்டங்களை நாம் மீறலாம்' என்று அசட்டுத்தனமாக எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் எண்ணிவிடக் கூடாது என்று நினைவுபடுத்தும் நிகழ்ச்சி.



* மீண்டும் அ. தி. மு. க.!



* வாரிசு....

* இ. மனோஜ்குமார், ஈரோடு — 1.

? ஜெயவர்த்தனேயின் சகோதரியைத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்று விட்டனரே?

! அவரை மட்டுமா? காரண காரியமில்லாமல், பகுத்தறிவுக்குச் சற்றும் பொருந்தாமல் ஏராளமான கொலைகள் நடப்பது இலங்கையில் சகஜமாகி விட்டது. 'கொலை வெறி முற்றிய பைத்தியக்காரர்கள் மிகுந்த நாடாகிவிட்டதோ' என்றுஎண்ணத்தோன்றுகிறது. இந்தப் பயங்கரத் தொடர்கதையில் இப்போது ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது. அமைதிப்படை தன் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கிறது; படிப்படியாக வாபஸாகிறது. ஒரு சர்வ கட்சி அமைதிக் குழு உருவாகிறது. இதன் விளைவாக ஜே. வி. பி. இயக்கத்திலும் ஒரு மனமாற்றமும் சமாதானப் போக்கும் ஏற்பட்டு இந்த ரத்தக் காட்டேறித் தொடருக்கு ஒரு ''முற்றும்'' விழுந்தால் நல்லது. எல்லாத் தரப்பிலும் நல்லறிவு நிலவப் பிரார்த்திப்போம்.

* கே. ரமேஷ், சென்னை — 28.

? 'பரங்கிமலை — பழவந்தாங்கல் சுரங்கப் பாதைத் திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் கோட்டை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி சிறை செல்லவும் தயாராயிருக்கிறேன்' என்ற வைஜயந்தி மாலாவின் ஆவேசப் பேச்சு எதைக் காட்டுகிறது?

! முன்னாள் முதலமைச்சர், 'தபால்கார்டு — கவர் விலைகளைக் குறைப்பேன்' என்றது நினைவுக்கு வருகிறது.

* நிலா இளங்கோ, நிம்மேலி.

**? 'தலைவனை
கோட்டைக்கு அனுப்ப
தன் வாழ்க்கையைக்
கோட்டை விடும்
அப்பாவி'
— ''தொண்டன்'' என்ற தலைப்பில், கலைஞரின் பேத்தி எழுதிய இந்தப் புதுக் கவிதை பற்றித் தங்கள் கருத்து?**

! சிலேடைக்கு, அப்பால் மனிதாபிமானம்

தெரிகிறது; யதார்த்த நோக்கு புரிகிறது; அரசியல் வாழ்வின் ஓர் அவல நிலையைப் படம் பிடித்தும் காட்டுகிறது. நான் மட்டு மென்ன, கலைஞர் கூடப் பாராட்டுவார். அதுசரி, இது அவர் பேத்தி எழுதியது தானா? நிச்சயமா? முன்பு இவர் கரண்டைப் பற்றி எழுதிய கவிதையைக் கலைஞர் சிலா கிக்கப் போக, அதற்கு வேறு ஒருவர் 'காப்பிரைட்' உரிமை கொண்டாடியது சமீபத்திய நிகழ்ச்சியாயிற்றே!

*** என். சேதுராமன், குத்தாலம்.**

? கே. ஏ. கே. மீண்டும் அ. தி. மு. க. வில் சேர்ந்திருப்பது பற்றி?

! அதான், 'காலத்தின் அத்தியாவசியக் கட்டாயம்' என்பதைத் தமது இனிஷியல் களிலேயே அடக்கி விட்டாரே, பிற கென்ன!

*** கே. ஆர். அசோகன், கிட்டம்பட்டி.***

? கருணாநிதி தமது அரசியல் வாரிசாக ஸ்டாலினை உருவாக்கி வருகிறாரா?

! உருவாக்கிவிட்டார்என்பதற்குக்கோவை இளைஞர் அணி ஊர்வலமும், அப்போது மூத்ததலைவர்கள் நிகழ்த்தியசொற்பொழிவு களும் சான்று.

*** கே. வேல்சாமி, மதுரை.**

? பஞ்சாயத்ராஜ்புராணம்ஒழிந்துவிட்டது போலிருக்கிறதே?

! எங்கே ஒழிந்தது? இனிமேல்தான் ஆரம் பமே! இதுவரை முன்னுரைதான்! பஞ்சா யத்துத் தலைவர்களுக்குப் பிரதமர் கடிதங் கள் எழுத, அவை அவர்களிடம் போய்ச் சேராமல் தேவிலால் தடுப்பது, நேரடி முரட்டு மோதல்! நமது முதல்வர்,பிரதமரின் உரிமையில் தலையிடாமல் அனுமதித்து விட்டு, பிறகு தமது உரிமையையும் விட்டுக் கொடுக்காமல் அந்தக் கடிதத்தை விமர்சித் துக் கிழி கிழி என்று கிழித்தது சாமர்த்திய மான ஸைட் கிக், இனி அடுத்த ரவுண் டுக்குத் தயாராகுங்கள்!

*** இந்திரா கோபாலன், திருச்சி.**

? சிறுவர் சிறுமியர் ஒட்டகத்தின் கால் களில் கட்டப்பட்டு, ஜாக்கிகளாக ஒட்டகப் பந்தயத்தில் துபாயில் ஈடுபடுத்தப்பட்ட

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**
கே. ஆர். அசோகன்,
கிட்டம்பட்டி,
சென்னம்பட்டி (போஸ்ட்),
பெரியார் மா. வ.
— 638 504.

கொடுமையான செய்தி பற்றி...?

! சில அராபிய நாடுகளில் நாற்சந்தியில் நிற்க வைத்துச் சவுக்கடி, கை கால் வெட்டு தல் போன்ற கொடிய தண்டனைகள் இன்னும் உண்டு. அத்தகைய கொடிய தண் டனையை இந்த ஒட்டகப் பந்தயத்தை நடத்தி யவர்களுக்குக் கொடுத்தாலும் போதாது... ஆனால் யார் இந்தத் துபாய்க்காரர்களுக்கு அப்படித் தண்டனை அளிக்கப் போகி றார்கள்? ஏதோ, இந்த மட்டில் குழந்தை களை மீட்க முடிந்ததே என்று ஆறுதல் அடைய வேண்டியதுதான்!

*** ஜி. குசேலன், சங்கராபுரம்.**

? கிரிக்கெட் வீரர்கள் மீதான தடை நீக்கம் பற்றி?

! தடையை மட்டுமா நீக்கினார்கள்? 'உங்கள் சட்ட திட்டங்களை மறுபரிசீலனை செய்யுங்கள்' என்று கிரிக்கெட் கண்ட் ரோல் போர்டுக்கு அறிவுரையும் வழங்கியி ருக்கிறார்கள், நீதிபதிகள். நீதி தேவதைக்கு இன்னிங்ஸ் வெற்றி.

*** டி. சீனிவாசன், சென்னை.**

? குல்தீப்சிங் கமிஷன் பற்றி...?

! 'சில பேர ஊழல் நடந்திருந்தாலும் அதில் ஹெக்டே சம்பந்தப்படவில்லை' என்ற நீதிமன்றத் தீர்ப்பைக் கமிஷனும் ஆமோதித்துத் தன் முடிவை வெளியிட் டால், ஹெக்டேக்கு இரட்டை வெற்றி! க. சு. வுக்கு அரசியல் வாழ்வின் மரண அடி!


*** தமிழரசி தேவசேனாபதி, சிதம்பரம்.**

? 'அரிசிப் பற்றாக்குறை, சீனி விலை ஏற்றம், பாம் ஆயில் தட்டுப்பாடு இவற் றுக்குத் தமிழக அரசுதான் காரணம்' என்று கூறி வாழப்பாடியார் போராட்டம் அறி விக்கிறாரே?

! கோட்டா முறை, கொள்முதல் பங்கீடு, ஏற்றுமதி, இறக்குமதி ஏகபோக்கியம், விலை நிர்ணயம் முதலியனவெல்லாம் மத்திய அரசின் இரும்புப் பிடியில் சிக்கியுள் ளதைச் சாமானிய மக்கள் அறியவில்லை என்பதாக எண்ணிக் கொண்டு வாழப்பாடி யார் பேசுகிறார். வழுக்கி விழத்தான் போகி றார்!



* ஆர்ப்பாட்டம்!



* நீதிமன்றத் தீர்ப்பு...

நீங்கள் கேட்டவை — தராசு

"ஜால்ராக்களை ஒதுக்க வேண்டும்...

* அட்டைப்படம்தலைப்புக்கும் பொருத்தமாக இருந்தது. கற்பனை டெல்லியில் என்பதற்குப் பெரும்மைகளையும், கலைவடிவம் காஞ்சியில் என்பதற்குப் பெண்மணியையும் அழகாகச் சுட்டிக் காட்டியது. கல்கி, அட்டை டயிலேயே கவிதை சொல்லும் அளவுக்கு முன்னேறி விட்டதற்குப் பெருமைப்படுகிறேன்.

திருச்சி — 20, பாக்கியமுத்து.

* பட்டு மாளிகைக்குத் தில்லை வாடி வள்ளியம்மை என்று பெயர் வைத்தது ஏன் என்ற விவரம் எனக்கு கல்கியைப் படித்த பிறகுதான் தெரிந்தது. இதுநாள் வரை பட்டுப்புடைவை மாளிகை என்பதால், ஏதோ ஒரு பெண் தியாகியின் பெயரை வைத்திருக்கிறார்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்!

மங்கைநல்லூர், ஆர். செல்வ ராணி.

* இந்தவாரத் தலையங்கம் வாசகர்களுக்கு மட்டுமல்லாது, நமது தேசியத் தலைவர்களுக்கே அதிகம் தேவையானது. அவர்கள் அதை பிரேம் போட்டு மாட்டி, தினசரி படித்தாலாவது தங்கள் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவார்களோ என்னவோ! காலாகாலத்திற்கும் பொருத்தமான தலையங்கம். ஆயிரம் 'பேஷ்'கள் போட்டுப் பாராட்டலாம்.

திருநகர், எம்.பி. துரைஸ்வாமி.

* நமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சி பற்றியும், அதனை நிவர்த்தி செய்திட யோசனை சொல்லியும், ஆளும் கட்சியின் பொருளாதாரக் கொள்கையின் அறிவின்மையைச் சுட்டிக் காட்டியும் எழுதப்பட்டிருந்த தலையங்கம் சிந்தனைக்குரியது மட்டுமல்ல; செயலாக்கத்திற்குரியதாகும்.

பெங்களூர் — 21, ப. மூர்த்தி.

* வைரமுத்து எழுதிய 'கரை வேற முடியாத மீன்கள்' — கவிதை மிகவும் அருமை. அந்த மீன்களை அழுகுறப் படமாக்கியுள்ள யோகா அவர்களுக்கு கங்கிராட்ஸ்!

தர்மபுரி — 2, வித்யா.

* மாதந்தோறும் பத்தொன்பதுகாக மட்டும் வாங்கிக் கொண்டு பணிபுரியும் நாதஸ்வரக்காரரை விராலிமலை முருகன் தான் கண் திறந்து பார்க்க வேண்டும்!

சீர்காழி, எஸ். புவனா.

* ஏனோதானோவென்று நாலு ஜோக் போட்டு இந்த வாரத்தை ஓட்டிவிட்டீர்களே. ஜோக் பஞ்சமா?

வலங்கைமான், வலங்கை ஜி. ராஜசேகர்.

* வாவ்! 'இதயத்தைத் திருடாதே' படத்தில் வரும் மார்கெட், செட்டா? நம்ப முடியவில்லையே! தோட்டா தரணியா கொக்கா!

திருச்சி — 2, கி. ரமேஷ்.

* மேல்சபையை அமைக்கும் போது, அரசியல் ஆதாயம் கருதாமல், மக்களுக்குப் பயன் தரும் யோசனைகளைக் கூறக்கூடிய பல அறிஞர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று யோசனை கூறிய சி. சுப்ரமணியம் அவர்களின் கருத்து வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஜால்ரா போடும் சில அறிஞர்களையும் இனங்கண்டு ஒதுக்கி வைப்பது நாட்டிற்கு நல்லது என்பதையும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

வேலூர் — 13,
கே.ஆர். தேவேந்திரன்.

* கண் எதிரே அக்கிரமம் நடந்தாலும், மனிதாபிமானமுள்ள மனிதர்கள் கூடக் கண்டு கொள்ளாமல், போவதன் காரணத்தைச், 'சிவப்பு நாடா' மூலம் நிதர்சனமாய் உணர முடிந்தது. அதைக் கதை என்று கூறுவதை விட 'உண்மைச் சம்பவம்' எனலாம்.

குத்தாலம், எஸ். ராஜா.

* வாய்ப்பூட்டு, இங்கு எல்லோரும் சமம், சிவப்பு நாடா, சின்னப் பொன்னு ஆகிய நான்கு சிறுகதைகளுமே பொறுக்கி எடுக்கப்பட்ட ரத்தினங்கள்.

காட்டாங்குளத்தூர், எஸ். குரு மூர்த்தி.

* ஒரு விதவையின் மனத்தில் எழும் போராட்டங்களை மிக அழகாகச் சித்திரித்தது 'வாய்ப்பூட்டு' சிறுகதை.

ஒசூர், வி.ஆர். ராஜேஷ்.

* திறமைக்கு வேலை தரப்படாததின் பரிபூரண ஆதங்கம், வேதனை, கவலை, ஆத்திரம் அத்தனையின் மொத்தமான வெளிப்பாடாக இருந்தது இலால்குடி ரகுநாதனின் "இங்கு எல்லோரும் சமம்" சிறுகதை. சிந்திக்க வேண்டியவர்களைச் சரியான நேரத்தில் சரியான கோணத்தில் சிந்திக்க வைக்கும் சிறந்த கதை.

திருப்பரங்குன்றம்,
டி.கே. சுப்பிரமணியன்.

* இட ஒதுக்கீடு என்னும் ஒரு சமூக சீர்திருத்தப் பணியினை ஏன்தான் இன்னும் கொச்சைப் படுத்துகிறார்களோ! இங்கு எல்லோரும் சமம் என்ற சிறுகதையைத்தான் சொல்கிறேன். அமெரிக்காவில் கூட செவ்விந்தியர்களுக்காகத் தனி ஒதுக்கீடு உள்ளது. காலம் காலமாக அவர்கள் மீது ஏறி நின்று விட்டு இப்போது சற்றே வழி விடுவதில் என்ன குறை? ரிசர்வேஷன் என்பது ஒரு மனித நேயக் கொள்கை. தயவு செய்து அதைக் கொச்சைப் படுத்த வேண்டாம்.

தஞ்சாவூர், இரா. மேகநாதன்.

* கல்கி செப்டம்பர் 10 ஆம் தேதி இதழில் "முப்பது மாதத் தாமதம் 2½ கோடி நஷ்டம்" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையைப் பார்த்தோம்.

இந்த விஷயம் அரசின் ஆலோசனையுடன் ஆ டி ட் டி ன் (சி ஏ ஜி) பரிசீலனையில் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது பிரிண்டட் பாரா (Printed Para) ஆன பின்னரே பொது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே நீங்கள் இந்தத் தருணத்தில் இதைப் பிரசுரித்தது உசிதமல்ல.

தங்கள் கட்டுரையின் கடைசிப் பத்தியில் சொல்லப்பட்ட விஷயம் உண்மைக்குப் புறம்பானது. சோவியத் நிபுணர்களையும், அதிகாரிகளையும் வதந்திகளின் அடிப்படையில் இந்த விஷயத்தில் சம்பந்தப்படுத்தியிருப்பது வருந்தத்தக்கது. மேலும் டாங்க் உற்பத்திக்காகச் சிப்பந்திகளை டிரான்ஸ்பர் செய்வது வேலைப் பளுவையும் வேலைத் தேவைகளையும் பொறுத்தே நிர்மானிக்கப்படுகிறது. இந்த விஷயத்தில் முடிவெடுக்கும் தகுதி அரசுக்கே உண்டு.

ஆவடி, சென்னை — 54, கோ. சுப்பிரமணியன், கனரக வாகனங்கள் தொழிலகம்.


கல்கி
29-10-89
தீபாவளிச்
சிறப்பிதழில்
பட்டுக்கோட்டை
பிரபாகர்
எழுதும்
வல்லமை
தாராயோ..?
புதிய தொடர்கதை ஆரம்பம்



தாகக் கனவு
தூக்கத்தில் நடப்பவருக்கும் லிம்கா
விழித்துக் கொண்டே தூங்குபவருக்கும் லிம்கா
தூக்கத்திலே நடந்து நடந்து. அல்லது
பகற்கனவு கண்டு களைத்து நீங்கள் தாகத்தால்
தவிக்கும் பொழுது... ஐஸோடானிக் ஸால்ட்
அடங்கிய கிருமிகள் அற்ற லிம்கா அருந்தி
தாகம் தணிப்பீர்.
Limca®
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY
RADEUS/PE/L/4-89-TAM

இரண்டாவது சூரியன்

9

கண்ணயரும் போது, விடிகாலைக் குயிலின் குரல் கேட்டது. தூங்கு தூங்கு என்று தன்னை நிர்பந்தப்படுத்திக் கொண்டு பானுமதி கண் மூடினாள். கண் விழிக்கும் போது, இமைகள் திறக்க முடியாது ஒட்டின. உள்ளே உஷ்ணம் தாக்கிற்று. இமை விளிம்புகளில் எரிச்சல் படர்ந்தது.

சரக் சரக்கென்று சிமெண்டுத் தரையில் துடைப்பம் தேயும் ஓசை கேட்டது. குழந்தைகள் திசை மாறிப் படுத்துக் கிடந்தார்கள்.

எழுந்து உட்கார்ந்தாள். தூக்கம் கலையவில்லை. இன்னும் கொஞ்சம் இட என்று மனசு கெஞ்சிற்று. எழுந்து தள்ளாடி சுவர் பிடித்து நின்றாள்.

''பக்கெட்டு எங்கம்மா இருக்கு...'' கைகளைத் தட்டிக் கொண்டு நாகம்மா உள்ளே வந்தாள்.

''என்ன பண்றே?''

''வாசப் பெருக்கத்தாலயா...?''

''உள்ளே சமையல் அறை தாண்டிப் போ.''

''போலாமா?''

அவள் சமையலறைக்குள் நுழைந்து, பின் பக்கம் போனாள். வாளி நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள்.

''அப்ப இங்கியே இருக்கியா?''

''அது அப்புறம் பேசிக்கலாம். கோல மாவு எங்கே?''

''வராந்தா படிக்கிட்ட இருக்கும். கூட அரிசி போடணும், நீ இருக்கறதா இருந்தா!''

''போடு.''

''அப்ப இருக்கியா?''

தட்டென்று வாளி கீழே வைக்கப்பட்டது. ''இருக்கறமுட்டும் இருக்கேன். உன்னைப் பார்த்து நானோ என்னையப் பார்த்து நீயோ இல்லை. தாக்குப்பிடிப்பமான்னு பார்ப்பம்.''

''ஏன் அப்படி நினைக்கிற நாகம்மா?''

''எனக்கு எங்கியும் மாட்டறதுக்கு இஷ்டம் இல்லம்மா. என்னிக்கு அந்தாளை விட்டுட்டுக் கை உதறி வந்துட்டேனோ, அப்பமே உள்ளே இனி யார்கிட்டயும் மாட்டக் கூடாதுன்னு வந்துடுச்சு. அது ஆம்பளையா இருந்தாலும் சரி, பொம்பளையா இருந்தாலும் சரி.''

''நானும் உம் புருஷனும் ஒண்ணா?''

''இல்லை. வெவ்வேறதான். புருஷனை உதறிட்டவளுக்கு வேற எங்கயும் புடிப்பு இருக்காது. இஷ்டப்பட்ட போது வேலை செஞ்சு, இஷ்டப்பட்ட போது சோறு தின்னு... யாரும் தலை மேல இல்லைன்னு நிக்கணும். கொஞ்ச நாளாவது நிக்கணும்.''

''உன் தலை மேல யார் நிக்கறாங்க இப்ப?''

''யாரும் இல்லை. கொஞ்சம் கூட ஒட்டல் இல்லாம யார் கையையும் கோத்துக்காம போவணும். இந்த நாகம்மா இல்லைன்னா ஆயிரம் நாகம்மா. என்னிய நம்பாத!''

''இன்னிக்குச் சோறு எங்க தின்னப் போற?''

''உன் கைலதான்.''

''தாயே விடிஞ்சதும் அதைச் சொல்லிடு முதல்ல....''

''சரி சொல்லிடறேன். சொல்றது என்னா வாசக் கூட்டிக் கோலம் போட்டா, நீ எனக்குன்னு கூட அரிசி போடு.''

''ஒரு மாதிரியான ஆள்தான் நீ.''

''இல்லம்மா. நாய் மாதிரி மனுஷாளை சுத்திச் சுத்தி வந்தவதான் நான். வுட்டுப் போச்சு. உனக்குத் தூக்கம் கலையலியா?''

தெரு இறங்கி நீர் தெளித்தாள். கோலமிட்டாள். யாருடனாவது ஒட்டிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. நான் இருக்கேன் உனக்கு என்று யாராவது வந்து அணைத்துக் கொள்ள மாட்டார்களா என்று தோன்றியது. சிரிப்பும் பாட்டுமாய் நட்பு தேவைப்பட்டது. தோழி அவசியமாய் இருந்தது. மனசு பதின்மூன்று வயசுப் பெண்ணாய் மலங்க மலங்க விழித்தது.

தூக்கம் கலையத்தான் இல்லை.

இழையத் தலைவாரிப் பின்னிச் சிடுக்கெடுத்து, சோப்பும், டவலும் குளியலறைக்குக் கொண்டு வந்து, முதுகுப் பதமாய் வெந்நீர் ஊற்றிச் சோப்பு நுரைக்க விரலால் சொறிந்து, முடமுடத்த பாவாடை கொண்டு வந்து தந்து, உடுத்தின பிறகு உட்கார வைத்துச் சோறு போட்டு, தட்டிலேயே கையலம்பி, ''அம்மா நான் வரேன்...'' உடம்பு நலுங்காமல் தெருவோடு நடந்து பள்ளிக்குப் போகிற பதினாறு வயசுச் சுகம். சிஸ்ருஷை மட்டுமில்லை. ஆள் காபந்துக்கு இருக்கிற சுகம் மறுபடி தேவைப்பட்டது.

நாகம்மா இதற்கு நேரிடையாய் இருக்கிறாள். நம்மால அதெல்லாம் முடியாது என்று சொல்கிறாள். ஒருத்தியும் வேணாம் போங்கடி என்கிற வெறுப்பில் இருக்கிறாள். நான் ஒட்டிக் கொண்டு வெட்டி விழுந்த மரம். அது வேலிக்காத்தான். ஆற்றோரத்து வேலிக்காத்தான். அதுவே வளர்ந்து அதுவே வாழ்க்கைப்பட்டு நின்றிருக்கிறது. மாடு கட்டின செடி மாதிரி வாழ்ந்திருக்

பாலகுமாரன்



"என்னங்க! மாப்பிள்ளைப் பையன் பெண்ணோட அஞ்சு நிமிஷம் தனியா..."

"பேசணும்ங்கறாரா?"

"இல்லே. ஒரு டூயட் பாடணு மாம்!"

— ஞா. ஞானமுத்து.

கிறது. மாடு அறுத்துக் கொண்டு போக நிம்மதி என்று நாலாபக்கமும் படர்ந்து முரடாய் நிற்கிறாள்.

எனக்கேன் இந்த முரட்டுத்தனம் வரவில்லை? எனக்கேன் மனிதர்கள் மீது வெறுப்பு வரவில்லை. கூடவே வேலை செய்கிற டீச்சர் தமிழ்ப் பண்டிதை. சின்ன வேதனைகளுக்குக் கூடச் செத்து ஒழிஞ்சுட றேன் என்பாள். இதுவரை சாகவில்லை. சாவுதான் விடுதலை என்கிற தன்மையும் போகவில்லை.

எனக்கு ஒருமுறை கூட இந்த எண்ணம் வரவில்லை. யாருமே வேண்டாம் என்கிற பிரிதலும் இல்லை. அவன் இல்லையென்றால் என்ன, அம்மா வேண்டாம் என்று சொல்லி விட்டால் என்ன.. வேறு ஆளா இல்லை. இங்கே மனிதர்களுக்காக பஞ்சம்!

எல்லா மனிதர்களுமா கெட்டவர்கள்? நிறையப் பேரிடம் கொஞ்சமாவது நல்லதனம் இருக்கிறது. முற்றிலும் கெட்டழிந்து போனவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். நெல் முனையளவு கூட நல்லது இல்லாதவர்களை நூறு நாத்தம்பதுக்குள் அடக்கி விடலாம். நமக்கு உதவவில்லை என்பதாலேயே நல்லவர்கள் இல்லையென்று சொல்லி விட முடியுமா? பிறருக்கு உதவி செய்யா விட்டாலும் கெடுதல் செய்யாதவர்களும் உண்டு. இன்னும் மனிதர்களில் கெடுதல் செய்ய அஞ்சுபவர்களே அதிகம். தெரிந்து திட்டமிட்டுக் கெடுதல் செய்வதே வாழ்க்கை என்று கொண்டவர்கள் நிச்சயம் குறைவு.

காப்பி போட்டுக் குடித்து விட்டு, ஒரு தம்ளர் நாகம்மாவுக்கு எடுத்து வைத்தாள். அவளுக்குக் குரல் கொடுத்து விட்டுக் குழந்தைகளை எழுப்பினாள். சின்னதுக்குப் பல் தேய்த்து முகம் கழுவினாள். நாகம்மா பற்றுப் பாத்திரம் தேய்க்க உட்கார, குழந்தைகளுக்குத் தலைவாரினாள். பள்ளிக்கூடத்துக்குத் தயார் செய்தாள். கடந்த மூன்று நாட்களுக்கு லீவு எழுதித் தனித் தனியே கொடுத்தாள். ப்ரெட் வதக்கி, ஊட்டி, சைக்கிள் ரிக்ஷா பிடித்துப் பள்ளிக்கூட வாசலில் இறக்கினாள். முத்தமிட்டு உள்ளே அனுப்பி, அதே ரிக்ஷாவில் திரும்பி வந்தாள்.

வீடுபெருக்கப்பட்டுப்பாத்திரங்கள்மூலையில் கவிழ்க்கப்பட்டிருந்தன. பின்பக்கம் துணி துவைக்கும் சப்தம் கேட்டது.

"நீ குளிச்சுடு... அதையும் துவைச்சுப் போட்டுடறேன்."

"நீ அதை முடிச்சுக்கிட்டு வா. அப்பத் தான் நான் உள்ள போக முடியும்."

சமையல் துவங்கினாள். கடைக்குப் போயே ஆக வேண்டும். லிஸ்ட் தயார் செய்தாள்.

இடுப்புப் புடைவையைத் தூக்கிச் செருகி, நெஞ்சு அலைய, நாகம்மா சற்றுக் கலைந்தபடி துணி பக்கெட்டுடன் வெளியே வந்தாள். வயசே மதிக்க முடியாதபடி ஒரு உடம்பு. கறுப்புத் தோல். முன்பக்கம் மட்டும் கொஞ்சம் செம்பட்டை காட்டும் தலைமுடி. பழுப்புக் கண்மணிகள். உடம்பில் ஒரு திமிசுத்தனம். செய்கையில் ஒரு பரபரப்பு. பேச்சில் ஒரு அதட்டல். கண்ணில் சற்றுக் கோபமும் அலட்சியமும் கலந்திருந்தன. கஷ்டம்தான். இவளை மடக்கி, மயக்கி மகிழ வைப்பது எந்தப் புருஷனுக்கும் சிரமம்தான்.

'வா' என்று இறுக்கிக் கொள்ளும் புருஷனைச் 'சர்தான் வுடுறா' என்று இவளால் உலுக்கித் தள்ளி விட முடியும். தலைமுடி பிடித்து இழுக்கிற போது நெரச்சென்று நடு மார்பில் குத்தி விட முடியும். கால் வீசி நடந்தால் இரண்டு நிமிடத்தில் இந்தத் தெரு முனையைக் கடந்து விட முடியும். கட்டியணைத்து ஒரு கல்லூரல் தூக்க முடியும். ஒருவேளை இந்த உறுதிதான் உடம்பு பலம் தான் பேச்சிலும் வெளிப்படுகிறதோ!

நான் மட்டும் ஏன் தசைக்கோளமாய் இருக்கிறேன். எங்கு தொட்டாலும் மென்மையாய் மெத்து மெத்தென்று ஸ்பாஞ்ச் பொம்மையாய் வளர்ந்து விட்டேன். உழைப்பே இல்லை. கடின உழைப்பே கிடையாது. பேச்சிலும் இதுவே வெளிப்படுகிறது. யாரும் அதட்டினால் பயத்தில் நாக்கு ஒட்டிக் கொள்கிறது. புரள மறுக்கிறது.

"என்னம்மா அப்படி பார்க்கறே?" உதறி உதறிக் குழந்தைகள் சட்டைகளை வராந்தாக் கொடியில் காயப்போட்டபடி கேட்டாள்.

"உனக்குக் குழந்தைகள் இல்லையா?"

"இருந்துச்சே. எட்டு மாசத்துல வவுத்துப் போக்குல போயிடுச்சு."

"அப்புறம்?"

"ஒண்ணும் தக்கலை."

"டாக்டர்கிட்டப் போனியா?"

"தெரிஞ்ச டாக்டரம்மாக்கிட்டக் கேட்டேன். எல்லாம் பார்த்துட்டு உன்கிட்ட ஒண்ணும் குறையில்லை. புருஷனைக் கூட்

டிட்டு வான்னாங்க. அந்தாளைக் கூப்பிட முடியுமா.. ஏண்டி அப்ப முதல்ல எவனுக்குப் பெத்தேன்னு கேக்க மாட்டானா... சரி போன்னு வுட்டுட்டேன்.''

''ஆசையில்லையா...?''

''நம்ம பாடே அந்தரத்துல இருக்கும் போது. ஒன்னைப் பெத்து எவகிட்ட விட்டுட்டுப் பூ விக்கப் போக முடியும்? வேணாம் போன்னு வச்சுட்டேன். குளிச்சுட்டு வா. நானும் ஒரு சொம்பு ஊத்திக்கிட்டு வந்துடறேன்.''

பானுமதி குளித்து விட்டுப் பாவாடை சுற்றி, உள்ளே வந்து பீரோவைத் திறந்தாள். கதவைச் சாத்தச் சொல்லி உடைகள் அணிந்து கொண்டாள்.

''வயிறு தள்ளிப் போச்சே. இறுக்கிக் கட்டலையா?''

''பெல்ட்டெல்லாம் போட்டேன். சரியா கலை. குனிஞ்சு நிமிர்ந்து எக்ஸர்ஸைஸ் பண்ணாப் போயிடும். யார் பண்றது? இந்தா இதைக் கட்டிக்க...'' பழைய ஷிபான் எடுத்துப் போட்டாள். ப்ரவுன் கலரில் வெள்ளைப் பிரிண்ட் பூக்கள் நிறைந்த புடைவை அது. வெள்ளை வெளிறத் துவங்கியிருந்தது. குளித்துத் தலை துவட்டி அந்தப் புடைவையோடு அவள் வாசலில் நின்ற போது இன்னும் வியப்பாய் இருந்தது.

''ப்ரெட் சாப்பிடறியா?''

''வேணாம்மா. சோறு இல்லியா நேத்தியது?''

''தண்ணி ஊத்தினதா?''

''கொடு. அதான் சரிப்படும். இது சாப்பிட்டாச் சாப்பிட்ட மாதிரியே இருக்காது.''

கதவு பூட்டிக் கொண்டு வெளியே கிளம்பினார்கள்.

''இந்தப் பேட்டைக்கெல்லாம் பூவிக்க வருவியா?''



''இல்லை. என்னுது சிந்தாதிரிப்பேட்டை, மவுண்ட்ரோட்டோட சரி.''

ரேஷனில் சர்க்கரை மட்டும் வாங்கிக் கொண்டாள். மற்றதுக்கு மளிகைக் கடைக்குப் போனாள். விளக்கெடுத்து விலைப் பட்டியல் போட்டதும் காசு கொடுத்தாள். விலாசம் எழுதிக் கொடுத்து விட்டு ஜெனரல் ஸ்டோர்ஸ் வந்தாள்.

''உனக்கென்ன வேணும் வாங்கிக்க!''

''ஐய... எனக்கெதுக்கும்மா இதெல்லாம் தலைக்குச் சீப்பு மட்டும் வாங்கிக் குடு.''

''பவுடர் போட மாட்டியா?''

''எப்பனா சினிமா போற போது.ரப்பர் வளையல் வாங்கிக்கட்டா?''

ஆறு ஆறு எடுத்துக் கொடுத்தாள். கண்ணாடிக் கல் பதித்த காதுத் தோடு வாங்கினாள். ''வேற ஒண்ணுமே தேவையில்லையா?''

''இதுக்கெல்லாம் ஆசைப்பட்ட காலம் போயிடுச்சும்மா எனக்கு. மூளியா இல்லாம ஏதோ போட்டுக்கணுமே தவிர, என்ன போட்டு என்ன புண்ணியம்? வெயில் ஏறுது. வா.''

குழந்தைகளுக்கும் தின்பண்டங்கள் வாங்கி ரிக்ஷாக்காரனிடம் பேரம் பேசினாள்.

''இங்க இருக்கிறது வீடு. எதுக்கும்மா ரிக்ஷா?''

''என்னால நடக்க முடியாது நாகம்மா.''

ஏறி நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள். சைக்கிள் ரிக்ஷா ஓர் அலையலுடன் போயிற்று. தேவையில்லாமல் வேகம் காட்டிற்று.

''மெல்லப் போப்பா'' என்று இரண்டு முறை கூவியும் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

''தே சொல்றாங்கல்ல. நொடிப்புல தடால் தடால்னு வுட்டுக்கினு போறியே'' — நாகம்மா அதட்ட அவன் திரும்பினான். பதினைஞ்சு ரூபா ஸ்டாண்டுல கட்டணும். பூவாட்டம் போய்க்னு இருந்தா என்னிக்குச் சம்பாதிக்கிறது?''

''நீ சம்பாதிக்கிறதுக்கு எங்களைக் கவுத்துடுவ போலருக்கே. மொள்ளப் போய்யா.''

கொஞ்சம் நிதானப்பட்டது.

வீடு வரக் குலுங்கி நின்றது.

''நீ சின்னப் பையன் பொண்டாட்டி தான...'' ரிக்ஷாக்காரன் இறங்கியதும் கேட்டான்.''

''ஆமா ஏன்?''

''இங்க வேலை செய்யிறியா?''

''உனக்கென்ன அதப்பத்தி. நீ யாரு?''

''நான் உங்க வீட்டுப் பக்கமும் ஓட்டிக்கிட்டிருந்தேன். அவன் மேல கேஸ் போட்டிருக்கியாமே.''

''யோவ், உன் வேலையப் பாத்துக்கினு போய்யா.''

''சும்மா கேட்டேம்மா. கோச்சுக்கிறியே. இங்கதான் வேலையா?''

''எங்கயோ ஒரு வேலை. போய்ச் சின்னப் பையன்கிட்ட சொல்லு,நாகம்மா செத்துடலைன்னு.''

''அட.... எனக்கெதுக்கும்மா போய்ச் சொல்ற வேலையெல்லாம். தெரிஞ்ச ஆளாச்சேன்னு கேட்டேன்.''

''ஆமா... தெரிஞ்சு போச்சு இவருக்கு எல்லாம். சவாரி இறக்ினமா.. துட்டு வாங்கிக்கினு போவியா?'' ரேஷன் சர்க்கரையை இறுக்கிக் கொண்டு கதவு திறந்தாள்.

''பூக்கட்டி எடுத்துப் போறப்பவே சொன்னாங்க. என்னாடி இது பொழப்பு நாலு கண்ணுப் படற பொழப்புன்னு. பாரேன், பேரு கேட்கறான். புருஷன் பேரு சொல்றான்... இதுக்குத்தான் ஒரு இடத்துல நிக்கக் கூடாதுன்னுறது. ஊர் விட்டு ஊர் போனாக் கூட மோப்பம் பிடிச்சுட்டு வந்துருவானுங்க.''

''வரட்டுமே.''

''உனக்குத்தாம்மா தொந்தரவு. இங்க வந்து கத்தினா அசிங்கமில்ல.''

''என்ன அசிங்கம்... ஆயிரம் அசிங்கம் பட்டாச்சு. என்னையும் எவனாவது இது மாதிரி கேட்பான். தலைகுனிஞ்சுட்டா நிக்க முடியும்?''

தோட்டக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

''யார் அது?''

''நான் கார்மேகம். தமிழ் ஐயாவின் மாணவன்.''

''அவர் இங்கில்லை. கல்லூரிக்குப் போய்ப் பேசுங்கள்.''

''ஐயாவின் அணிந்துரை என் கவிதைத் தொகுப்புக்கு வேண்டும். அவர் மனைவி தானே நீங்கள். அவர் இங்கிருப்பதாகச் சொன்னார்கள்.''

''இங்க இல்லைங்க. யார் சொன்னது?''

''மளிகைக் கடையில் இந்த விலாசம் கொடுத்தார்கள்'' — சிறிய துண்டுக் காகிதம் நீட்டினான். பானுமதிக்குக் கோபம் வந்தது.

''விலாசம்சரி. ஆனால் அவர் இங்கில்லை. வேறு வீடு. வேறு விலாசம். அதைக் கல்லூரியிலேயே வாங்கிக்கங்க.''

''உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது.''

''நீங்கள் அவர் மனைவிதானே?''

''நோ...'' கள்ளென்று பானுமதி சீறினாள். அவன் பின்னடைந்தான். குழம்பினான். கதவு மூடினான். திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வெளியேறினான்.

உலகம் சிறியது. இதனால்தான் உறவுகளும் நெருங்கி மூச்சு முட்டுகின்றன. விடாமல் துரத்துகின்றன.

பானுமதி அயர்ச்சியுடன் சோபாவில் உட்கார்ந்தாள்.

(தொடரும்)


கவிஞரின்
நெஞ்சக் கற்பனை
காகித மீது;
டிசைன் கலைஞரின்
நெசவுக கற்பனை
நிகரிலா நேர்த்திப்
பருத்தித்
துணிமீது.
பருத்தி
பேண்ட்டீஸ்
மாதர் ஜட்டி
படைப்பு:விஐபி
VIP
feelings
Avenues HH B

சட்டசபைக் கூட்டத் தொடர் முடி வதற்கு முதல் நாள்.

"தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள சிவன் கோயில்கள் எத்தனை? பெருமாள் கோவில்கள் எத்தனை?" என்று கூட்டத் தொடர் ஆரம்பத்திலேயே நான் கேட்ட கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை..." என்று எம்.எல்.ஏ. ஏகாம்பரம் சொல்ல, சபாநாயகர் அமைச்சரை நோக்க, அமைச்சர் எழுந்து, "மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, நாளைக் காலை சபையில் விரிவான பதில் அளிக்கப்படும்"

சில சராசரிகள் 'அலை'யேறுகின்றன...

என்று தெரிவித்தார். பின்னர் காரியாலயம் வந்த அமைச்சர் தமது செயலாளரை விரட்டினார். அப்பொழுது மாலை நான்கு மணி.

உடனே அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கும் எஸ்.டி.டி.யும் தந்திகளும் பறந்தன. "இரவு பத்து மணிக்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை சிவன் கோயில்கள், எத்தனை பெருமாள் கோயில்கள் என்ற விவரம் அளிக்கப்பட வேண்டும். இல்லையெனில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது மிகவும் அவசரம்."

இரவு எட்டு மணி.

அந்தத் தாலுகா அலுவலகத்தில் இன்னும் ஒருசிலர் அமர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். காலை பத்து மணிக்கு ஒரு தற்கொலை கேஸ், விவகாரமாகி விடவே புதைத்த பிணத்தைத் தோண்டியெடுத்து விசாரணை செய்யப் போன தாசில்தார், விசாரணை முடிந்து அலுப்போடு ஜீப்பில் வந்து இறங்கினார்.

காலையிலேயே கம்யூனிட்டி சர்டிபிகேட் வாங்குவதற்காக வந்திருந்த பொது மக்



களில் சிலர் உடன் தாசில்தாரைப் பின் தொடர்ந்து அலுவலகத்திற்குள் நுழைந்த னர்.

சேம்பரில் நுழைந்து நாற்காலியில் சோர் வாய் அமர்ந்த தாசில்தாரிடம் அந்தத் தந்தி நீட்டப்பட்டது.

''எக்ஸ்பீடைட் டிடெய்ல்ஸ் ஆஃப் சிவன் அண்ட் பெருமாள் டெம்ப்ள்ஸ் இன் யுவர் டாலுக் பிபோர் டென் பி.எம். — அசெம்ப்ளி குவெஸ்சன் — மேட்டர் அர் ஜண்ட் — கலெக்டர்.''

உடனே தாசில்தார் சுறுசுறுப்பானார்.

''ஏ! மணி! ஹெச்க்யூடிடி எங்கப்பா?''

''இப்பத்தான் சார் போறார்...''

''உடனே அவரை இங்க வரச் சொல்லு! அப்படியே போய் ஏ த்ரீ வீட்டிலிருப்பார். அவரையும் அழைச்சுக்கிட்டு வா,'' என்று உத்தரவிட்டார்.

அதற்குள் பொது மக்களில் சிலர் சேம் பரில் எட்டிப் பார்க்க, ''என்ன? சர்டிபி கேட்டா? இப்ப முடியாது? நாளைக் காலை யில வாங்க!'' என்று தாசில்தார் அவர் களை விரட்டியடித்தார்.

கொ.வை. அரங்கநாதன்

காலையிலிருந்து தாலுகா அலுவலகத் தில் காத்துக் கிடந்தவர்கள், முணுமுணுத்த படி வெளியேறினர்.

காலையில் எட்டு மணிக்கு அலுவல கத்திற்கு வந்து விட்டு, இரவு எட்டு மணிக்கு மேல் கிளம்பி, 'குழந்தைக்கு மருந்து வாங் கிட்டு வரச் சொன்னாளே... சுத்தமா மறந்து போச்சே' என்ற நினைவோடு போய்க் கொண்டிருந்த ஹெச்க்யூ டி.டி.யை டபேதார் வழிமறித்தார்.

''சார்! கலெக்ட்ரேட்டிலிருந்து ஏதோ தந்தியாம்! உங்களை உடனே வரச் சொன் னார் தாசில்தார்.''

''சே! என்ன உத்தியோகம்!'' என்று அலுத்துக் கொண்டே அலுவலகத்தை நோக் கித் திரும்பினார் ஹெச்க்யூ டிடி.

''என்ன சார்? நீங்க மட்டும் சொல்லாம கிளம்பிட்டீங்க! கலெக்ட்ரேட்டிலிருந்து அவசரமாத் தந்தி வந்திருக்கு. உடனே எல்லா ரெவின்யூ இன்ஸ்பெக்டர் களையும் காண்டாக்ட் பண்ணி ரிப்போர்ட் கேளுங்க...'' என்று தாசில்தார் உத்தரவிடவும், ஃபோனை நோக்கி நடந்தார் ஹெச். க்யூ. டிடி.

அப்பொழுது பாதி சினிமா பார்த்துக் கொண்டிருந்த பொழுது



விஷயம் தெரிவிக்கப்பட்டு ஏ த்ரீ எழுத்த ரும் அலுவலகத்திற்கு ஓடி வந்தார்.

''சார் ஃபோன் மட்டும் செஞ்சாப் போதாது. ஒரு டெலகிராமும் கொடுத்துட லாம்.''

''டெலகிராம் இராத்திரிக்குள் போய்ச் சேராது!''

''பரவாயில்லை சார். இருந்தாலும் நாம் மெஸேஜ் கொடுத்ததற்கு ஒரு ரெகார்டு வேணுமில்ல...'' என்று ஏ த்ரீ சொல்லவும் நான்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கும் தந்திகள் பறந்தன.

மெஸேஜ் கிடைத்ததும் 'மொபெட்' வைத்திருந்த மூன்று ரெவின்யூ இன்ஸ்பெக் டர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட கிராமங் களில் சென்று கோவில்களின் எண்ணிக் கையைச் சேகரிக்கப் பறந்தனர்.

நான்காவது ரெவின்யூ இன்ஸ்பெக்ட ருக்கு வாகன வசதி எதுவுமில்லை. அவரு டைய ஆளுகைக்குட்பட்ட கிராமங்களோ மிகவும் பரந்து கிடந்தது. வி.ஏ.ஓ.க்களுடன் தொடர்பு கொள்ளலாமென்றால் கிராமங் களில் ஃபோன் வசதியும் இல்லை. என்ன செய்வதென்று யோசனை செய்த அந்த ஆர்.ஐ.க்குத் திடீரென்று அந்த ஐடியா பளிச்சிட்டது. உடனே லோக்கல் வி.ஏ.ஓ.வை அழைத்து வர ஆளனுப்பினார். அரை மணி நேரத்தில் ஓடி வந்த வி.ஏ.ஓ.விடம், ''உங்கள் கிராமத்தில் எத்தனை சிவன் கோவில்கள்? எத்தனை பெருமாள் கோவில் கள்?'' என்று கேட்டார்.

வி.ஏ.ஓ. ஒரு நிமிடம் குழம்பிப் போய் விட்டார். பின்பு யோசனை செய்து, ''மூன்று சிவன் கோயில்கள், இரண்டு பெரு மாள் கோவில்கள்'' என்றார்.

''அவ்வளவுதான்! அது போதும். நம் முடைய ஃபிர்க்காவுல மொத்தம் இருபது கிராமங்கள் இருக்கு. இதே அவெரேஜ்ல அறுபது சிவன் கோவில், நாற்பது பெரு மாள் கோவில்ன்னு ஃபிகர் கொடுத்துட வேண்டியதுதான்'' என்றவர், ஃபோன் செய்யப் பக்கத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷ னுக்கு நடக்க ஆரம்பித்தார்.

இரவு மணி மூன்றாகி விட்டது.

''என்ன ஹெச்க்யூ டிடி சார்? இதோட அஞ்சு தடவை ஃபோன் வந்துடுச்சு. இன் னும் ஒரு மணி நேரத்துல ஃபிகர் வேணும்னு சொல்றாங்க...'' என்று தாசில்தார் கூறவும், ''இன்னும் எந்த ஆர்.ஐ.கிட்டேயிருந்தும் ரிப்போர்ட் வரலையே!'' என்று ஹெச்.க்யூ. டிடி கவலைப்படவும், டெலிபோன் மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது.

''சார்! ஒரு ஆர்.ஐ.கிட்டே இருந்து மட்டும்தான் சார் ஃபிகர் கெடைச்சிருக்கு. மற்ற ஆர்.ஐ.க்களிடமிருந்து காலையில தான் கெடைக்கும்னு நினைக்கிறேன். அத னால இந்த அவரேஜ்லேயே ஃபிகர் அனுப் பிடலாமா?'' என்றார்.

அதே சமயம், ''சார்! மறுபடியும் கலெக்ட்ரேட்டிலிருந்து ஃபோன்...'' என்று ஏ த்ரீ, தாசில்தாரிடம் ஃபோனை நீட்டினார்.

''என்ன சார்! ஃபிகர்தானே... இதோ ரெடியாயிடுச்சு. இதோ தர்றேன்...'' என்று சொல்லி விட்டு, ஃபோனை ஒரு கையால் மூடிக் கொண்டு, ஹெச்க்யூ டிடியைப் பார்த்து,

''அதை அப்படியே நாலால பெருக்கிச் சொல்லுங்க.'' என்றார்.

ஹெச்க்யூ டிடி பேப்பரில் எழுதித் தாசில் தாரிடம் நீட்டவும், ''சார்! எங்க தாலுகாவுல மொத்தம் 240 சிவன் கோவில்களும், 160 பெருமாள் கோவில்களும் உள்ளன.''

''வெரிகுட்! நீங்க எதற்கும் காலையில வரைக்கும் ஆபீஸ்லேயே இருங்க. வேறு ஏதாவது கிளாரிஃபிகேஷன் வேணும்னா ஃபோன் பண்றேன்.''

அலுத்துப் போன தாசில்தார், நாற்காலி யில் போய் விழுந்தார்.

ஒரு தாசில்தாரிடமிருந்து கிடைத்த தகவலைச் சராசரியாக எடுத்துக் கொண்டு பெருக்கல் கணக்குப் போட்டு கலெக்டர் சென்னைக்கு ஃபோன் செய்ய, இவ்வாறே மற்ற கலெக்டர்களும் ஃபோன் பண்ண —

அடுத்த நாள் சட்டசபை கூடியது. ஒவ் வொரு கலெக்டர் அலுவலகத்திலும் போடப்பட்ட 'அவரேஜ்' ஃபிகர், அமைச் சர் கையில் கொடுக்கப்பட்டது.

''தமிழ் நாட்டில் உள்ள மொத்த சிவன் கோவில்களின் எண்ணிக்கை 9,600. பெருமாள் கோவில்களின் எண்ணிக்கை 6,400.''

தமது கேள்விக்கான பதில் படிக்கப்பட்ட நேரத்தில், ஏகாம்பரம் ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் ''தாக சாந்தி'' செய்து கொண்டிருந்தார்.

''இராத்திரி பகலாய் உழைக்க வேண்டி யிருக்கு. ஓவர் டைமும் கிடையாது. ஒண்ணும் கிடையாது. சே! என்ன உத்தி யோகம்!'' என்று அலுத்தபடியே நேற்றிரவு முழுவதும் அலுவலகங்களிலேயே தங்க நேரிட்ட ஊழியர்கள் மீண்டும் அலுவலகங் களுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

''காசு கொடுக்கறவனுக்காக லைட்டைப் போட்டுக்கிட்டு இராத்திரி முழுக்க வேலை பார்க்கிறானுங்க! சர்டிபிகேட் கொடுக்க மட்டும் வலிக்குது. இதுல மாசா மாசம் சம்பள உயர்வு வேற...'' என்று முணு முணுத்தனர் பொது மக்கள்!

''ஆபீஸ்ல தூங்கறீங்க சரி; அதுக்குன்னு தூங்கி எழுந்ததும் பல் தேய்க்கப் போறது நல்லா இல்ல சார்!''
— பொறுகி.





சாணக்யன்

அரசியல் மோசடி முதல்வர் மாதவ மேனன்; அவரைப் பழிவாங்கத் துடிக்கும் அடிபட்ட பாம்பு ஜான்சன். ஒன்றுக்கு ஒன்று வாங்கல் இல்லை. கடைசியில் 'ஜான்சன், நீ ஜெயிச்சு.' என்று முதல்வர் கூற நேர்வது எப்படி என்பதற்கிடையே சுவாரஸ்யமான விறுவிறுப்பு. இந்த அகலத் திரைப் படம் — மலையாளம்.

எடுத்த எடுப்பில் ஏதோ எலெக்ட்ரானிக், கம்ப்யூட்டர், ஒரு சில மேதா விலாசங்கள் — இவற்றைப் பார்க்கும்போது 'போர்' வாசனையடித்தாலும் கமலஹாசன் (ஜான்சன்) தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தவுடன் சும்மா கும்மென்று சுதி ஏறிவிடுகிறது பாருங்கள், கடைசி வரை இறங்கவே இல்லை.

ஏதோ ஓர் இசைக் கருவி விற்பனை நிலைய உதவியாளராய் இருக்கும் கமல், ஓர் இசை நிகழ்ச்சியில் தனது ஞானத்தை வெளிப்படுத்த, அந்த இடத்தில் அவருக்கு ஒரு ரசிகை உற்பத்தியாகி... அந்த ரசிகையின் முகதரிசனம் கிடைப்பதற்குள் கமலுக்கு மட்டுமல்ல; படம் பார்க்கிறவர்களுக்கும் பொறுமை எல்லை மீறுகிறது. அந்தக் கொலுசொலியும் காலசைவும் அத்தனை நீடித்திருக்கணுமா? விடுங்கள், இதெல்லாம் மைனர் பாயிண்ட்.

கமலின் காதலியைப் பெற்ற அப்பன், அரசியல் செல்வாக்குள்ள ஆசாமி என்று தெரிந்த பிறகும், 'இதோ பார், என் பெண்ணோடு நீ பேசக்கூடாது; பழகக் கூடாது.' என்று அவர் எச்சரித்ததை ஒரு சவாலாய் ஏற்றுக் கொண்டு, திடுதிப்பென்று ஒரு வீராப்புக் காட்டி, 'நான் பேசுவேன், பழகுவேன். நீங்கள் என்ன செய்யும்? ஹூம்?' என்று முறைத்துக் கொள்கிறாரே அங்கே ஆரம்பமாகிறார் கமல்.

அ டி ப ட் டு த் துடிக்கும் வேதனைகள், எதிரியை மடக்கும் கொக்கரிப்புக்கள் ரொம்ப ரொம்ப நாயகனுக்கு நெருங்கி வந்தாலும் — நிகழ்ச்சிக் கோப்பிலே வரும் புதுமையான, மேற்கத்திய செல்வாக்கான சம்பவங்களில் அவர் புகுந்து புறப்படும் போது 'அடேங்கப்பா' சொல்ல வைத்து விடுகிறார்.

கமலின் கொஞ்ச நேரக் காதலியாய் வரும் ஊர்மிளா நெஞ்சத்தை அள்ளிக் கொள்கிறார். தன்னை வீட்டில் அடைத்து வைத்திருந்த தந்தை திடுதிப்பென்று, 'உன் ஜான்சன் கீழே காத்திருக்கிறான். போய்ப் பார்.' என்றதும் நம்ப முடியாத மருட்சியும் ஆவலும் சேர அவர் எட்டிப் பார்ப்பது, உண்மைதான் என்று அறிந்ததும் முட்டி மோதி வந்து கட்டிப் பிடித்து... கிளுகிளுப்பான புதுசு.

ஏனோதானோவென்று அறிமுகமாகும் மிமிக்ரி ஜெயராம், கமலுக்கு வலது கையாய் மாறிக் கைகொடுக்கும் உயிர்த் தோழனாய் இதம் தருகிறார்.

கமலுக்கு இணையாகவே கூட நிறுத்தி வைக்கலாம் போலிருக்கிறது அந்த மாதவ மேனனை. (திலகன்). இயல்பான அரசியல் தோரணையிலேயே அசத்திவிடுகிறார். பதவிச் செல்வாக்கின் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தி முத்திரை பதித்துவிட்டார்.

தான் ஒரு மூத்த முதிர்ந்த கை என்று தனது காரெக்டர் ரோலில் காட்டிக் கொண்டிருக்கிறார் மது. டி. ஐ. ஜி. போலீஸ்! முக்கிய மந்திரியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அவருக்கு அனுசரணையாய் அனைத்துத் துப்பும் துலக்கிப் பணிந்து நடந்தவர், முதல்வர் தனது அதிகார எல்லையைத் தாண்டும்போது காக்கிச் சட்டைக்காரரின் கடமையை உணர்த்தும் அந்தக் கட்டம் மனத்தில் சிக்கென்று தைக்கிறது.

கதைப் போக்கில் அறிவுபூர்வமாய் எழுகின்ற சில பல 'இது சாத்தியமா?' கேள்விகளைக் காட்சி அமைத்த விதத்தில் 'சாத்தியம்தான்' என்று உணர்ச்சிபூர்வமாய் நம்ப வைத்திருக்கும் டைரக்டர் ராஜீவ் குமாரின் சாமர்த்தியத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

அந்த உச்சக்கட்டம் படுகச்சிதமாக அமைந்து விட்டதால் சோக முடிவிலும் ஒரு சோர்வு தட்டாத நிறைவு ஏற்படுகிறது. சிரித்துக் கொண்டே உயிர்விட்டு ஜெயிக்கும் மாட்சிமையில் நிரம்பிப் போகிறார், கமல்.

— பி. எஸ். எஸ்.



Gokulam

designed to meet the growing needs of your child.

October Highlights :

* *The childhood days of* **Mahatma Gandhi.**
* **"Dr. Montessori? Who's that?"** — *an article on a system of education.*
* **"Don't read? You're crazy!"** — *a group discussion about the reading habit.*

WATCH OUT FOR THE OCTOBER ISSUE!

Annual Subscription	:	Rs. 36.00 (India)
Overseas	:	Rs. 270.00 (Air mail)
	:	Rs. 120.00 (Sea mail)

For agency, subscription contact : Gokulam, Guindy, Madras - 600 032 Phone : 434157, 434190





அத்தியாயம் 30

தெய்வம் ஆயினாள்!

பூங்குழலி எவ்வளவு விரைவாக ஓடக் கூடியவளானாலும், மேலிருந்து எறியப்பட்ட வேலுடன் போட்டியிட முடியாதல்லவா? அவள் மந்தாகினி அத்தையின் அருகில் பாய்ந்து செல்வதற்குள் வேல் அத்தையின் விலாவில் பாய்ந்து விட்டது.

'வீல்' என்று மற்றொரு முறை பயங்கரமாக ஓலமிட்டு விட்டு மந்தாகினி கீழே விழுந்தாள்.

அதே சமயத்தில் அந்த அறையிலிருந்த அத்தனை பேருடைய குரல்களிலிருந்தும் பரிதாப ஒலிகள் கிளம்பின.

பூங்குழலியைப் போலவே மற்றவர்களும் தரையில் விழுந்த மாதரசியை நோக்கி ஓடி வர ஆயத்தமானார்கள்.

அச் சமயம் மேல் மாடத்திலிருந்து தடதடவென்று சத்தம் கேட்டது. சில மண் பாண்டங்கள் கீழ் நோக்கிப் பல திசைகளிலும் எறியப்பட்டன.

அவற்றில் ஒன்று சக்கரவர்த்தியின் அருகில் சுடர் விட்டுப் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த தீபத்தின் பேரில் விழுந்தது. தீபம் அணைந்தது. அறையில் உடனே இருள் சூழ்ந்தது.

பிறகு சிறிது நேரம் அந்த அந்தப்புர அறையிலும் அதைச் சுற்றியுள்ள நீண்ட தாழ்வாரங்களிலும் ஒரே குழப்பமாயிருந்தது.

திடுதிடுவென்று மனிதர்கள் அங்குமிங்கும் வேகமாக ஓடும் காலடிச் சத்தங்கள் கேட்டன.

"விளக்கு! விளக்கு!" என்று சின்னப் பழுவேட்டரையரின் கர்ஜனைக் குரல் அலறியது.

"ஆகா! ஐயோ!" என்று ஒரு பெண் குரல் அலறும் சத்தம் கேட்டது. அது மகாராணியின் குரல் போலிருக்கவே எல்லாருடைய நெஞ்சங்களும் திடுக்கிட்டு, உடல்கள் பதறின.

இத்தனை குழப்பத்துக்கிடையே பூங்குழலி அவளுடைய அத்தை மந்தாகினி விழுந்த இடத்தைக் குறி வைத்து ஓடி அடைந்தாள். அத்தையை அவளுக்கு முன் யாரோ தூக்கி மடியின் மேல் போட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

இதயத்தைப் பிளக்கும்படியான சோகத் தொனியில் விம்மும் குரலும் அழுகைக் குரலும் சேர்ந்து அவள் காதில் விழுந்தன.

வாசற்படிக்கருகில் "யாரடா அவன்? ஓடாதே! நில்!" என்று சின்னப் பழுவேட்டரையர் கூச்சலிட்டார்.

ஓடியவன் யாராயிருக்குமென்று பூங்குழலி ஊகித்துக் கொண்டாள்.

அமரர் கல்கி

அச் சமயம் இரண்டு தாதிப் பெண்கள் தீபங்களுடன் வந்து அந்த அறையில் பிரவேசித்தார்கள்.

தீப வெளிச்சத்தில் தோன்றிய காட்சி யாருமே எதிர்பார்க்க முடியாத அதிசயக் காட்சியாயிருந்தது.

மூன்று வருஷங்களாகக் காலை ஊன்றி நடந்தறியாமலிருந்த சக்கரவர்த்தி, — கால்களின் சக்தியை அடியோடு இழந்து விட்டிருந்த சுந்தர சோழ மன்னர், தாம் படுத்திருந்த கட்டிலிலிருந்து இறங்கி நடந்து வந்து, மந்தாகினியின் அருகில் உட்கார்ந்திருந்தார். அவர் அருகில் இளவரசரும் இருந்தார்.

மந்தாகினியின் விலாவில் ஒரு பக்கத்தில் பாய்ந்து இன்னொரு பக்கம் வெளிவந்திருந்த வேலின் முனையிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

சக்கரவர்த்தி படுத்திருந்த கட்டிலின் அருகில் மலையமான் மகள் வானமா தேவி காணப்பட்டாள்.

அவளுக்கு அருகில் சக்கரவர்த்தி தலை வைத்துச் சாய்ந்திருந்த தலையணையில் ஒரு கூரிய கத்தி செருகப்பட்டிருந்தது.

விளக்கு வந்ததும் மகாராணி கட்டிலை வெறிக்கப் பார்த்து விட்டு, கரை காணாத அதிசயம் ததும்பிய கண்களினால் சக்கரவர்த்தி கீழே உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள். அப்போது பொன்னியின் செல்வர் மந்தாகினியின் தலையை மெள்ளத் தூக்கிச் சக்கரவர்த்தியின் மடியில் வைத்தார்.

இளவரசர் அருள்மொழிவர்மரின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

சக்கரவர்த்தியோ விம்மி விம்மி அழுது கொண்டிருந்தார்.

இவ்வளவையும் பூங்குழலி ஒரு கணநேரப் பார்வையில் பார்த்தாள். மறு கணத்திலேயே அங்கு நடந்த சம்பவங்களையெல்லாம் ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொண்டாள்.

மேலேயிருந்து வேலை எறிந்தவன் அதை ஊமை ராணி தடை செய்து விட்டதைக் கவனித்திருக்கிறான்.

உடனே மேலேயிருந்த தட்டு முட்டுச் சாமான்களை எடுத்தெறிந்து விளக்கை அணைத்து விட்டிருக்கிறான்.

அப்போது ஏற்பட்ட இருட்டில் கீழே குதித்து இறங்கிக் கட்டிலில் சக்கரவர்த்தி படுத்திருப்பதாக எண்ணிக் கத்தியினால் குத்தி விட்டு ஓடியிருக்கிறான்.

சக்கரவர்த்திக்கு ஆபத்து என்று அறிந்து கட்டிலின் அருகில் ஓடிய மகாராணியைத் தள்ளி விட்டுப் போயிருக்கிறான். அப்போது தான் மகாராணி "ஐயோ!" என்று கதறியிருக்கிறாள்.

பின்னர் அச் சதிகாரன் வாசற்படியின் பக்கம் ஓடி அங்கே அச்சமயம் பிரவேசித்துக் கொண்டிருந்த சின்னப் பழுவேட்டரையரையும் தள்ளி விட்டு ஓடிப் போயிருக்க வேண்டும்.

இவ்வளவையும் பூங்குழலி ஊகித்துத் தெரிந்து கொண்டாள். இந்தப் பாதகச் செயலைச் செய்து தப்பி ஓடியவனைத் தொடர்ந்து போய்ப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் மனத்தில் ஒரு பக்கத்தில் உதயமாயிற்று. அதைக் காட்டிலும் தன் அத்தையின் இறுதி நெருங்கி விட்டது என்ற நினைவு அவள் உள்ளத்தில் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியது. ஆகையால் மந்தாகினி சக்கரவர்த்தியின் மடியில் தலை வைத்துப் படுத்திருப்பதையும் பொருட்படுத்தாமல் அவள் அருகில் சென்று மண்டியிட்டு உட்கார்ந்து, "அத்தை! அத்தை!" என்று கதறினாள்.

"ஐயோ! நீ சொன்னது உண்மையாகி விட்டதே! பாவி நான் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போனேனே?" என்று அழுது புலம்பினாள்.

ஆனால் மந்தாகினியோ அவள் இருந்த பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவளுடைய கண்கள் சக்கரவர்த்தியின் திருமுகத்தை ஆவலுடன் அண்ணாந்து பார்த்த வண்ணமிருந்தன.

ஏன்? அவளுடைய ஒரு கரத்தைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் உகுத்த இளவசரர் மீது கூட அவளுடைய கவனம் செல்லவில்லை. பூங்குழலியைக் கவனிப்பது எப்படி?

பூங்குழலி மேலும் புலம்பத் தொடங்கிய போது இளவரசர் தமது விம்மலை அடக்கிக் கொண்டு, "சமுத்திரகுமாரி! இது என்ன? உன்னை நீ மறந்து விட்டாயா? நீ இருக்குமிடத்தை மறந்து விட்டாயா?" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

பூங்குழலியும் சிறிது வெட்கமடைந்தவளாய்த் துயரத்தை அடக்கிக் கொண்டு எழுந்து நின்றாள்.

"அரசே! எனக்கு என் அத்தையைத் தவிர இவ்வுலகில் யாரும் கதி இல்லை!" என்று விம்மினாள்.

இளவரசர் தமது கண்களில் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "பூங்குழலி! அவள் உனக்கு அத்தை! ஆனால் எனக்கு, என் பெற்ற தாயைக் காட்டிலும் பதின் மடங்கு மேலான தாய்! என்னை அழைத்து வரச் சொல்லி உன்னை அனுப்பி வைத்தாள்! ஆயினும் என் முகத்தை அவள் ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. இதன் காரணத்தை அறிந்தாயா? முப்பது வருஷங்

களுக்கு முன்னால் பிரிந்த என் தந்தையும் தாயும் இன்று சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் தடையாக நிற்பதற்கு நாம் யார்?...'' என்று கூறி விட்டு, மகாராணி உள்பட எல்லாரையும் ஒரு தடவை இளவரசர் கூர்ந்து பார்த்தார்.

மீண்டும் பூங்குழலியை நோக்கி, ''பெண்ணே! முன்னேயும் சில முறை எனக்கு நீ உதவி செய்திருக்கிறாய்! அந்த உதவியெல்லாம் அவ்வளவு முக்கியமானவையல்ல. இன்றைக்கு, என் தாயும் தந்தையும் ஒன்று சேரும் காட்சியைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படி செய்தாய்! இதை நான் என்றும் மறக்க மாட்டேன்! சமுத்திர குமாரி! உன் அத்தை இன்று எவ்வளவு மகத்தான புண்ணியத்தைக் கட்டிக் கொண்டாள் என்பதை எண்ணிப் பார்! சதிகாரனுடைய கொலை வேல் என் தந்தையின் மேல் படாமல் காப்பாற்றினாள்!'' அந்த வேலைத் தன் உடம்பில் பாயும்படி செய்து கொண்டாள்! தன் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பாற்றினாள்! ஒரு முறையல்ல; இரு முறை அவரைக் காப்பாற்றினாள்! உன் அத்தையின் மீது வேல் பாய்ந்ததைக் கண்டதும் மூன்று வருஷமாகச் சக்தி இழந்திருந்த என் தந்தையின் கால்களில் மீண்டும் சக்தி வந்தது. அவர் கட்டிலிலிருந்து எழுந்து ஓடி வந்தார். அதனால் மறுபடியும் அவர் உயிர் தப்பியது! சதிகாரன் அவனுடைய குறி தப்பி விட்டதாக எண்ணி விளக்கை அணைத்து விட்டுக் கீழே குதித்து வந்து மீண்டும் அவனுடைய பாதகத் தொழிலைச் செய்யப் பார்த்தான். ஆனால் சக்கரவர்த்தி எழுந்து வந்து விட்டதால் அவனுடைய நோக்கம் நிறைவேறவில்லை. அதோ, என்னைப் பெற்ற தாய், மலையமான் குமாரி, கரை காணா வியப்புடன் நிற்பதைப் பார்! உன் அத்தையின் மீது வேல் பாய்ந்ததை என்னைப் பெற்ற தாய் பார்த்தாள். மறுபடியும் அந்தக் கொலைகாரன் தன் சதித் தொழிலைச் செய்யலாம் என்று எண்ணி ஓடி வந்தாள். அத்தை செய்த உயிர்த் தியாகத்தைத் தானும் செய்ய வேண்டுமென்று எண்ணினாள். என் தந்தையைத் தன் உடலினால் மறைத்து, அவர் மீது விழும் அடுத்த ஆயுதத்தைத் தான் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். கட்டிலில் என் தந்தையைக் காணாதிருக்கவே தான் 'ஐயோ!' என்று அலறினாள். சக்கரவர்த்தி அங்கேயே இருந்திருந்தால், என் தந்தை, தாய் இருவரில் ஒருவர் இன்று இறந்திருப்பார்கள். சமுத்திரகுமாரி! உன் அத்தை இந்தச் சோழ குலத்துக்கும் சோழ நாட்டுக்கும் எவ்வளவு பெரிய சேவை செய்திருக்கிறாள் என்பதை இப்போது உணர்ந்தாயா? சதிகாரனுடைய ஆயுதத்தினால் சக்கரவர்த்தி மாண்டிருந்தால், சோழ ராஜ்யம் சின்னாபின்னப்பட்டுப் போய் விடும். பழுவேட்டரையர் குலத்துக்கு என்றென்றும் மாறாத பழிச் சொல் ஏற்படும். என் தந்தையின் உயிரையும் தாயின் உயிரையும் மட்டும் உன் அத்தை காப்பாற்றவில்லை. பழுவேட்டரையரின் குலப் பெயரையும் காப்பாற்றினாள். சோழ நாட்டுக்கே பெரும் விபத்து நேராமல் காப்பாற்றினாள். சோழ வம்சத்துக்கே குலதெய்வம் ஆனாள். பூங்குழலி! உன் அத்தைக்காக இனி நான் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடப் போவதில்லை. அவளுக்காக நீயும் அழ வேண்டியதில்லை. வேறு யாரும் துக்கப்பட வேண்டியதில்லை! இத்தகைய தெய்வ மரணம் யாருக்குக் கிடைக்கும்? முப்பது வருஷங்களாகப் பிரிந்திருந்த பதிக்காக உயிரைக் கொடுக்கும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? அவருடைய மடியிலே தலையை வைத்துக் கொண்டு நிம்மதியாக உயிரை விடும் பேறு யாருக்குக் கிடைக்கும்?'' என்று கூறி விட்டு, இளவரசர் மீண்டும் ஒருமுறை சுற்று முற்றும் பார்த்தார்.

அந்த அறையிலும் வாசற்படி அருகிலும் நின்றவர்கள் அனைவரும் தம்முடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டார். மேலும் கூறினார்:


''பூங்குழலி! உன் அத்தை இறந்து விட்டால் நீ அனாதை ஆகி விடுவாய் என்று அஞ்ச வேண்டாம். நீ இன்று செய்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன். உன்னிடம் என்றென்றும் நன்றியுள்ளவனாயிருப்பேன். நான் ஒருவேளை மறந்து விட்டாலும், சின்னப் பழுவேட்டரையர் மறக்க மாட்டார். உன் அத்தையும் நீயும் இன்று அவருக்கு எத்தகைய உதவி செய்தீர்கள்? சக்கரவர்த்தியின் மீது வேலோ, கத்தியோ பாய்ந்திருந்தால் உலகம் என்ன சொல்லியிருக்கும்? தஞ்சைக் கோட்டைத் தளபதியான பழுவேட்டரையரையும் அந்தப் பாதகச் செயலுக்கு உடந்தை என்றுதான் கூறுவார்கள், உலகத்தார் சொல்லுவார்கள். கோட்டை வாசலில் கொடும்பாளூர் வேளார் வேறு காத்திருக்கிறார். பழுவூர்க் குலத்தை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு அவருக்கு வேண்டிய காரணம் கிடைத்திருக்கும். அவ்வளவு ஏன்? இன்றைக்கு நான் உன் உதவியினால் கோட்டைக்குள் வராதிருந்தால், கோட்டைத் தளபதியின் மேல் எனக்குக் கூடத்தான் சந்தேகம் உதித்திருக்கும். ஆகையால் சின்னப் பழுவேட்டரையர் மற்ற எல்லோரையும் விட உன்னிடம் அதிக நன்றி செலுத்த வேண்டும். அவரிடம் நீ என்ன பரிசு கேட்டாலும் கொடுப்பார். அவருடைய சொத்திலே பாதியைக் கேட்டாலும் கொடுத்து விடுவார்!''

இவ்வாறு இளவரசர் கூறிய போது சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கடமையை அவர் சரியாக நிறைவேற்றவில்லையென்பதை அவருக்கு ஒருவாறு உணர்த்த விரும்பியே மேற்கண்டவாறு பேசினார். அதைச் சின்னப் பழுவேட்டரையர் அறிந்து கொண்டார் என்பதை அவருடைய முகத்தில் தோன்றிய வேதனை நன்கு எடுத்துக் காட்டியது. அவருடைய முகத்தில் சாதாரணமாகக் குடிகொண்டிருந்த கம்பீரத் தோற்றம் போய் விட்டது. யாரையும் இலட்சியம் செய்யாத, எதற்கும் அஞ்சாத, வீரப் பெருமிதத்தின் அறிகுறி இப்போது அந்த முகத்தில் இல்லவே இல்லை.

போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடி வந்த வீரன் ஒருவன், பலர் ஏசும்படியாக இந்த உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்ததில் என்ன பயன் என்று வெட்கி மாழ்கும் பாவனை அவருடைய முகத்தில் இப்போது காணப்பட்டது.

இளவரசர் முதலில் கூறியதையெல்லாம் கேட்டு உள்ளமும் உடலும் உருகி நெகிழ்ந்து கொண்டிருந்த பூங்குழலி அவர் பரிசைப் பற்றிச் சொன்னதும் பழைய ஆக்ரோஷங் கொண்ட சமுத்திர குமாரியாகி விட்டாள்.

"இளவரசே! எனக்கு யாருடைய நன்றியும் தேவையில்லை; பரிசும் வேண்டியதில்லை. எனக்குத் தஞ்சம் அளிக்கச் சமுத்திர ராஜா இருக்கிறார். என் படகும் கால்வாய் முனையில் பத்திரமாயிருக்கிறது. இதோ நான் புறப்படுகிறேன். ஒருவேளை என் அத்தை உயிர் பிழைத்தால்?... இல்லை, அது வீண் ஆசை! காலையிலேயே என் அத்தை சொல்லி விட்டாள். வரப்போவதை உணர்ந்து தான் சொன்னாள். இனி அவள் பிழைக்கப் போவதில்லை. எனக்கு இங்கே வேலையும் இல்லை. என்றாவது ஒரு நாள் தாங்களும் கொடும்பாளூர் இளவரசியும் கோடிக்கரைக்கு வந்தால்...." என்று கூறிப் பூங்குழலி வானதி இருந்த இடத்தை நோக்கினாள். அந்தப் பெண் அகல விரிந்த கண்களினால் தன்னையும் இளவரசரையும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். "சீச்சீ! இது என்ன ஆசை? நான் போகிறேன்" என்று கூறிவிட்டு வாசற்படியை நோக்கி விரைந்து நடந்தாள்.



இதுவரையில் திக்பிரமை கொண்டவளைப் போல் நின்றிருந்த வானதிக்கு அப்போதுதான் சிறிது தன்னுணர்வு வந்தது. அவள் பூங்குழலியின் அருகில் வந்து, "என் அருமைத் தோழி! நீ எங்கே போகிறாய்? நானும் உன்னைப் போல் அநாதைதான்!....." என்று மேலும் பேசுவதற்குள், பூங்குழலி குறுக்கிட்டாள். "தேவி! நான் தங்கள் அருமைத் தோழியும் அல்ல; தாங்கள் என்னைப் போல் அநாதையும் அல்ல. சீக்கிரத்தில் பழையாறை இளைய பிராட்டி வந்து விடுவார்!" என்றாள்.

வானதிக்கு அப்போதுதான் உண்மையில் இளையபிராட்டியின் நினைவு வந்தது. "ஐயோ! அக்காவுக்கு இங்கு நடந்ததெல்லாம் ஒன்றும் தெரியாதே! செய்தி சொல்லி அனுப்பவேண்டுமே?" என்றாள்.

"அதற்கும் ஒரு கவலையா? கோட்டை வாசலில் தங்கள் பெரிய தகப்பனார் இருக்கிறாரே! அவரிடம் சொன்னால் செய்தி அனுப்புகிறார்!" என்று கூறிவிட்டுப் பூங்குழலி வழி மறிப்பவள் போல் நின்ற வானதியைக் கையினால் சிறிது நகர்த்திவிட்டு மேலே சென்றாள்.

வாசற்படிக்கு அருகில் சின்னப் பழுவேட்டரையர் மறுபடியும் அவளை வழி மறித்து நிறுத்தினார்.

"பெண்ணே! பொன்னியின் செல்வர் கூறியதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் கூறியது முற்றும் உண்மை. பழுவூர்க் குலத்துக்கு அழியாத அபகீர்த்தி உண்டாகாமல் நீ காப்பாற்றினாய். உனக்கு நான் அளவில்லாத நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். நீ என்ன பரிசு வேண்டுமென்று கேட்டாலும் தருகிறேன்" என்றார்.





"பூங்குழலி துயரப் புன்னகையுடன், "தளபதி! இங்குள்ளவர்களில் சிலருக்குச் சக்கரவர்த்தி உயிர் பிழைத்ததில் சந்தோஷம். சிலருக்கு அவர் நடமாடும் சக்தி பெற்றதில் சந்தோஷம். இன்னும் சிலருக்குப் பழுவேட்டரையர் குலம் அபகீர்த்திக்கு உள்ளாகாததில் மகிழ்ச்சி. என் அத்தைக்கு நேர்ந்த துர்மரணத்தைப் பற்றி யாருக்கும் கவலையிருப்பதாகத் தெரியவில்லை. நானாவது அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா? என் அத்தையைக்கொன்றவன் எங்கே போனான் என்று தேடிக் கண்டு பிடிக்கப் பார்க்கிறேன். தயவு செய்து எனக்கு வழியை விடுங்கள்!' என்றாள்.

பூங்குழலியின் இந்த வார்த்தைகள் கோட்டைத் தளபதி காலாந்தக கண்டரைத் தூக்கி வாரிப் போட்டன.

"பெண்ணே! உனக்கு நான் தோற்றேன். கொலைகாரனை விட்டு விட்டுச் சும்மா நின்று கொண்டிருக்கிறேன். அவனைக் கண்டு பிடிக்காவிட்டால், சக்கரவர்த்தி பிழைத்ததினால் மட்டும் என் பழி தீர்ந்து விடாது. உன் வார்த்தைகளில் நான் அவரும் பிக்கை கொண்டதே தவறு! கொலைகாரன் எங்கே போயிருப்பான்! என்னைத் தள்ளி விட்டு ஓடினான். ஆம்! ஆம்! சுரங்க வழிக்குத்தான் போயிருப்பான். வா! எனக்கு உதவியாக வா! வேறு யாரையும் அழைத்துப் போக விருப்பம் இல்லை! அவன் மட்டும் என்னிடம் அகப்படட்டும்! என்ன செய்கிறேன், பார்!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே சின்னப் பழுவேட்டரையர் தம் இரும்புக் கையினால் பூங்குழலியையும் பிடித்து இழுத்துக் கொண்டு சிற்ப மண்டபத்தை நோக்கி விரைந்து சென்றார்.

அந்த அறையில் இருந்த மற்ற எல்லாரும் அப்படி அப்படியே நின்றார்கள். இளவரசர் விருப்பத்தை அறிந்து கொண்டு சக்கரவர்த்தியின் அருகில் போகாமல் தூரத்தில் ஒதுங்கி நின்றார்கள். எல்லாருடைய கண்கள் மட்டும் சக்கரவர்த்தியின் பேரிலும், அவர் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த மாதரசியின் பேரிலும் இருந்தன.

ஆனால் சுந்தர சோழரும் மந்தாகினியுமோ ஒருவரோடொருவர் பரிபூரணமாய்க் கலந்து போயிருந்தார்கள். மற்றவர்களைப் பற்றிய எண்ணமே அவர்களுடைய நெஞ்சில் புகுவதற்கு இடமிருக்கவில்லை. முப்பது வருஷத்து வாழ்க்கையைச் சில நிமிஷ நேரத்தில் நடத்த முடியுமா என்பது பற்றி மனோதத்துவ விற்பன்னர்கள் பொது முறையில் என்ன சொல்லுவார்களோ, தெரியாது. ஆனால் சுந்தர சோழரும் மந்தாகினியும் அந்தச் சில நிமிஷ நேரத்தில் பன்னெடுங்கால வாழ்க்கையை நடத்தினார்கள் என்பதில் சந்தேகம் சிறிதுமில்லை. முப்பது வருஷத்தில் ஒருவரோடொருவர் பேசக் கூடியதையெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டார்கள். மந்தாகினி தனக்குரிய நயன பாஷை மூலமாகவே பேசினாள். சுந்தர சோழர் பெரும்பாலும் அந்த பாஷையை அறிந்து கொண்டார். இளம் பிராயத்தில் பூதத்தீவிலே அவர் சில மாத காலம் மந்தாகினியுடன் சொர்க்க வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்தில் அவளுடைய சமிக்ஞை பாஷையையும் நன்கு தெரிந்து கொண்டிருந்தார். அவற்றை அவர் இன்றளவும் மறந்து விடவில்லை. ஆகையால் மந்தாகினி இப்போது கண்களால் மட்டுமே பேசியபோதிலும் அவரு



டைய உள்ளம் அவள் மனத்தில் உதித்த எண்ணங்களை அக்கணமே தெரிந்து கொண்டது. அப்படி அதிகமாக மந்தாகினி விஷயம் எதுவும் சொல்லிவிடவும் இல்லை.

"தங்கள் பேரில் எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. உலகையாளும் சக்கரவர்த்தியாகிய தாங்கள் எங்கே? கரையர் மகளும் ஊமையும் செவிடுமான நான் எங்கே? தங்கள் முன் வராமல் நான் தான் இத்தனை காலமும் மறைந்து திரிந்து கொண்டிருந்தேன். அவ்வப்போது தூரத்தில் நின்று தரிசித்து மனத்தைத் திருப்தி செய்து கொண்டிருந்தேன். உயிரை விடும் தருணத்தில் தங்கள் மடியில் படுத்து உயிரை விடும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே? இதைக் காட்டிலும் எனக்கு வேறு என்ன வேண்டும்?" — இவ்வளவுதான் மந்தாகினி கூறியது. இதையே திருப்பித் திருப்பி அவளுடைய உள்ளமும் கண்களும் சொல்லிக் கொண்டிருந்தன. அவளுடைய முகத்திலோ எல்லையற்ற ஆனந்தம் ததும்பிக்கொண்டிருந்தது. விலாப் புறத்தில் வேல் குத்தி வெளியிலும் வந்திருந்ததினால் அவள் சிறிதும் வேதனைப்பட்டதாக அவள் முகக் குறியிலிருந்து தெரியவில்லை. அவள் அடியோடு தன் தேகத்தைப் பற்றிய நினைவை இழந்து விட்டிருந்ததாகக் காணப்பட்டது. பறவை கூண்டிலிருந்து கிளம்பும் தருணம் நெருங்கி விட்டது. இனி, கூண்டைப் பற்றி அந்தப் பறவைக்கு என்ன கவலை இருக்கப் போகிறது?

சுந்தர சோழரும் தமது உடம்பைப் பற்றிய நினைவை மறந்து விட்டிருந்தார். அதனால்தானே அவர் தமது கால்கள் பலவீனமடைந்திருந்ததைக் கூட மறந்து கட்டிலிலிருந்து இறங்கி மந்தாகினியிடம் ஓடிவர முடிந்தது!

ஆனால் சுந்தர சோழர் மந்தாகினியைப்போல் சில வார்த்தைகள் சொல்வதோடு திருப்தி அடையவில்லை. எத்தனை எத்தனையோ விஷயங்களை அவர் சொல்லிக் கொண்டேயிருந்தார். அவருடைய கண்கள் சொல்லிய விஷயங்களை அவருடைய உதடுகள் வார்த்தைகளாக முணு முணுத்துக் கொண்டேயிருந்தன. அந்த அறையிலிருந்த மற்றவர்களுக்கு அவர் பேசிய வார்த்தைகள் ஒன்று கூடப் புரியவில்லை. ஆனால் மந்தாகினிக்கு எல்லாம் விளங்கிக் கொண்டு வந்தது. ஆமோதிக்க வேண்டிய இடத்தில் ஆமோதித்தாள்; மறுக்க வேண்டிய இடத்தில் தலையை ஆட்டி மறுத்தாள்; ஆனந்தமடைய வேண்டிய இடத்தில் ஆனந்தப்பட்டாள்; ஆறுதல் கூற வேண்டிய இடத்தில் ஆறுதலும் தெரிவித்தாள்.

"என் உயிருக்கு உயிரானவளே! நீ இன்று எனக்காக உன் உயிரை விடுகிறாய்! என் உயிர் மட்டும் எத்தனை நாள் இருக்கும் என்று எண்ணுகிறாய்? நான் கல் நெஞ்சமுள்ள பாவிதான்; ஒத்துக் கொள்கிறேன். இராஜ்யம் ஆளும் விதிக்குப் பிறந்தவர்கள் இவ்விதம் நெஞ்சைக் கல்லாகச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிடில் இராஜ்ய நிர்வாகம் எப்படி நடக்கும்? பூதத் தீவில் நான் உன்னை விட்டு விட்டு வந்தது முதலில் நான் செய்த பெருங்குற்றம். அதன் விளைவாக இன்னும் பல குற்றங்களைச் செய்ய வேண்டியதாயிற்று. அந்தச் சொர்க்கத்துக்கு இணையான தீவில் நாம் எவ்வளவு ஆனந்தமாக வாழ்ந்தோம்? அது நீடித்திருக்கக் கொடுத்து வைக்கவில்லையே? கடவுளே சதி செய்து விட்டாரே! என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் சதி செய்து விட்டார்களே? யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆனதும் உன்னைத் தேடிவர வேண்டுமென்றிருந்தேன். உன்னைத் தேடிக் கோடிக்கரை வரையில் ஓடிவந்தேன். பாவிகள் நீ கடலில் குதித்துச் செத்து விட்டாய் என்று சொன்னார்கள். என் பிராண சிநேகிதன் என்று எண்ணியிருந்த அநிருத்தனே ஏமாற்றி விட்டான்...ஆமாம், ஆமாம்! நீ சொல்வது தெரிகிறது. நீ கடலில் குதித்தது உண்மைதான் என்றும் பிறகு யாரோ உன்னைக் காப்பாற்றியதாகவும் சொல்லுகிறாய். ஆனால் இது அநிருத்தனுக்குத் தெரிந்திருந்தும் அவன் சொல்லவில்லை. அதனால் வந்த விபரீதத்தைப் பார்! உன்னைப் பார்க்க நேர்ந்தபோதெல்லாம் உன் ஆவியைப் பார்ப்பதாக எண்ணிக் கொண்டேன். என்னைப் பழி வாங்குதற்காக வந்து சுற்றுகிறாய் என்று நினைத்துக் கொண்டேன். என் அருமைக் குமாரனை நீ காவேரி வெள்ளத்திலிருந்து எடுத்துக் காப்பாற்றியிருக்க, நீதான் அவனைக் காவேரியில் தள்ளி விட்டாய் என்று எண்ணிக் கொண்டேன். ஆகா! நீ மட்டும் உயிரோடிருக்கிறாய் என்று அறிந்திருந்தால், என் வாழ்க்கை எப்படியெல்லாம் இருந்திருக்கும்? இந்தப் பெரிய சாம்ராஜ்யத்துக்காக உன்னை நான் கைவிட்டிருப்பேன் என்று நினைக்கிறாயா! ஒரு நாளும் இல்லை!....."

இவ்விதம் சுந்தர சோழர் தம் உள்ளத்தில் பொங்கித் ததும்பிய எண்ணங்களையெல்லாம் வாய் வார்த்தைகளினால் முணு முணுத்துக் கொண்டே வந்தார். கடைசியாக அவர் கூறினார்:—

"இரண்டு நாளைக்கு முன் நீ என் முன் வந்த போது உன்மேல் விளக்கை விட்டெறிந்தேன். உன்னை மறுபடி பார்த்த போதெல்லாம் அருவருப்புக்

பாரம்பரியச் சொத்தைப் பாதுகாக்க வேண்டும்!



முற்காலத்தில் அரசர்களும், மஹா வித்வான்களாக இருப்பார்கள். ராஜ ஸதஸ்கள் அறிவாளிகள் நிறைந்ததாக இருக்கும். நன்றாக வித்வத் ஸம்பாவனைகள் செய்தும் ராஜமான்யங்கள் விட்டும் வித்வான்களையும், அதன் வழியாக வித்யைகளையும் வ்ருத்தி செய்தார்கள். இப்போது நான் சொல்ல வேண்டாம். — எஜுகேஷன் மினிஸ்ட்ரி, கல்ச்சுரல் அஃபேர்ஸ் மினிஸ்ட்ரி என்று இருந்தாலும், கொஞ்சத்தில் கொஞ்சமாவது கலாசார அபிவிருத்திக்கு அவர்கள் செய்வதை நாம் பாராட்டத்தான் வேண்டுமென்றாலும் ஏதோ குடியரசு நாளில் இத்தனாம் கோடி ஜனங்கள் உள்ள தேசத்தில் ஒரு பத்துப் பண்டிதர்களுக்குக் கௌரவம் பண்ணுவது; 'ஸான்ஸ்கிரிட்' 'ப்ரமோஷன்' என்று ஏதாவது இரண்டு பழைய ஓரியன்டல் ஸ்கூல்களுக்கு 'க்ரான்ட்' கொடுப்பது; இரண்டு யூனிவர்ஸிடிகளில் 'சேர்' வைப்பது; ஒரு சில பேருக்கு ஸ்காலர்ஷிப் தருவது; க்ராமக் கலை உத்ஸவம் என்று ஏதாவது நாலைந்து நாட்கள் பண்ணுவது — என்பதாகச் செய்வதெல்லாவற்றையும் கூட்டிக் கணக்கெடுத்தாலும் பொருளாதாரம், ராணுவம், நீர்ப்பாசனம் முதலியவற்றுக்குச் செலவழிப்பதில் நூறில் ஒரு பங்காவது வித்யாபிவ்ருத்திக்குப் போகும் என்று தோன்றவில்லை. அவற்றிலே காட்டுகிற இன்ட்ரஸ்ட் இதில் யாருக்கும் இல்லை— எந்தக் கட்சிக்குமே இல்லை. ஆனாலும் வெளி தேசங்களில் நம் 'இமேஜ்' ப்ரொஜெக்ட் பண்ணிக் காட்டுவதற்காக மட்டும், நம்முடைய வித்யைகளையும் கலைகளையும் பற்றி நிறையப் பேசுவதாக ஏற்பட்டிருக்கிறது. இவற்றுக்காகச் செய்கிற ஏதோ கொஞ்சமும் ஈச்வர சம்பந்தமில்லாமலும் சாஸ்திரிய வழியில் இல்லாமலும் செய்யப்படுவதால் அவையும் உரியபடி ப்ரயோஜனப்படாமல் போகின்றன.

ஒரு விதத்தில் ராஜாங்க ரீதியில் நடக்காதது கூட நல்லதற்குத்தான் என்பேன். ஏனென்றால் அப்படி நடந்தால் ஜனங்கள் இவ்விஷயத்தில் அசட்டையாக இருந்துவிட முடியும். அப்படி இல்லாத போதுதான் ஸகல ஜனங்களும் ''இவை நம்முடைய மகத்தான பாரம்பரியச் சொத்து. இவற்றை நாம் ரக்ஷிக்க வேண்டும்'' என்று சொந்த அக்கறையும் விசாரமும் காட்டி ஹ்ருதய பூர்வமாக ஈடுபட அதிக இடம் உண்டாகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

காட்டினேன். அதற்காகவெல்லாம் நீ என்னை மன்னிக்க வேண்டும். பல வருஷ காலமாக நீ ஆவியாக வந்து என்னைத் துன்புறுத்துகிறாய் என்ற எண்ணத்தில் இருந்தேன். நள்ளிரவில் நீ இதே அறையில் என் முன் தோன்றி ஏதேதோ கூறினாய். என் மக்களை நீ சபிக்கிறாய் என்று எண்ணிக் கொண்டேன். அப்போது ஏற்பட்ட வெறுப்பு உன்னை நேரில் பார்த்த போதும் தீரவில்லை. உண்மையில், நீ எங்கள் குலதெய்வமாக வந்தாய்! எனக்கும் என் மக்களுக்கும் தீங்கு நேராமல் தடுப்பதற்காக வந்தாய்! அதையெல்லாம் நான் தெரிந்து கொள்ளவில்லை. என் மகள் குந்தவை எடுத்துக் கூறிய பிறகுதான் தெரிந்தது. ஐயோ! எப்பேர்ப்பட்ட தவறு செய்தேன்! அதற்காகவெல்லாம் என்னை மன்னித்துவிடு! உன்னிடம் எனக்குள்ள அன்பை இனி எப்படிக் காட்டுவேன்? அதற்கு வழியில்லாமல் செய்து விட்டாயே! என் குமாரர்களுக்குப் பட்டம் கட்ட வேண்டாமென்று சொன்னாயே, அதன் நியாயம் எனக்கே தெரிந்திருக்கிறது. ஏன் தலையை அசைக்கிறாய்? என் நன்மைக்காகவும் என் குலத்தின் நன்மைக்காகவுமே சொன்னாய்! அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் இங்குள்ளவர்கள் ஏதேதோ சொல்லி என்னைப் பைத்தியமாக அடிக்கப் பார்க்கிறார்கள். உனக்குக் குழந்தை பிறந்ததாகச் சொல்கிறார்கள். அது உண்மையானால் சொல்லி விடு! உன் மகன் இருந்தால், சொல்லி விடு! அவனுக்கு என்னாலியன்றதைச் செய்து உனக்குச் செய்த துரோகத்துக்குப் பரிகாரம் தேடுகிறேன்.....''

இவ்விதம் சுந்தர சோழர் கூறியபோது மந்தாகினி பரக்கப் பரக்க அவரைப் பார்த்து விட்டுப் பிறகு சுற்று முற்றும் பார்த்தாள். வாசற்படியின் அருகில் நின்ற பொன்னியின் செல்வர் மீது அவளுடைய பார்வை தங்கி விட்டது.

உடனே இளவரசர் தந்தையும் தாயும் இருந்த இடத்தை நெருங்கி வந்தார். தாயின் அருகில் உட்கார்ந்தார்.

மந்தாகினி இளவரசரைத் தன் கையினால் தொட்டுக் கொண்டு சக்கரவர்த்தியின் திருமுகத்தைப் பார்த்தாள். ''இவன் தான் என் புதல்வன்!'' என்னும் பொருள் அந்தப் பார்வையிலிருந்து மிகத் தெளிவாக வெளியாயிற்று.

இவ்வாறு இரண்டு மூன்று தடவை

மந்தாகினி சக்கரவர்த்தியையும் பொன்னியின் செல்வரையும் மாறி மாறிப் பார்த்தாள். பின்னர் கண்களை மூடிக் கொண்டாள். சிறிது நிமிர்ந்திருந்த அவளுடைய தலை, — சக்கரவர்த்தியின் மடியில், — நன்றாகச் சாய்ந்தது.

மந்தாகினியின் உயிர் அவளுடைய உடலை விட்டுப் பிரிந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தி விம்மி அழுததை இன்று வரை யாரும் பார்த்தது மில்லை; கேட்டதுமில்லை.

இன்றைக்கு அவர் 'ஓ'வென்று கதறி அழுததைப் பார்த்தும் கேட்டும் எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

இளவரசர் அருள்மொழி வர்மர் மட்டுமே மனத் தெளிவுடன் இருந்தார்.

அவர் சக்கரவர்த்தியைப் பார்த்துக் கூறினார்:— "தந்தையே! என் அன்னையின் மரணத்துக்காகத் தாங்கள் வருந்த வேண்டியதில்லை. அவர் ம ர ண மடையவேயில்லை. தெய்வமாக அல்லவோ மாறியிருக்கிறார்? என்றென்றைக்கும் நம் சோழ வம்சத்துக்கு அவர் குல தெய்வமாக விளங்கி வருவார்!" என்றார்.

ஆயினும், சுந்தர சோழர் விம்மி அழுவது நின்றபாடில்லை. மந்தாகினியின் மரணத்துக்காகத்தான் அவர் அழுதாரா? அல்லது அதே சமயத்தில் வெகுதூரத்தில் நடந்த இன்னொரு துயர சம்பவத்தின் அதிர்ச்சி அவர் உள்ளத்தில் தோன்றியதனால் அழுதாரா என்று யார் சொல்ல முடியும்?

இளவரசர் அருள்மொழி வர்மர் கூறிய தேறுதல் மொழிமட்டும் உண்மையாயிற்று. பொன்னியின் செல்வர் பிற்காலத்தில் இராஜராஜ சோழர் என்ற பெயருடன் சிங்காதனம் ஏறியபோது 'ஈழத்து ராணி' என்று அவர் அழைத்த மந்தாகினி தேவியின் ஆலயத்துக்காகத் தஞ்சையில் ஒரு கோயில் எடுப்பித்தார். அது சில காலம் 'சிங்கள நாச்சியார் கோவில்' என்ற பெயருடன் பிரபலமாக விளங்கி வந்தது. நாளடைவில் அதன் பெயர் திரிந்து 'சிங்காச்சியார் கோவில்' என்று ஆயிற்று. இன்றைக்கும் தஞ்சை நகரின் ஒரு பகுதியில் 'சிங்காச்சியார் கோவில்' என்ற பெயருடன் ஒரு சிறிய சிதிலமான கோவில் இருந்து வருவதைத் தஞ்சை செல்லுகிறவர்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)



அவனுக்குத் தேவை
ஜோரான ருசி...

அம்மாவுக்கோ
போஷாக்கில்தான் குறி...

இருவரும் விரும்புவது

புதிய கேம்ப்கோ
வின்னர்

இது ஜோரான
ருசியுள்ள சாக்கலேட்
பானம். மற்ற பானங்களைவிட
மும்மடங்கு அதிகமாக வின்னரில்
உள்ள சாக்கலேட் சுவை
குழந்தைகளுக்குக்
குதூகலம் மூட்டுகிறது.

ருசி மட்டுமா? சக்தி தரும் குளுகோஸ்
சத்தும் நிறைந்தது வின்னர்.
எனவேதான் பிள்ளைகளோடு
அன்னையரும் வின்னரையே
விரும்பித் தேர்ந்தெடுக்கின்றனர்.

குழந்தைகளின் முழுமையான
வளர்ச்சிக்கு அத்தியாவசியமான
வைட்டமின்களும் மினரல்களும் நிறைந்த
வின்னர் சூடான மற்றும் குளிர்ச்சியான
பாலில் மிக எளிதாகக்கரைகிறது.

கேம்ப்கோ
வின்னரையே தேர்ந்தெடுங்கள்.
அது ருசியில் 'வின்னர்'.
போஷாக்கிலும் 'வின்னர்'.

இலவசம்
ஒரு
நெட்லான்
ஷாப்பிங்
பேக்



கேம்பகோ
லிமிடெட், மங்களூர்

R K SWAMY/CL/7247

"ஏங்கடா அந்தக் கெடிகாரம்?"

மீண்டும் கர்ஜித்தார் சப்—இன்ஸ்பெக்டர்.

"எனக்குத் தெரியாதுங்க..."

"திருட்டு நாயே, ஒன்ன சும்மா கேட்டாச் சொல்ல மாட்டே. செய்ய வேண்டிய சடங்கைச் செஞ்சாத்தான் உண்மை வரும்."

அவர் கையிலிருந்த லத்தி அவன் கையிலும் முதுகிலும், முழங்காலுக்குக் கீழ்ச் சதையிலும் முத்தமிட்டு விளையாடியது. சுற்றிலும் நான்கைந்து போலீஸ்காரர்கள்... டி.எஸ்.பி. போனில் கூப்பிடும் செய்தியைப் போலீஸ்காரர் ஒருவர் வந்து சொல்ல, அவனைப் பார்த்துக் கொள்ளும்படி போலீஸ்காரர்களிடம் சொல்லி விட்டு நகர்ந்தார் சப்—இன்ஸ்பெக்டர்.

அவனுக்குப் பதினெட்டு வயதுக்குள் இருக்கலாம். ஏற்கெனவே வறுமையில் வாடிய அவனுடைய உடம்பில் பல இடங்களில் கன்றிப் போன காயங்களும், தடிப்புகளும் இருந்தன. விரல்களின் வீக்கம் கையைப் பெரிதாகக் காட்டியது. கலைந்த தலை; தூங்காத கண்கள்; ஒடிசலான தேகம்; விழுந்து விடுவான் போலத் தள்ளாடிக் கொண்டு நின்றான். உடம்பில் ஜட்டி தவிர வேறு துணி இல்லை. இடுப்பில் இருந்த அரைஞாண் கயிறு இருக்கும் இடம் தெரியாமல் போய் விட்டிருந்தது. சப்—இன்ஸ்பெக்டர் போனவுடன், சுற்றியிருந்த போலீஸ்காரர்கள் சுதந்திரமாகப் புகை பிடித்துக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

"டேய் மணி, அவரு வர்ற வரை உக்காந்திரு."


மனிதாபிமானம் உள்ள போலீஸ்காரர் ஒருவர் சொன்னார். சப்—இன்ஸ்பெக்டர் அறைக்குள் நின்று கொண்டிருந்த மணி அங்கேயே சுவரில் சாய்ந்து குத்துக்காலிட்டு உட்கார்ந்து கொண்டான்.

அது ஒரு நீளமான ஹால் போன்ற அறை. ஓரத்தில் ஒரு சிறிய அறை, கதவு இல்லாமல் இருந்தது. அது தான் சப்—இன்ஸ்பெக்டரின் அறை. அங்கிருந்து அந்த ஹால் முழுவதையும் பார்க்கும்படியாய் அமைந்திருந்தது. ஹாலுக்குள் மேஜை, நாற்காலிகள், பெஞ்சு என்று இருந்தன. மேஜையின் மேல் கேஸ்கட்டுகள், வெள்ளைப் பேப்பர், தஸ்தாவேஜுகள், ரூல்தடி, பேப்பர் வெயிட் இத்தியாதிகள் இருந்தன. அந்த ஹாலுக்குள்ளேயே இரும்புக்கம்பி கேட் கொண்ட கைதிகளை அடைத்து வைக்கும் லாக்கப் ரூம் இருந்தது. அதைத் திறந்தாலும், கைதிகளை உள்ளே தள்ளினாலும், வெளியே இழுத்து வந்தாலும் சப்—இன்ஸ்பெக்டருக்குத் தெரியும் படியாக இருந்தது.

பட்ட அடிகளின் வேதனை தாங்க முடியவில்லை. வாய்வறண்டு, நாக்கு உலர்ந்து விட்டிருந்தது. கண்கள் செருகிய நிலையில் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தாய் காலையில் சப்—இன்ஸ்பெக்டரிடம் அழுது புலம்பியது அவன் நெஞ்சில் நிழலாகத் தோன்றியது. அப்போது அவன் மீதே அவனுக்குக் கோபம் பொங்கியது. கூடவே அவர்களை அநாதையாக விட்டு விட்டு இறந்து போன அப்பாவின் நினைவு வந்தது. தன் குடும்பத்தின் வறுமையை நினைத்துக் கொண்டான். யாரை நோவது? ஏழையாய் இருப்பதே பாவமா? எல்லாம் தலையெழுத்து..... அப்பா எதிர்பாராத விதமாக இறந்து விட்டதால், பத்தாம் வகுப்பைப் பாதியிலேயே நிறுத்த வேண்டிய நிலை. அவன் வேலைக்குச் சென்றாக வேண்டிய நிலையில் குடும்பம். அவன் சம்பளத்தில்தான் தாயும், தங்கை சாந்தியும் வாழ்ந்தாக வேண்டும். இக்கற்ற நிலையில் இருந்தபோதுதான் கோபாலன் — அப்பாவின் நண்பர் — அந்தக் கடையில் அவனைச் சேர்த்து விட்டார். மாதம் இருநூற்றைம்பது ரூபாய்ச் சம்பளம். அந்த மளிகைக்கடையில் அவனோடு இன்னும் மூன்று பேர் வேலை செய்தார்கள். எல்லோரும் ஏற்கெனவே ரொம்ப நாளாக அங்கு இருப்பவர்கள். இவன்தான் வேலைக்குப் புதியவன். முதலாளி பொன்னுச்சாமி நல்லவர். அவனை நல்ல முறையிலேயே நடத்தினார்.

வேலைக்குச் சேர்ந்த மூன்றாவது மாதத்தில் அந்தச் சம்பவம் நடந்தது. அன்று வழக்கம் போல் கடைக்குச் சென்ற மணி, தன் வேலையில் ஈடுபட்டான். வேலைக்காரர்களில் இருவர் அன்று வரவில்லை. மத்தியான உணவுக்குச் செல்லும் நேரம்.

என்ன செய்ய முடியும்?



இன்னொரு கடைப்பையன் முதலாளிக்குச் சாப்பாடு எடுத்து வரப் போய் இருந்தான். முதலாளியும் மணியுமே அப்போது கடையில் இருந்தனர். முகம் கழுவி விட்டு வந்த முதலாளி திடுக்கிட்டார். காரணம், தனது விலையுயர்ந்த கைக்கடிகாரம் கழற்றி வைத்த இடத்தில் இல்லாமல் போனதே. எங்கே போயிருக்கும் அது? யார் எடுத்திருப்பார்கள்? குழம்பிப் போன முதலாளி மணியிடம் கேட்டார். தெரியாதென்று சொல்லி அவனும் சேர்ந்து தேடினான். கடிகாரம் கிடைப்பதற்கான வழியைக் காணோம். முதலாளி மணியிடம் அன்பாகக் கேட்டார்; அதட்டலாகக் கேட்டார்; மிரட்டினார்; கடைசியில் போலீசில் புகார் செய்தார்.

"ஏண்டா தூங்கிறியா நீ...?" என்று சொல்லிக் கொண்டு பூட்ஸ் காலால் எட்டி உதைத்தார் திரும்பி வந்த சப்—இன்ஸ்பெக்டர். அரைமயக்கத்தில் இருந்த மணி எதிர் பாராத தாக்குதலால் அதிர்ச்சியுடன் எழுந்து நின்றான்.

"சொல்லுடா. கெடிகாரத்தை எங்க வச்சிருக்கே? யார்கிட்டக் கொடுத்திருக்கே?"

"நான் பாக்கலீங்க. எனக்குத் தெரியாதுங்க."

சப்—இன்ஸ்பெக்டர் எரிச்சலுடன் ஏட்டைக் கூப்பிட்டார். "இவனை 'லிப்ட்'ல ஏத்துங்க. நான் ரவுண்ட்ஸ் போறேன். நான் வர்ற வரைக்கும் 'லிப்ட்'ல இருக்கட்டும். அப்பத்தான் உண்மையைச் சொல்வான்..." ஆணையிட்டு விட்டு சப்—இன்ஸ்பெக்டர் சில போலீஸ்காரர்களுடன் வேனில் ஏறிச் சென்று விட்டார்.

ஆறடி உயரம்; ஆஜானுபாகுவான உடம்பு; கறுகறுவென்ற கடாக் கொம்பு மீசை. அவனது பேட்டையையே கலக்கிக் கொண்டு இருக்கும் ரவுடி ரங்கசாமியை நினைப் பூட்டிக் கொண்டிருந்தார் அந்த ஏட்டு. அவரைப் பார்க்கும்போதே அவனது அடிவயிற்றிலிருந்து பந்து போன்ற ஒன்று பெரிதாகத் திரண்டுவந்து அவனது தொண்டையை அடைப்பது போலிருந்தது.

"என்னடா... இருட்டு முழி முழிக்கிறே?" பளீரென்று கன்னத்தில் ஓங்கி அறைந்தார். தலை சுற்றிப்பொறி தட்டியது. இருகைகளையும் அடிபட்ட கன்னத்தில் வைத்துக் கொண்டான்.

"ஏய் எய்ட்பார்ட்டி, 'லிப்ட்' எடு."

உடனே எய்ட் பார்ட்டி என்று அவரால்

'தேர்'



"அரசியல்வாதியை மாப்பிள்ளையாத் தேர்ந்தெடுத்தது தப்பாப் போச்சு..."

"ஏன்?"

"கல்யாணப் பத்திரிகையை போஸ்டராக அச்சடித்துத் தெருத் தெருவா ஒட்டணுங்கிறார்!"

— சு. வேங்கடன்.

அழைக்கப்பட்ட போலீஸ்காரரும் அங்கிருந்த இன்னொரு போலீஸ்காரரும் சேர்ந்து, அவனது இரண்டு கைகளையும் முதுகுக்குப் பின்னால் கொண்டு போய் ஒரு கயிற்றால் கட்டினார்கள். அதன்பின் அவனது கைகளைப் பின்புற வாக்கிலேயே உயரத்தூக்கி, மேலே விட்டத்தில் இருந்த ஓர் இரும்புக் கொக்கியில் கயிற்றைக் கட்டித் தொங்க விட்டனர். இப்போது அவன் கால்கள் தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. அவனது உடல் கேள்விக்குறி போல் வளைந்திருந்தது. வௌவால் போல் தொங்கினான். அவனது இரண்டு கைகளின் தோள்பட்டையும் பிய்ந்து வந்து விடும் போலிருந்தது. நரக வேதனை என்பது இதுதானா? இதை விடச் செத்து விடலாம் போலத் தோன்றியது. எவ்வளவு நேரம் இப்படியே தொங்குவது? உடம்பெல்லாம் வலித்தது. கண்களை மூடினான். பொறுக்கமுடியவில்லை. கண்ணீர் வற்றாமல் வந்தது. அழுதான்; சத்தமிட்டு அலறினான்; துடித்தான். இவை எதுவும் அங்கிருந்த ஏட்டையும் போலீஸ்காரர்களையும் பாதித்ததாகத் தெரியவில்லை. அந்த அலறலில் — அவன் துடிப்பில் ஓர் இன்பத்தைக் கண்டவர்கள் போல் அதை ரசித்துக் கொண்டு இருந்தனர். சிரித்துப் பேசி பீடிப் புகையில் லயித்துப் போய் இருந்தார்கள்.

திடீரென்று ஒரு மாற்றம்; இரண்டு போலீஸ்காரர்கள் கட்டை அவிழ்த்து அவனைக் கீழே இறக்கி விட்டனர். அவனுக்கு அப்போதுதான் சுயநினைவு வந்தது. எவ்வளவு நேரம் அப்படித் தொங்கிக் கொண்டிருந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை. எதற்காக இப்போது 'லிப்ட்'டிலிருந்து தன்னை இறக்கினார்கள் என்பதும் புரியவில்லை. சோர்வுடன் ஓர் ஓரத்தில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தான். சப்—இன்ஸ்பெக்டர் 'யாரிடமோ பேசிக் கொண்டிருந்தார்.

"டேய் மணி! ஏன் இவ்வளவு கஷ்டப் படுறே. நாங்க சொல்ற மாதிரி இவங்கிட்டதான் கெடிகாரத்தைக் கொடுத்தேன்னு ஒருத்தனைக் கையைக் காட்டிட்டு நீ தப்பிச்சுக்கடா..." போலீஸ்காரர் ஒருவர் மெல்லிய குரலில் சொன்னார்.

தன் மீது உண்மையிலேயே அனுதாபப் பட்டு அந்தப் போலீஸ்காரர் அப்படிச் சொல்வதாக நினைத்துக் கொண்டான். போலீஸ்காரர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள் போலும் என்று நினைத்தான். யாரையாவது கையைக் காட்டச் சொல்கிறாரே! அது எப்படி முடியும்? இவரிடந்தான் கொடுத்தேன் என்று பொய்யாக ஒருவரைக் காட்டிக் கொடுப்பதா? அது என்ன நியாயம்? என்ற நினைப்பும் கூடவே வந்தது. ஒன்றும் புரியவில்லை அவனுக்கு.


"இவனை லாக்கப்ல போடுங்க. அஞ்சு நாளா இவனை ஒண்ணும் டீல் பண்ண முடியலை. இன்னக்கி நைட் இவன டீல் பண்ணலாம்னு நெனைச்சேன். வேற வேலை வந்துருச்சி. யார்ப்பா நைட் டூட்டி? ஜாக்கிரதையாப் பாத்துக்கங்க!" என்று சொல்லிவிட்டு சப்—இன்ஸ்பெக்டர் போய் விட்டார்.

மறுபடியும் லாக்கப் ரூமா? நினைக்கும் போதே குமட்டியது. அதற்குப் போலீஸ்காரர்களின் சித்திரவதை எவ்வளவோ பரவாயில்லை. ஏன் இப்போது அனுபவித்த 'லிப்ட்' கூடப் பரவாயில்லை என்று நினைத்தான். 'அஞ்சு நாளா இந்த லாக்கப் ரூம்ல எப்படி இருந்தேன்?' எண்ணிப் பார்த்தான். ஆதிமனிதனின் குகை போல இருந்தது அது. இரும்புக் கம்பி கேட் தவிர, வேறு வழி இல்லை; ஜன்னலும் இல்லை. காற்றும் வெளிச்சமும் அந்தக் கேட் வழியாகத்தான் வர வேண்டும். உள்ளே லைட்டும் கிடையாது. ஒரே இருள்மயம். மூச்சு முட்டியது. கைதிகள் அனைவரும் அங்கு உள்ள சட்டியில்தான் சிறுநீர் கழிக்க வேண்டும். நாற்றம் குடலைப் புரட்டியது. பல நாள் குளிக்காமல் இருப்பதால் துர்நாற்றம் வேறு. உலகத்தில் உள்ள கொசு, மூட்டைப் பூச்சிகளில் பாதி அங்கேதான் ஜீவித்தன.

"என்ன, விசாரணை முடிஞ்சதா?" — லாக்கப் ரூமில் உள்ளே தள்ளப்பட்டவுடன் ஏகாம்பரம் — அப்போது அவனுடன் அந்த லாக்கப்பில் இருந்த ஒரு மாமூல் கிராக்கி — அன்போடு கேட்டான்.

"என்ன சொன்னே...?" என்றான் அவன் மறுபடியும்.

ஐடிபிஐ-முதலீட்டுப் பத்திரங்கள் முதலீட்டு ஆதாய வரி விலக்குப் பெற ஒரு கவர்ந்திடும் வழி



Sobhagya-B/89 TAM

- ஆண்டு முழுவதும் சமநிலையில் கிடைக்கும்.
- வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண் 54E-ன் கீழ் முதலீட்டு ஆதாய வரி விலக்கு.
- செல்வ வரிச் சட்டம், 1957, பிரிவு எண் 5(1)xvie)-ன் கீழ் செல்வ வரி விலக்கு.
- வருமான வரிச் சட்டம், பிரிவு எண் 80-Lன் கீழ் வருமான வரி குறைப்பு.
- ஆண்டொன்றுக்கு 9% விகிதத்தில் ஆறு மாதத்திற்கொரு முறை வட்டி வழங்கப்படும்.
- முதலீடு செய்தவர் விரும்பினால் 3 ஆண்டுகட்கான மொத்த வட்டியும் தள்ளுபடி முறையில் முன்னதாகவே ஒரே நேரத்தில் வழங்கப்படும்.
- எவ்வித வரியும் வட்டி வழங்கும்பொழுது கழிக்கப்படமாட்டாது.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக்கொள்ளும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள ஐடிபிஐ ஆபிஸை அணுகுங்கள் அல்லது மானேஜருக்கு எழுதுங்கள்:

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலபா, பம்பாய் 400 005

''எனக்குத் தெரியாதுன்னு சொன்னேன்.''

''யாராவது ஒருத்தனைக் கையைக் காட்டு; நாங்க அவன்கிட்ட இருந்து கெடிகாரத்தை வசூல் பண்ணிக்கிறோம்னு சொல்லியிருப்பாங்களே.''

''சொன்னாங்க.''


''மணி, நான் நேத்துச் சொன்னதை நெனைச்சுப் பார். அது படி செய். இந்தா பீடி. சும்மா ஒரு தம் அடி.''

அவன் கொடுத்த பீடியை வாங்கிக் கொண்டான். புகை பிடிப்பதா என்று யோசித்தான். உடலிலும் உள்ளத்திலும் இருந்த வலி புகைக்கத் தூண்டியது. முதன் முதலில் புகையை உள்ளே இழுத்து விட்டது எப்படியோ இருந்தது. இருமல் வந்தது. மூச்சுத் திணறுவது போல் இருந்தது. மெல்ல மெல்ல அது ஓர் ஆறுதலைத் தருவது போல் தெரிந்தது. வலியையும், வேதனையையும் குறைப்பது போல் இருந்தது. அப்படியே யோசனையில் ஆழ்ந்தான். நேற்று இந்த ஏகாம்பரம் சொன்னது ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தது.

'ஏய் மணி நான் சொல்றதைக் கவனமாக் கேளு. நீ சின்னப் பையன். புதுசு வேற. நீ நிரபராதின்னு ஒன்னப் பாத்தாலே தெரியும். ஆனா இவங்க நம்ப மாட்டாங்க. இந்த நாட்ல சட்டப்படி எதுவும் நடக்கறதில்ல. சட்டப்படின்னா ஒருவனைப் புடிச்ச இருபத்தி நாலு மணி நேரத்தில கோர்ட்ல ஆஜர் படுத்தணும். ஒன்ன அஞ்சு நாளா வச்சிருக்காங்க. என்னப் புடிச்சு ஒரு வாரத்துக்கு மேல ஆச்சு. என்னை விடு. இப்படித்தான் நடக்கும். அதுக்குப் பேசாம, நான்தான் கெடிகாரத்தைத் திருடினேன்னு சொல்லி இவன்கிட்டத்தான் கொடுத்து இருக்கேன்னு சும்மானாச்சும் ஒருத்தனைக் கையைக் காட்டு. ஒனக்கு அடியாவது மிஞ்சும். சித்திரவதை இருக்காது. யாரோ ஒருவனிடமிருந்து ஒரு கெடிகாரத்தை மீட்டியது போலவும், நீதான் அதைத் திருடி அவனிடம் கொடுத்தது போலவும் கேஸைப் போட்டு, கோர்ட்டில் ஆஜர்படுத்தி, ரிமாண்டு பண்ணி ஜெயிலுக்கு அனுப்பிடுவாங்க. இவங்ககிட்ட இருந்து தப்பிச்சாப் போதும். அங்க போயிட்டா இவ்வளவு கொடுமை இருக்காது. அடி இருக்காது. இந்த லாக்கப் ரூம் போல அங்க இருக்காது. மூணு வேளையும் சாப்பாடு கிடைக்கும். கௌரவம், மதிப்பெல்லாம் பார்க்காதே. திருட்டுப் பட்டம் வந்திருச்சு. ஸ்டேசனுக்கும் வந்தாச்சு. எல்லா மரியாதையும் அனுபவிச்சாச்சு. இதுக்கு மேல என்ன இருக்கு? நம்மள மாதிரி ஏழைங்கள்ளாம் உண்மைக்காகப் போராடுவேன்னு சொல்வதெல்லாம் சுத்தப் பயித்தியகாரத்தனம்.'

ஏகாம்பரம் சொன்ன இந்த வார்த்தைகள் மறுபடி மறுபடி அவன் மனத்தில் வந்து மோதிக் கொண்டிருந்தன. உடல் வேதனையும், உள்ளச் சோர்வும் சேர்ந்து கொண்டன. எல்லாவற்றையும் தாங்கும் சக்தி இருப்பதாகத் தெரியவில்லை. ஏகாம்பரம் சொல்வது போல் குற்றத்தை ஒப்புக் கொண்டு யாரையாவது கைகாட்டி விடுவதே நல்லது என்று பட்டது. அயர்ச்சியில் தன்னை மறந்து தூங்கிப் போனான்.

ஓர் வேண்டுகோள்



சுமார் 400 ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருக்க இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவ வசதியும் அளித்து வரும் சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் ஆண்டுதோறும் தீபாவளி அன்று குழந்தைகளுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொது மக்கள் பண உதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை ஒரு புதிய பாதையில் கொண்டு செல்லும் ஆசிரமத்தின் அரியதொரு செயலையும் திக்கற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதையும் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறோம். எனவே, இது சம்பந்தமாக தாங்கள் அளிக்கும் உதவி ஆதரவற்ற குழந்தைகளுக்கும், ஆசிரமத்தில் இருக்கும் முதியோர் இல்லத்தின் முதியோர்களுக்கும் மனமகிழ்ச்சியுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாட அவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், முதியோர்களுக்கு பிரத்தியேகமாக சுமார் பத்து இலட்சம் ரூபாய் செலவில் முதியோர் இல்லம் கட்டி 100 முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுக்க வழிவகைகள் செய்து வருகிறோம். அதற்கும் பொது மக்கள் நிதி உதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொது மக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கும் அளிக்கப்படும். பொது மக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக,

நிர்வாகி,

சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,

நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை 600 059

அடுத்த நூற்றாண்டு:

கம்ப்யூட்டர் இசை 9

சென்ற வாரக் கேள்வியின் விடை:

மிடி என்பது 'மியூஸிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட் டிஜிட்டல் இண்டர்ஃபேஸ்' என்பதன் சுருக்கம். நவீன சங்கீதத்தில் சின்தஸைஸர், ஸீபோர்டு என்று இரண்டு சமாசாரங்கள் உண்டு. ஏறக்குறைய அத்தனை இசைக் கருவிகளையும் போல ஒலிக்கக் கூடிய மின்னணு இசை இயல் இப்போது பிரபலமாகிவிட்டது. இவ்வகை எலக்ட்ரானிக் சங்கீதக் கருவிகளை ஒரு கம்ப்யூட்டர் மூலம் இயக்கி, கம்ப்யூட்டரிலிருந்து அவைகளுக்கு 'இப்படி வாசி' என்று செய்தி தர, ஒரு செய்திப் பரிமாற்றச் சங்கேத முறை அமைத்து, எல்லாக் கம்பெனிக்காரர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அமைப்பைத்தான் மிடி என்கிறார்கள். இந்த மிடி வசதியிருக்கும் கருவிகளைக் கம்ப்யூட்டர் மூலம் இயக்கலாம். ரோலண்டு, யமாஹா போன்ற இசைக் கருவிகளில் இம்மாதிரி கம்ப்யூட்டர் இசை பண்ண முடியும்.



* கம்ப்யூட்டரில் இளையராஜா இசையமைக்கிறார்... (படம் — நன்றி: ஹிந்து)

எப்படி என்று சொல்லுமுன், நம் காதைப் பற்றிக் கொஞ்சம். காதுகள் கேட்பதற்காக ஏற்பட்டவை அல்ல! மீன்களும் ஆமைகளும் காதில்லாமல் சமாளிக்கின்றன. முதுகெலும்புள்ள பிராணிகளுக்கு ஆரம்பத்தில் உள் காது மட்டும்தான். சமனாக நிற்கவும், நடக்கவும், பாலன்ஸ் பண்ணவும் மட்டும்தான் காது ஏற்பட்டது. எது மேல், எது கீழ் என்று புவிஈர்ப்பிலிருந்து கண்டுபிடித்து, விழாமல் நடக்கவும் ஓடவும் ஏற்பட்ட காது, பரிணாமத்தின் பின் பகுதிகளில்தான் நடுக்காது, வெளிக்காது என்று சேர்ந்து ஒலிகளின் வித்தியாசங்களையும் உணர்ந்து கொள்ளப் பயன்பட்டது. இப்போது கூடக் காது எப்படிக் குரல்களை அடையாளம் கண்டு கொள்கிறது என்பதை விஞ்ஞானிகள் முழுவதும் கண்டுபிடிக்கவில்லை.

ஒலி அதிர்வுகளைக் காது முதலில் வாங்கிக் கொண்டு, அவைகளை மின் அதிர்வுகளாக மாற்றி, மூளைக்கு அனுப்புகிறது. மூளை அதை அலசிப் பதம் பிரிக்கிறது என்றுதான் பொதுவாக நம்புகிறோம். செவிப் பறையில் படும் ஒலி அலைகளை மூன்று சிறிய எலும்புகளின் மூலம் உள்ளறைக்கு வாங்கிக் கொண்டு, அங்கே திரவத்தில் சிலிர்க்கும் சின்னச் சின்ன ரோமங்கள் மூலம் காக்லியா பகுதிக்கும் மூளையில் உள்ள 'கார்ட்டெக்ஸ்' பகுதிக்கும் சிக்கலான இணைப்புக்கள் மூலம் செய்தி போகிறது. அதன்பின் எப்படிப் பகுதி பிரிக்கிறது என்பது பற்றி முழுவதும் தெரியவில்லை.

நம் காதுகள் இருபதிலிருந்து இருபதாயிரம் வரை அலைத் துடிப்புக்களை உணரும் திறமை பெற்றவை. 160 வகைச் சுருதிகளைப் பிரித்து உணர வல்லவை. சின்ன முணுமுணுப்பிலிருந்து, பேரிடி வரைக்கும் 350 தனிப்பட்ட ஒலி அளவுகளாகப் பாகுபடுத்தக் கூடியவை. ஒலியின் தரத்திலும் வேறுபடுத்தி, இது குரல், இது குழல் என்றும் சொல்லக் கூடியவை. பத்துப் பேர் பேசிக் கொண்டிருந்தால், பத்மநாபனின் குரலை மட்டும் பிரித்து, அவன் என்னைப் பற்றி என்ன சொல்கிறான் என்று தேர்ந்தெடுத்துக் கேட்க வல்லவை.

சுஜாதா

காது ஒரு மகா ஆச்சரியம்! அது எப்படி இந்தச் சாகசங்கள் செய்கிறது என்பது பற்றி லேட்டஸ்ட் ஹ்யூகோ ஜுக்கரெல்லி என்பவர் சொல்லியபடி —


காது ஒலிகளைப் பிரிப்பது, உள் காதிலிருந்து சுமார் 1000 முதல் 2000 வரை அலைத் துடிப்புள்ள அடிநாதம் – சொந்தச் சுருதி, ஒன்றை அதுவே உற்பத்தி செய்து, அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்து, வெளிநாதங்களை அலசுகிறது. மிக மிக மௌனமான இடத்தில் உங்களால் உங்கள் காதின் உள் நாதத்தைக் கேட்க முடியும். இப்படி ஒரு சித்தாந்தம்தான் அண்மையில் அதிகம் பேசப்படுகிறது.

ஜுக்கரெல்லி, எந்த ஆசாமிக்கும் — அது உலகப் பேரழகியாக இருந்தாலும் வலது காதும் இடது காதும் அண்ணத்தில் ஒரே மாதிரி இருக்காது. கொஞ்சம் முன்னே பின்னே ஷேப் மாறி இருந்தே ஆக வேண்டும். அதிலும் காது ஒலிகளைப் பாகுபடுத்துவதன் சூட்சமம் இருக்கிறது என்கிறார். கண்ணாடியில் பார்த்துக் கொண்டு அவர் சொல்வது சரிதானா என்று சொல்லுங்கள்!

* எலக்ட்ரானிக் கீபோர்டு

காது எப்படிக் கேட்கிறது என்பதைவிட, அது அவ்வளவு திறமையாகக் கேட்கிறது என்பதில்தான் கம்ப்யூட்டர்காரர்களுக்குக் கவனம். இசை என்பதன் அர்த்தத்தையே — வீச்சையே — போக்கையே மாற்றி விட்டார்கள்.

புல்லாங்குழலோ, கித்தாரோ இரண்டிற்கும் அலை வடிவங்களில்தான் வித்தியாசம். அதே அலை வடிவமுள்ள மின்னலைகளை ஒரு சிலிக்கன் சில்லைக் கொண்டு எழுப்பினால், நம் காது அது புல்லாங்குழல் அல்லது கித்தார் என்றுதான் சொல்லுமே தவிர, சில்லு பற்றிக் கவலைப்படாது. இவ்வாறு ஒரே சில்லிலிருந்து அலை வடிவத்தை மாற்றி, அதைக் குழல் போல, வீணை போல,



கித்தார் போல ஒலிக்க வைக்க முடியும். இந்த ஆதார தத்துவத்தை வைத்து, ஐம்பதுகளிலேயே மின்னணுவியல் மூலம் சங்கீதம் பண்ண ஆரம்பித்தார்கள்.

முதலில் சர்ச்சுகளில் வாசிக்கும் ஆர்கன் ஒலியை உண்டுபண்ணும் மின் கருவிகளைக் கொண்டு வந்தார்கள். ஹாமண்ட் ஆர்கன் என்பது கண்டுபிடித்தவர் பெயரிலிருந்து பிரபலமாயிற்று.

பின், வைப்ரபோன் க்ளாவியோலின் என்று தனிப்பட்ட கருவிகளாக வந்தன.

சில்லுகள் கண்டுபிடித்து, எழுபதுகளிலும் எண்பதுகளிலும் அவை பெருக, ஒரே சில்லு பல்வாத்தியச் சில்லாக மாறியது. ஜப்பானியர்கள் இந்தத் துறையில் வியாபார சாத்தியங்களை உணர்ந்து. ஜப்பானில் யமாஹா என்கிற கம்பெனியும் அமெரிக்காவில் ரோலண்டு என்கிற கம்பெனியும் பிரமிக்கத்தக்க முன்னேற்றங்களைக் கொண்டு வந்து விட்டார்கள். காஸியோ நிறுவனமும் இதில் பலவிதமான புதுமைகள் செய்தது.

ஜப்பானில்இன்றுசுமார் ஆயிரம்ரூபாய்க்குள் கிடைக்கும் கீபோர்டில் கீழ்க்காணும் வசதிகள் உள்ளன.

நூறு வாத்தியங்களின் குரல்களை உண்டாக்கலாம். இவைகளை 5050 வகைகளில் வாசிக்கலாம். வாத்தியக் குரல்களை நடுங்க வைக்கலாம்; இழுத்தடிக்கலாம்; வெட்டலாம். அவைகளுக்கு நூறு தாளங்கள், திடும் திடும் தரலாம். எது வாசித்தாலும் கூடவே இனிமையான கார்டுகள் என்று சொல்லக்கூடிய ஒத்திசைத் துணுக்குகள் உங்கள் பாட்டைத் தொடர வைக்கலாம். அபஸ்வரம் என்பதே கிடையாது. நீங்கள் வாசிப்பது உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். இவ்வளவு நன்றாக வாசிக்கிறோமா என்று சந்தேகமாகச் சுற்றுமுற்றும் பார்ப்பீர்கள்.

ஒரு பாட்டு வாசித்து நன்றாக இருந்தால், அதை உடனே வாத்தியமே ஞாபகம் வைத்துக் கொண்டு, மறுபடி வாசித்துக் காண்பிக்கும். இவையனைத்தும் சுமார் ஆயிரம் ரூபாய் விலையில் கிடைக்கக் கூடிய கீபோர்டில்!

இளையராஜா போன்றோர் இசைக்குழுவினர் வைத்திருக்கும் ரோலண்டு வகைப் பெரிய சின்தஸைஸர்களில் வசதிகள் ஏராளம். அவைகளை ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கம்ப்யூட்டரிலிருந்து ஒரு மெட்டு எழுதி, இன்னின்ன வாத்தியங்கள் கலந்து, இந்தத் துடிப்பில் இப்படி வாசி என்று கட்டுப்படுத்த முடியும். ஆரம்ப மெட்டுக்கு ஒரு ராஜா இருந்தால் போதும். மற்ற வாத்திய கோஷ்டி பூரா சில்லு.

கேள்வி: அமெரிக்காவில் ஒரு பிரபல பாப் பாடகர் பாட்டு, வாத்தியம், பின்னணி எல்லாமும் ஒருவரே செய்கிறார். அவர் பெயர் சொல்பவருக்கு (குலுக்கல் முறையில் ஒருவருக்கு) ரூபாய் இருபத்தைந்து பரிசு. விடை வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 2.10.89.

(தொடரும்)


"லஞ்சம் வாங்குறதிலேயும் அவர் படு பயங்கர ஆள்!"

"எப்படிச் சொல்றே?"

"கவர்ல வச்சுப் பணம் கொடுத்தா, பணத்தை எடுத்துக்கிட்டுக் கவரைத் திருப்பித் தந்து பதினைந்து காசு கேட்கிறார்!"

— ஆர். என். கண்ணன்.





"எதெதுக்குத்தான் போராட்டம் செய்யறதுன்னு விவஸ்தையே இல்லாமப் போச்சு..."

"ஏன்...?"

"தாம் ஆரம்பித்துள்ள புதிய கட்சிக்குப் போதுமான உறுப்பினர்கள் இல்லைன்னு அந்தத் தலைவர் மறியல் செய்யறாரே...!"

— ஆர். வசந்தகுமார்.

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் செரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது செரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை செரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: செரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: செரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது செரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

செரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

R.K SWAMY/FSL/5112/TAM

அம்மா உயில் எழுதி விட்டாள். இதை முதன் முதலில் ரங்கசாமி மாமாதான் வந்து சொன்னார். மனசு 'திக்'கென்றது அப்போது சங்கரனுக்கு.

உடம்பு ஏதாவது சரியில்லையா என்ன? ஆபீசில் இன்ஸ்பெக்ஷன் அவஸ்தைக்கு நடுவேயும் இரண்டு நாள் லீவு போட்டு விட்டு ஓடிப் போய்த் திருச்சியில் நின்றான்.

அம்மா எப்போதும் போலக் கொல்லைப்பக்கம் இடுப்பில் கை வைத்துக் கொண்டு, தென்னை மரமேறியிடம் ஏதோ இரைந்து கொண்டிருந்தாள்.

"வாடா சங்கரா... என்ன திடும்னு.. சேலத்தில எல்லாரும் சௌக்கியம்தானே?" என்று கம்பீரமாகக் கேட்ட போது, 'நீ உயில் எழுதின விஷயம் அறிந்து போக வந்தேன்' என்று சொல்ல முடியாமல் இவன்தான் நாணிக் கோணினான்.

"என்னங்க... ஆபீசுலேர்ந்து வந்ததும் வ்ராமயும் ஏன் இப்படி பிரமை புடிச்ச மாதிரி நிக்கிறீங்க? டிபன் சாப்பிடுங்க. கோவிலுக்கு வேணாப் போயிட்டு வரலாம்."

மனைவியின் இந்தக் குரலைக் கேட்ட பிறகும் சங்கரனால் அம்மாவின் உயில் பற்றிய நினைவுகளை உதறி விட முடியவில்லை. அலுப்பாக ஈஸிசேரில் சரிந்தான்.

"ஒண்ணும் வேணாம். அம்மா உயில் எழுதின விவரம்தான் தெரிந்து விட்டதே. இன்னும் என்ன இருக்கிறது சாமியிடம் போய்க் கேட்க?"

மனைவி அவனை வியப்பாகப் பார்த்து விட்டு மறுபுறம் நகர்ந்தாள்.

"அம்மா... இன்னும் ஒண்ணு குடும்மா!" சங்கரனின் பெரிய பையன் ரமேஷ், வாசலில் விளையாட்டின் இடையில் ஓடி வந்து தாயைச் சூழ்ந்து கொண்டான்.

"போடா... தீந்து போச்சு. போ, போய் விளையாடு..." மனைவி ரமேஷை விரட்டுவதைச் சாதாரணமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் சங்கரன்.

நேற்று அவன் அம்மா அவனிடம் கொடுத்தனுப்பிய ஜாங்கிரி எவர்சில்வர் தூக்கில் இன்னும் மிச்சம் இருக்கும் நிச்சயம்.

இவன் திருச்சிக்கு அம்மாவைப் பார்க்கப் போனதும் கழுகு மாதிரி உடனே மதுரையிலிருந்து சங்கரனின் தம்பியும் வந்து விட்டான் தாயைப் பார்க்க.

இவனுக்கு ரங்கசாமி மாமா மூலம் விஷயம் தெரிந்த மாதிரி, தம்பிக்கும் யாராவது சொல்லியிருக்க வேண்டும்! அண்ணனைப் பார்த்து அவனும் அசடு வழிந்தது சங்கரனுக்குப் புரிந்தது.

இப்படி அண்ணனும் தம்பியும் முன்னறிவிப்பில்லாமல் வந்தது அம்மாவுக்கே சிரிப்பாய் இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அம்மாதான் சரியான அழுத்தக்காரி ஆயிற்றே. 'என்னடா இரண்டு பேரும் திமுர்னு வந்திருக்கீங்க?' என்று தப்பித் தவறிக் கூட கேட்கவில்லை.

பாக்கியம் மாமியை விட்டு ஜாங்கிரி செய்யச் சொன்னாள். பெரியவனுக்கு இருபத்தி ஐந்து. சிறியவனுக்கு இருபத்தி ஐந்து என்று ஜாங்கிரியைக் கட்டிக் கொடுத்து அனுப்பினாள். இருபத்தைந்துமா ஒரு நாளுக்குள் தீர்ந்து போயிருக்கும்?

"அம்மா... ஜாங்கிரி ரொம்ப நல்லா இருக்கு. இன்னும் ஒண்ணு குடும்மா..." ரமேஷ் அம்மாவைக் கெஞ்ச ஆரம்பித்தான்.

"இல்லை.. தீர்ந்திடுச்சு போடான்னா..." மனைவி சீறினாள். ரமேஷை விசிறிக் காம்பால் அடிப்பேன் என்று மிரட்டித் துரத்தினாள். சங்கரன் சலனமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். நினைவுகள் தொடர்ந்தன.

அவர்கள் கிளம்புவதற்கு முன் தினம், அம்மா, தானாகவே உயில் எழுதின விவரம் சொன்னாள்... கடைக்குப் போனேன். கத்தரிக்காய் வாங்கினேன் என்கிற மாதிரி ரொம்பச் சாதாரணமாய்ச் சொன்னாள்.

"இந்தத் தில்லை நகர் வீட்டை உன் தம்பிக்கும், கிராமத்துப் பெரிய வீட்டை உனக்கும்னு எழுதியிருக்கேண்டா சங்கரா..." என்ற போது சங்கரனுக்குத் திக்கென்றது. ஏமாற்றத்தில் நேர்ந்த 'திடுக்'.

தில்லைநகர் வீடுதான் தற்சமயம் அம்மா வசிப்பது. மாடியில், சைடில் என்று போர்ஷன்களை வாடகைக்கு விட்டு நல்ல பணம். முத்தரச நல்லூர் தாண்டியிருக்கும் அக்கிரகாரத்துப் பழைய வீடு, பெயரில்தான் பெரிது. முந்நூறு ரூபாய் வாடகைதான் வந்து கொண்டிருந்தது அதில். அதுதானா எனக்கு...

ச்சே... ஓரவஞ்சனை.. தம்பி கண்களில் வெண்ணெய். எனக்குச் சுண்ணாம்பு. அம்மா மாறிப் போய் விட்டாள். பிறந்த நாளிலிருந்து அப்பா இல்லாத குறை தெரியாமல் வளர்த்த அம்மா — தம்பிக்கும் தனக்கும் சமமான பாசம் காட்டிய அம்மா — எதனாலோ மாறி விட்டாள்.

பார்வை



"அம்மா... சாப்பிட ஏதாவது இருக்காம்மா?" சங்கரனின் இரண்டாவது பையன் சுரேஷ் இப்போது உள்ளே ஓடி வந்தான்.

"ஜாங்கிரி சாப்பிடறியா சுரேஷ்.. பாட்டி அனுப்பிச்சது" என்றாள் மனைவி.

"சரிம்மா" சுரேஷ் முகம் மலர வாங்கிக் கொண்டான்.

"ஏய்... வா இங்கே..." சங்கரன் திடீரென்று ஈஸிசேரிலிருந்து எழுந்து மனைவியை நோக்கி இரைந்தான். அவன் முகம் சிவந்தது.

"ஏண்டி உங்களுக்குள்ள இப்படி ஒரு ஓரவஞ்சனை. பெரியவன் என்ன பாவம் பண்ணான்? குழந்தை ஒரு ஜாங்கிரி குடுன்னு கெஞ்சினான். 'போ போ'ன்னு விரட்டிட்டு இவனுக்கு மட்டும் கேக்காமலே குடுக்கிறே. முதல்ல ரமேஷைக் கூப்பிட்டு அவனுக்கும் குடு."

மனைவி கொஞ்சம் ஆச்சரியமாகச் சங்கரனை ஏறிட்டாள். பிறகு ஒரு ஜாங்கிரியை எடுத்து சுரேஷின் கையில் கொடுத்து அனுப்பி விட்டு மெதுவாக

ஆர்.கே.பத்மா

அவனை நோக்கி வந்தாள்.

''என்ன முறைக்கிறே? ரமேஷுக்கும் ஒண்ணு குடுக்கப் போறயா இல்லையா?''

''எனக்குத் தெரியும். நீங்க உங்க வேலையைப் பாருங்க...'' என்றாள் அமைதியாக.

''அம்மாவாம நீங்கள்லாம். ராட்சசிங்க...'' சங்கரன் வெறுப்பைக் கொட்டினான்.

''நீங்கள்லாம்னா... நானும் யாரும்?'' என்று கேட்டவளைப் பார்க்காமலே சங்கரன் சொன்னான்.

''எல்லாம் நீயும் உன் மாமியாரும்தான்.''

மனைவி காக கொட்டிய மாதிரி சிரித்தாள். மெல்ல அவனை நெருங்கினாள். நெற்றியைத் தடவினாள்.

''நம்ம கல்யாணத்தின் போது அத்தை எனக்கு எத்தனை நகை போட்டாங்க?'' என்றாள் மிருதுவாக.

''அஞ்சு பவுன்.''

''உங்க தம்பி பொண்டாட்டிக்கு?''

''அஞ்சுதான்'' என்றான் சங்கரன். நெருங்கினாள்.

''உங்களை எது வரைக்கும் படிக்க வைச்சாங்க?''

''பி.ஏ.''

''உங்க தம்பியை?'' — கைகளைப் பற்றினாள் வாஞ்சையாக.

''பி.ஏ.தான்!'' என்றான் மாணவனைப் போல.

''உங்களுக்கு எங்கே வேலை?''

''கவர்ன்மெண்ட்.''

''உங்க தம்பிக்கு?''

''பிரைவேட் கம்பெனி...'' எரிச்சலாய் வந்தது அவனுக்கு.

''நமக்கு இரண்டு பிள்ளைங்க... உங்க தம்பிக்கு...?''

''இரண்டு பொண்ணுங்க'' என்றான். சுருதி இறங்கியது.

''எந்த நாள் வேணாலும் அவரு கம்பெனி மூடலாம். பொண்ணுங்களைக் கட்டிக் குடுத்துட்டாத் தில்லைநகர் வீட்டுல இருந்து வர்ற வாடகையில உங்க தம்பியும் அவர் மனைவியும் காலந் தள்ளலாம். நமக்கு பென்ஷன் இருக்கு. பிள்ளைங்க நம்மைக் காப்பாத்துவாங்கன்ற நம்பிக்கை இருக்கு. நமக்குக் கிராமத்து வீடு, கடைசிக் காலத்தில ஒதுங்கப் போதும்தானே?''

சங்கரன் வாயை இறுக மூடிக் கொண்டான். இந்தக் கணக்கு இப்படிப் போடப் பட்டதுதானா?

''ரமேஷ் எல்லா ஸ்வீட்டும் சாப்பிடுவான்.. ஏதாவது கொடுத்தாப் போதும். சுரேஷுக்கு ஜாங்கிரி மட்டுந்தான் பிடிக்கும். வேற எது கொடுத்தாலும், விரல் நுனியால் கூடத் தொட மாட்டான். அதான் இவனுக்குக் கொடுத்தேன். எப்பவுமே பிள்ளைங்களுக்குள்ளே அம்மா பேதம் பார்க்க மாட்டா. அவனுக்கு எல்லாரும் வேணும்'' — அமைதியாகப் பேசிய பின் மனைவி அவனை விட்டு எழுந்து நடந்தாள்.

சங்கரனின் மனம் உறுத்தலைத் தொலைத்த நிம்மதியில் லேசானது.

கலர் டீ.வி. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி!



சுல்கியில் வெளியான டீ. வி. வீடியோ பக்கங்களில் 190 துணுக்குகள் பிரசுரமாயின. இந்தத் துணுக்குகளுக்கு வரிசைப் படி எண்கள் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு துண்டுத் தாள்களில் 191 எண்கள் எழுதப்பட்டு, குலுக்கல் முறையில் ஓர் எண்ணைத் தேர்ந்தெடுக்குமாறு ஷோபனா ரவியைக் கேட்டுக் கொண்டோம். அவர் தேர்ந்தெடுத்து அளித்த எண் 37. இந்த எண்ணை உடைய துணுக்கை எழுதிக் கலர் டீ. வி. பரிசு பெறுபவர்:

அ. ஆல்பர்ட்,
6—24—D, ஹைகிரவுண்ட்,
கன்னியாகுமரி — 629 702.

படம்: யோகா

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VII

ராஜ்மோகன் காந்தி

ராஜாஜியைக் கொலை செய்ய முயற்சி!

லால்பகதூர் சாஸ்திரி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர்தான் இந்திரா காந்தி. ஆயினும் அவரது நிர்வாக ஆற்றல் இன்னும் சோதனைக்கு உள்ளாகியிருக்கவில்லை. மேலும் எந்த ஒரு பலமான காங்கிரஸ் கோஷ்டியும் அவரை ஆதரிப்பதாகவும் தெரியவில்லை. இந்த இரண்டாவது அம்சமே அவருக்குச் சாதகமாக அமையும் போலத் தோன்றியது! ஏனெனில் காங்கிரஸ் தலைவர்களை நம்பித்தான் அவர் செயலாற்ற வேண்டியிருக்கும்! எனவே அவர்கள் இந்திராவுக்கு நிர்வாக அனுபவம் போதிய அளவு இல்லை என்பதைப் பொருட்படுத்தவில்லை! மேலும் தேர்தலை எண்ணிப் பார்க்கும் போது அவரால் கிடைக்கக்கூடிய ஆதாயங்கள் ஏராளம்! தேர்தலுக்கு இன்னும் ஓராண்டுதான் இருந்தது. நேருவின் மகள் என்பது ஒன்று; பெண்மணி என்பது மற்றொன்று. இரண்டுமே பொது மக்களை ஈர்க்கும் அம்சங்கள். காமராஜரும் அவருடன் இணைந்திருந்த இதர தலைவர்களும் 'இந்திராவே அடுத்த பிரதமர்' என்று தீர்மானித்தனர். ''நான் என்ன குற்றம் செய்தேன்?'' என்று கேட்ட மொரார்ஜி, கோதாவில் இறங்கினார். நேருஜி இருந்தபோதே, 'அடுத்த பிரதமர் மொரார்ஜி தேசாய்தான்' என்று 'பேசப்பட்டதுண்டு. இவர் ஒருவரை மீறித்தான் சாஸ்திரி பிரதமராக வர வேண்டியிருந்தது. இம்முறை தேசாய், 'வோட்டெடுப்பு நடத்த வேண்டும்' என்று நிர்ப்பந்தித்தார். 186 வோட்டுக்களைப் பெற்றார். 355 காங்கிரஸ் எம்.பி.க்கள் இந்திராவுக்கு வோட்டளித்தனர்.

இந்திரா காந்திக்கு வோட்டுக்களை ஈர்க்கும் திறன் இருந்ததைக் காமராஜ் போலவே, ராஜாஜியும் உணர்ந்திருந்தார்—அதனால் கோபமும் அடைந்தார்! ''தேசத்துக்கு ஒரு பிரதமர் தேவை; காங்கிரஸ் கட்சிக்கோ ஒரு (தேர்தல்) சின்னம் தேவை! அந்தச் சின்னத்தை அது பெற்று விட்டது'' என்று எழுதினார் ஸி. ஆர். ''பாகிஸ்தான் நெருக்கடி, சீனா நெருக்கடி எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. தேர்தல் நெருக்கடிதான் முன் நிற்கிறது. அதனைச் சமாளிக்க காங்கிரஸ் கட்சி நேரு குடும்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு விட்டது!''

''பொம்மைகளை இயக்கி வைக்கும் சூத்திரதாரிகள்'' என்றும் பேசினார் ஸி. ஆர். அவர் யோசனையின் பேரில் சுயராஜ்யாவில் வெளியான ஒரு கார்ட்டூன், திக்குத் தெரியாத காட்டில் சிறுமி இந்திரா திகைத்து நிற்பதைக் காட்டியது! மரங்களின் அடிவாரங்கள், . காமராஜ், ஜகஜீவன் ராம், அதுல்ய கோஷ் ஆகியோரின் வடிவங்களில் காணப்பட்டன!

வோட்டெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று மொரார்ஜி நிர்ப்பந்தித்தது ஸி. ஆருக்குப் பிடித்திருந்தது. ''காங்கிரஸ் கட்சி சர்வாதிகாரப் பாதையில் மேன்மேலும் சரிந்து விடாமல் தடுத்து நிறுத்தியவர் தேசாய்'' என்று எழுதினார்.



காமராஜ், ஜகஜீவன்ராம்: ''பொம்மைகளை இயக்கி வைக்கும் சூத்திரதாரிகள்!''





இந்திரா காந்தி: ''இந்தத் தெரியாத காட்டில்...!''

நாட்கள் நகர நகர ஸி. ஆரின் உடல், வயது காரணமாகப் பலவீனப்பட்டுத்தான் வந்தது. ஆனால் அவரால் பயணங்களை மேற்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அணு ஆயுத ஒழிப்பு மாநாட்டுக்கு வருமாறு ஜப்பானிலிருந்து வந்த அழைப்பை அவரால் மறுக்க முடிந்தது. ஆனால், தேர்தல் பிரசார சுற்றுப் பயணங்களையும் சுதந்திராக் கட்சிக் கூட்டங்களுக்காகச் செல்வதையும் அவரால் தவிர்க்க முடிய வில்லை. அவர் உடல்நலம் குன்றிப் படுக்க வில்லை, கீழே விழுந்து கையையோ காலையோ முறித்துக் கொள்ளவில்லை எனில், அதற்குக் காரணம் அதிர்ஷ்டம் மட்டு மல்ல; அவர் எடுத்துக் கொண்ட முன் ஜாக்கிரதை நடவடிக்கைகளும்தான்! இவை பற்றி ஆர். கே. நாராயண் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார். எண்பத்தாறு வயதான ராஜாஜி, அன்றைய மைசூர் மாநிலத்தினைச் சேர்ந்த யாதவகிரியில், ஆர். கே. நாராயண் வீட்டில் ஓர் இரவு, அவர் விருந்தினராகத் தங்கினார்:

''தெள்ளுச்சேரியிலிருந்து ஸி. ஆர். என் வீட்டுக்கு வந்து சேரும் போது கிட்டத்தட்ட நடுநிசியாகி விட்டது. அவருக்கென்று தயாரிக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றார். கட்டிலை — படுக்கையை ஆராய்ந்தார். அங்கிருந்து பாத்ரூமுக்கு நடக்க வேணுமெனில் எத்தனை அடி எடுத்து வைக்க வேண்டும் என்று அளந்து பார்த்தார். 'மொஸெய்க் தரை சமீபத்தில் பாலிஷ் செய்யப்பட்டதா?' என்று வினவினார். பாத்ரூமின் கதவு திறக்கப்படுவது, உட்புறமாகவா வெளிப் புறமாகவா? என்று விசாரித்தார். காலையில் எத்தனை மணிக்குத் தமக்கு வெந்நீர் வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தினார். 'ஒரு பக்கெட் வெந்நீர்தான் வேண்டும்; கூடவும் வேண்டாம், குறைவாகவும் வேண் டாம்' என்றார். எத்தனை மணிக்குக் காப்பி வேண்டும் என்பதையும் தெரிவித்தார். ஏழரை மணிக்குத் தாம் புறப்படப் போவதாக அறிவித்தார். காலை ஆறு மணிக்கு நான் அவர் அறைக் கதவைத் தட்டி அனுமதி பெற்று நுழைந்த போது, அவர் குளித்து முடித்து, உடை மாற்றிக் கொண்டு தயாராகி, சுறுசுறுப்பாக எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டேன்! சுயராஜ்யா தலையங்கங்கள், மற்றும் கடிதங்களை அவர் அதிகாலையில் முதல் காரியமாக எழுதி முடிப்பார். ஏழு மணிக்கு அவர் சாப்பாட்டு மேஜைக்கு வந்து சேர்ந்தார். ஒரே ஒரு இட்டிலியும் ஐந்தாறு டீ—ஸ்பூன் உப்புமாவும் சாப்பிட்டார். அரை கப் காப்பி அருந்தி விட்டு, ஏழரை மணிக்குக் காரில் ஏறி பெங்களூருக்குப் பயணமா னார்.''

ஒருநாள் மாலை மயங்கி இருள் கவியும் நேரத்தில் சாமாராவ் என்பவன் ஸி. ஆரின் பஸ்லுல்லா சாலை வீட்டு வாசலை நெருங்கினான். வாசல்படியில் காற்றாட அமர்ந்திருந்த ஸி. ஆரின் மகள் நாமகிரியைத் தன் கையிலிருந்த கசாப்புக் கடைக் கத்தியால் பலமுறை தாக்கினான்! நல்லவேளையாக அவன் கரத்தில் உறுதி யில்லை. நாமகிரியின் தலையிலும் தோள் களிலும் பல வெட்டுக்கள் விழுந்து ரத்தம் சேதமாயிற்றே தவிர, உயிருக்கு ஆபத்து ஏற்படவில்லை. தாக்கியவன் பிடிபட்டுச் சிறைத் தண்டனை அடைந்தான். அவன் புத்தி தடுமாற்றம் கொண்டவனாக இருக்க வேண்டும். வழக்கு நடந்து கொண்டிருந்த போது, ''ராஜாஜி இந்து மதத்தைக் காட்டிக் கொடுத்தவர்'' என்று அவன் கத்தினான். அவன் உண்மையில் தாக்க எண்ணியது ஸி. ஆரைத்தான் என்ற சந்தேகம் நிலவியது. அவன் வந்த சமயம் ஸி. ஆர். வீட்டில் இருக்கவில்லை.

இது நடந்தது 1964ன் முற்பகுதியில். அடுத்த ஆண்டு ஸி. ஆரும் நாமகிரியும் பஸ்லுல்லா சாலை வீட்டை விட்டுக் கிளம்பி, சேத்துப்பட்டு நௌரோஜி ரோடில் புதிதாகக் கட்டப்பட்ட சிறிய இல்லத்தில் குடியேறினர். இரண்டு படுக்கை அறைகளும் ஒரு கூடமும், சமையலறையும் கொண்ட இந்த அடக்கமான வீட்டில், ஒரு பெரிய வசதி, அது கல்கி தோட்டத்துக்கு மிக அருகாமையில் இருந்ததுதான். சுயராஜ்யா, கல்கி காரியாலயங்கள் அமைந்திருந்த கல்கி தோட்டத்தில் ராஜாஜிக்கு என்று பிரத்யேக மாக ஒரு பர்ண சாலை அமைத்திருந்தார் சதாசிவம். இங்கே ஸி. ஆர்., தமது அலுவல் கள் பலவற்றைக் கவனித்ததுடன், அவ்வப் போது தம்மைக் காண வரும் சாமானியரை யும் பிரமுகர்களையும் வரவேற்றுப் பேசவும் செய்தார்.

1937 முதல் ஸி. ஆரின் இல்லமாக இருந்து வந்தது பஸ்லுல்லா சாலை வீடு. அங்கே ஸி. ஆர்., மகள் நாமகிரி தவிர, மகன் நரசிம்மனும் மருமகள் தங்கமும் அவனு டைய நன்கு வளர்ந்து விட்ட நான்கு புதல்வர்களும் இருந்தனர். அவ் வீட்டில் எல்லாருக்கும் இடம் போதவில்லை.

வயதாக ஆக, மகிழ்ச்சி அளித்த சம்பவங் களுடன் வேதனையான தாக்குதல்களுக்கும் உள்ளானார் ஸி. ஆர். 1966 மத்தியில் அவருக்கு நாட்டின் பல பாகங்களில் ஐந்து கொள்ளுப் பேரக் குழந்தைகள் இருந்தனர். இதே ஆண்டில் அவர் மகன் ஸி. ஆர். கிருஷ்ணசாமி, மீள முடியாத விதத்தில் மாரடைப்புத் தாக்குதலுக்கு உள்ளானார்.

(தொடரும்)

உறவின் ஆழம்

மங்கள வாத்தியங்கள் முழங்க, பெரியோர்களின் ஆசியுடன், ஊரைக் கூட்டித் தடபுடலாக நடந்தேறிய அந்தத் திருமணத்திற்கு இரண்டே வருடங்களில் அர்த்தம் இல்லாமல் போய் விட்டது. மாலதி—ராகவனின் இனிய மண வாழ்க்கை இப்படி ஒரு சோக நாடகமாக முடியும் என்று யாரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். உலகத்தின் பல நாடுகளிலும் கிளைகள் உள்ள பெரிய கம்பெனி ஒன்றின் தில்லி ஆபீசில் இயக்குனராகப் பணியாற்றிய ராகவன் பம்பாய், கல்கத்தா என்று உள்நாட்டிற்குள் மட்டும் அல்லாமல் பாரீஸ், லண்டன் என்று மாதத்திற்கு ஒருமுறை பறந்து கொண்டிருந்தான். அலுவலக வேலையாகக் கனடா சென்ற ராகவன், அந்தத் துரதிர்ஷ்டமான விமானத்தில்தான் ஏற வேண்டுமா? உருவமே தெரியாமல் கணப்பொழுதில் அழிந்து போனதை, விதியின் கோர விளையாட்டு என்பதைத் தவிர வேறு எப்படி வர்ணிக்க முடியும்?

இருதரப்புப் பெற்றோர்களுக்கும் இச் செய்தி எவ்வளவு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்! மாலதி—ராகவனின் திருமணத்தில்தான் பெற்றோர்களுக்கு எவ்வளவு பெருமை! எவ்வளவு சந்தோஷம்! ராகவனின் தாயார் தன்னுடைய ஒரே மகனுக்கு ஊரெல்லாம் சல்லடை போட்டுப் பெண் தேடினாள். மாலதி, மருமகளாகக் கிடைத்ததில் பரம திருப்தி.

''என் மருமகள் மகாலட்சுமி மாதிரி அழகுக்கு அழகு, படிப்புக்குப் படிப்பு. இந்தக் காலத்திற்குத் தகுந்த மாதிரி நாகரிகத்திற்கு நாகரிகம். வீட்டுக் காரியங்கள் செய்வதிலோ, கேட்கவே வேண்டாம், பம்பரமாகச் சுற்றிக் கொண்டு வருவாள்,'' என்று தன் மருமகளைப் பற்றி வாய் ஓயாமல் புகழ்ந்து கொண்டிருப்பாள் மாலதியின் மாமியார்.

மாலதியின் தந்தை கல்யாண ராமனுக்கோ, இவ்வளவு சின்ன வயதிலேயே கைநிறையச் சம்பாதிக்கும் ராகவனை மாப்பிள்ளையாகப் பெற்றதில் ஏகப் பெருமை. திருமணம் நிச்சயம் ஆனதிலிருந்தே போவோர், வருவோரிடமெல்லாம் தம்பட்டம் அடிக்க ஆரம்பித்து விட்டார்.

'என் மாப்பிள்ளைக்குக் கால் தரையில் நின்றால்தானே? எப்பொழுதும் அமெரிக்கா, லண்டன் என்று பறந்து கொண்டிருக்கான்...'

தான் ஊரெல்லாம் பெருமையாகச் சொல்லிக் கொண்ட அந்த விமானப் பயணமே மாப்பிள்ளைக்கு எமனாக அமையும் என்று அவர் என்றேனும் நினைத்திருப்பாரா?

மாலதி—ராகவனின் திருமண வைபவமும் ஒரு இலட்சியத் திருமணமாக நடந்தேறியது. யார் பிள்ளை வீட்டுச் சம்பந்திகள், யார் பெண் வீட்டுக்காரர்கள் என்று தெரியாதபடி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருங்கிணைந்து, வந்தவர்கள் எல்லோரும் வியக்கும் வண்ணம் திருமணத்தை 'ஜாம் ஜாம்' என்று நடத்தினார்கள். அந்த அதிசயத் திருமணத்தைப் பார்த்து ஊராரின் கண்ணே பட்டு விட்டதோ!

விமான விபத்துச் செய்தி கேட்டு மாலதியின் பெற்றோரும், ராகவனின் பெற்றோரும் அலறிப் புடைத்துக் கொண்டு தில்லியை நோக்கி ஓடி வந்தார்கள். கதிகலங்கிப் போயிருந்த மாலதியை அணைத்துக் கொண்டு ராகவனின் தாயார், ''இந்த மகாலட்சுமியுடன் வாழக் கொடுத்து வைக்காமல், அல்ப ஆயுசில் போய் விட்டானே, பாவி!'' என்று கதறியழுதாள். அக் குடும்பத்தினரைத் தேற்ற யாராலும் முடியவில்லை.

துர்மரணம் என்று கூடப் பார்க்காமல், பதின்மூன்று நாள் காரியங்களையும் சம்பிரதாயப்படி இரு குடும்பத்தாரும் சேர்ந்து செய்து முடித்தார்கள். அது வரையில் உறவு முறைகளும் சரியாகவே இருந்தன. அதற்குப் பிறகு மெதுவாக சுசமுசா வென்று ஆரம்பித்தன, — பணவிவகாரங்கள்...

மாலதியின் தந்தை கல்யாணராமன், தம் மகளின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப் பட ஆரம்பித்தார். நியாயமான கவலை தான். இளம் வயதில் துணையை இழந்து தவிக்கும் தம் மகளுக்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும் என்று துடித்த கல்யாணராமன், அவசர அவசரமாகக் காரியத்தில் இறங்கினார். விமான விபத்தில், அதுவும் அயல் நாட்டில் விமான விபத்தில் ராகவன் இறந்ததால் கணிசமான தொகை — இரண்டு அல்லது மூன்று லட்சங்களுக்குக் குறையாமல் — நஷ்டஈடாகக் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட கல்யாணராமன், பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து வர வேண்டிய பணத்திற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார். கிடைக்கும் தொகையில் மகள் பெயரில் ஒரு வீடு வாங்கி வைத்தால், அவளுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்குமே என்று அவர் திட்டம் போடத் துவங்கினார்.

ரமாமணி சுந்தர்

ராகவனின் தந்தை ராஜகோபாலுக்கோ, அவர் கவலை அவருக்கு. தம்முடைய வயதுக் காலத்திற்கு ஒரே பிள்ளையான ராகவனை மலை போல் நம்பியிருந்தார். கை நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்த இந்த மகனைத்தான், தம்முடைய இரண்டு பெண்களின் திருமணத்திற்கும் எதிர்பார்த்திருந்தார். ராகவனின் திடீர் மரணம், அவரைக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போல் ஆக்கி விட்டது. பெற்று, வளர்த்து, படிக்க வைத்து,





ஆளாக்கிய பெற்றோர்கள் இப்படி வயதான காலத்தில் தவிக்கும் பொழுது, எங்கிருந்தோ வந்த (மருமகள்) பெண், லட்சம் லட்சமாகப் பணத்தை வாரி எடுத்துக் கொண்டு போவது எந்த விதத்தில் நியாயம் என்று அவர் மனம் நினைக்க ஆரம்பித்தது.

அவசரச் செலவிற்கு இருக்கட்டும் என்று மகன் ராகவன் ஏற்கெனவே கையெழுத்திட்டுக் கொடுத்திருந்த காசோலைகளையெல்லாம் உபயோகித்து, வங்கியிலிருந்த பணத்தையெல்லாம் தமக்குச் சேர வேண்டியது என்று வாதிட்டார், ராஜகோபாலன். அவர் மனைவியோ, வீட்டிலிருந்த டீவி, அலமாரி, குளிர்சாதனப் பெட்டி என்று சாமான்களையெல்லாம் மூட்டை கட்ட ஆரம்பித்தாள். தன் மகன் திருமணத்திற்கு முன்பே வாங்கிய சாமான்கள் இவை என்பதால், நியாயப்படி தங்களுக்குத்தான் சேர வேண்டும் என்பது அவளுடைய வாதம்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு, மாலதியின் தந்தையால் சும்மா இருக்க முடியுமா? "நீங்க செய்யறது உங்களுக்கே நன்றாக இருக்கா? என் பெண்ணிற்கு நியாயமாகச் சேர வேண்டிய பணத்தையெல்லாம் நீர் சுரண்டப் பார்க்

கிறீரே? உங்க மனைவியானா, எல்லாச் சாமான்களையும் மூட்டை கட்டுகிறார். இது என்ன அநியாயம்?'' என்று கூச்சல் போட்டார்.

''என்னய்யா, பெரிசா நியாய, அநியாயத்தைப் பற்றிப் பேச வந்துட்டீர்? அதுதான் என் மகன் இறந்ததில் உங்க பெண்தான் லட்சாதிபதியாகி விட்டாளே! உங்களுக்கு இன்னும் என்ன வேண்டும்?'' என்று, நேற்றைக்கு வந்த மருமகளுக்கு லட்ச லட்சமாகக் கிடைத்து விட்டதே என்ற வயிற்றெரிச்சலில் பொரிந்து தள்ளினார் ராஜகோபாலன்.

சாமான்களை மூட்டை கட்டுவதில் மும்முரமாக இருந்த ராகவனின் தாயாரும், ஆவேசம் வந்தவள் போல் நடுக் கூடத்திற்கு ஓடி வந்து, ''எனக்கு அப்பவே சந்தேகம். நீர் பெண்ணின் ஜாதகத்தை அனுப்பாமல், செவ்வாய் தோஷம் உள்ள பெண்ணை ஏமாற்றி எங்க தலையில் கட்டி விட்டிருக்கிறீர்! இப்போது, என் பிள்ளையின் உயிரைக் குடித்து விட்டு, உங்க பெண் பணத்தில் கொழிக்கப் பார்க்கிறாள். அவள் நன்னா இருப்பாளா?'' என்று மகனைப் பறிகொடுத்த துக்கத்தில் சம்பந்தியைப் பொய், பித்தலாட்டக்காரர் என்று அவதூறு சொல்ல ஆரம்பித்தாள். மகாலட்சுமியாகக் கொண்டாடிய அதே மருமகளை இன்று, 'நன்றாக இருப்பாளா' என்று சபிக்கும் அளவுக்குக் கீழே இறங்கி விட்டாள் ராகவனின் தாய்.

அவள் இவ்வளவு தூரம் பேசிய பிறகு, மாலதியின் தாயார் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாளா? சண்டை என்று ஆரம்பித்து விட்டால் போராடாமல் விட்டு விட முடியுமா?

''என் பெண்ணின் அழகிற்கும், படிப்பிற்கும் டாக்டர் என்ன, ஐ.ஏ.எஸ். என்று எத்தனையோ நல்ல, நல்ல வரன்கள் எல்லாம் வந்தன. எல்லாவற்றையும் விட்டு, என் பெண்ணைத் தனியே தவிக்க விட்டு விட்டுத் தரையில் கால் பாவாமல் எப்பொழுதும் ஊர் சுற்றுகிற வேலையில் உள்ள உங்க பிள்ளைக்குப் போய்க் கொடுத்தோமே! இப்ப, நன்னா அனுபவிக்கிறோம்.''

இதற்கு மாலதியின் தந்தை கல்யாணராமனும் சேர்ந்து ஒத்து ஊதினார், ''உங்க பிள்ளைக்கு அப்படி என்ன பெரிய வேலை பாழாப் போயிற்று? பெரிய விஞ்ஞானியா? அல்லது வேறு ஏதாவது வித்தில் அறிவு ஜீவியா? ஊர் ஊராகப் போய் சாமான் விற்கும் வேலைதானே?''

தம் மாப்பிள்ளை பெரிய கம்பெனியின் பெரிய விற்பனை அதிகாரி என்று ஊரெல்லாம் பெருமையடித்துக் கொண்ட கல்யாணராமன், சண்டை என்று வந்தவுடன் வாய்க்கு வந்தபடி அதே வேலையைப் பற்றி இளப்பமாகப் பேசினார்.

''பதின்மூன்று நாள் காரியங்களுக்கே, ஆறாயிரம் ரூபாய் வரை செலவழித்திருக்கிறேன். இந்தச் செலவெல்லாம் யார் கணக்கு? உங்க பெண் கொடுப்பாளா?'' என்று பேரம் பேச ஆரம்பித்தார், ராஜகோபாலன்.

ஆத்திரம் தாங்காமல் கல்யாணராமன், ''பிள்ளைக்குக் கர்மம் பண்ணி விட்டுக் கணக்குப் பார்க்கிறேளே! நீயெல்லாம் மனுஷனா?'' என்று சம்பந்தி என்ற மரியாதையெல்லாம், காற்றில் பறக்க, ஒருமையில் இறங்கினார்.

''என் பெண்ணின் வாழ்க்கையே போய் விட்டது என்று நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். நீர் வரவு, செலவுக் கணக்குப் பார்க்கிறீரே? என் பெண் வாழ வேண்டிய வயதில், எல்லாமே இழந்து நிற்கிறாள். இந்தப் பணமெல்லாம் அதற்கு ஈடு கட்டுமா? எங்க துக்கம் எவ்வளவு பெரிசு என்று கொஞ்சமாவது யோசனை பண்ணிப் பார்த்தீர்களா?'' என்று கல்யாணராமன் துக்கம் தொண்டையை அடைக்கக் குமுறினார்.

ராஜகோபலனோ விட்டுக் கொடுக்காமல், ''உமக்கு என்னய்யா பெரிய துக்கம்! கைநிறையப் பணம் கிடைத்து விட்டது. நாளைக்கே பெண்ணிற்கு வேறு மாப்பிள்ளை பார்த்து ஜாம் ஜாம் என்று கல்யாணம் பண்ணி விடுவீர்! எனக்கு இறந்து போன மகன் திரும்பக் கிடைப்பானா? இப்பச் சொல்லும், உங்க துக்கம் பெரிசா, இல்லை எங்க துக்கம் பெரிசா?'' என்று பட்டிமன்ற விவாதம் போல் கேள்விகளை எழுப்பினார்.

ஒருவருடைய துக்கமும் பெரிதில்லை! இவ்வுலகில் வேறு ஒன்றுமே பெரிய விஷயமில்லை! பணம்தான் எல்லாவற்றையும் விட பெரிய விஷயம் என்ற உண்மை அங்கு நிதர்சனமாகியது!

தாழ்ந்து வரும் கல்வித்தரம்!



"சுவையான சம்பவங்கள்" —

"அவசரம் அறிந்து உதவிய நண்பர்"

1986 — இல் எனது மூத்த மகள் திருமணத்தை நடத்துவதற்கு நான் 1985 — இல் ஸ்ரீராம் சிட்ஸில் ரூ. 15,000/— சீட்டில் சேர்ந்தேன். அந்தச் சீட்டை ஏலம் கேட்டு தினமணி ஆபிஸில் வேலை செய்யும் என் நண்பரின் ஷ்யூரிட்டியுடன் சீட்டுப் பணத்தை வாங்கி, எனது மூத்த மகள் திருமணத்தை முடித்தேன்.

இதன் பிறகு ரூ. 5,000/— சீட்டில் இரண்டும், ரூ. 10,000/— சீட்டில் இரண்டு மாகப் பல சீட்டுகள் சேர்ந்தேன். பிறகு 5 — வது சீட்டு, 6 — வது சீட்டாக இரண்டு சீட்டுகள் சேர்ந்து ரூ. 1,00,000/— சீட்டு சேர்ந்தேன். இதையும் ஏலம் கேட்டு எடுத்தேன். 1989 — ஆம் வருஷம் மார்ச்/ஜூன் மாதங்களில் இந்த ரூ. 1,00,000/— சீட்டுப் பணத்தை வாங்க என்னுடைய வீட்டு வசதி வாரியத்தில் வாங்கியுள்ள என் வீட்டின் "சேல்ஸ் டீடை" வாங்கச் சுமார் 3 மாத காலம் அலைந்து திரிந்து ஒரு வழியாக "சேல்ஸ் டீடை" வாங்கி ஸ்ரீராம் சிட்ஸில் ஷ்யூரிட்டியாகக் கொடுத்துப் பெற வேண்டிய செக்கை வாங்கினேன்.

எனது இரண்டாவது மகள் திருமணத்திற்குத்தான் ஏலம் கேட்க இந்தச் சீட்டை எடுத்தும் செக் வாங்க முடியவில்லை. காரணம் "யூகோ" பேங்க் ஸ்டிரைக் செய்கின்ற நேரம்.

இந்த பேங்க் ஸ்டிரைக் சமயத்தில் பிராஞ்ச் மேலாளர் அவர்கள் என்னுடைய அவசரத்துக்குப் புதியதாக ஒரு பேங்க் கணக்கு ஆரம்பித்து எனக்குச் சேர வேண்டிய செக்கைக் கொடுத்தார்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் புதிய பேங்க் கணக்கு ஆரம்பித்து 1 — வது, 2 — வது செக்கை என் பெயரில் எனக்குச் சேர வேண்டிய சீட்டுப் பணத்தைக் கொடுத்து உதவியதின் மூலமாக 3.9.89 — இல் எனது மகளின் திருமணத்தை இனிது முடித்துவிட்டேன்.

இதில் இருந்து என்னுடைய 62 — வது வயதில் இப்படி ஓர் உதவியுடன் என் மகளின் கல்யாணத்தை முடித்துவிட்டதால் நான் எப்போதுமே ஸ்ரீராம் சிட்ஸை மறக்க முடியாது. இந்தச் சுவையான சம்பவங்களை என் மனப்பூர்வமாக எழுதி உள்ளேன்.

இப்படிக்கு,

சி. டி. சண்முகம் செட்டி,
985, 14 — வது சென்ட்ரல் கிராஸ் ரோடு,
எம். கே. பி. நகர், வியாசர்பாடி,
சென்னை — 39.

என் உயிர்த் தோழன்

அத்தியாயம் 24
'அக்னி' ஆதவன்

குப்பத்திலுள்ளவர்கள் பாதிப் பேர் மகிழ்ச்சியிலும் மீதிப் பேர் குழப்பத்திலும் தருமனின் செயலை நினைத்தவாறே தத்தம் வீட்டிற்குச் சென்று படுக்க, தருமன் சிட்டுவிடம், "இந்தாமே நீ உள்ள போய்ப் படு." என்றவாறே அவன் வெளியே நிறுத்தியிருந்த தனது ரிக்‌ஷாவில் தன்னை முடக்கிக் கொண்டான்.

சிட்டுவின் பேச்சைக் கேட்டு ஓர் ஆவேசத்தில் தாலி கட்டி விட்டாலும் அவளுக்கு எந்த வகையிலும் பொருத்தமில்லாத தான், அப்படிச் செய்தது நியாயத்திற்கு முற்றிலும் புறம்பான செயல் என்ற எண்ணம் தருமனைத் தூங்க விடாமல் உறுத்திக் கொண்டிருந்தது.

குடிசையின் கதவை அடைத்து உள்ளே சென்று படுத்த சிட்டு, தன் மனக் கதவைத் திறந்தாள். நடந்தவற்றை மெல்ல அசை போட்டாள். தான் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விட்டோமோ என்று யோசித்தவாறே படுத்தவளுக்குத் தென்னவனின் நினைவு வர அந்த நினைப்பே அவளுக்குக் கசந்தது. 'தான் ஆசைப்படுபவனை விட தன் மீது ஆசை வைத்திருப்பவனை மணப்பதே சிறந்தது'. என்று எங்கோ படித்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது. தருமன் தன் மீது ஆசைப்படவில்லை என்றாலும் அவன் மீது ஆசை இல்லை என்றும் அவன் சொன்னவனில்லையே என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் சிட்டு.

இரவு முழுவதும் தீவிர சிந்தனையிலிருந்த சிட்டு, விடியலில் தெளிவாகியிருந்தாள். அன்றைய தினத்தோடு தன்னுடைய கடந்த கால நினைவுகளுக்கு ஒரு முழுக்குப் போடும் முடிவுக்கு வந்தவள், முதல் வேலையாகத் தன்னிடம் தென்னவன் விட்டுச் சென்ற ஒரே ஞாபகச் சின்னமான புல்லாங்குழலை மெல்லக் கை நடுங்க எடுத்தாள். ஒரு நிமிடம். ஒரே நிமிடம் அதை உற்று நோக்கியவள், 'விடுவிடு'வென்று குடிசையை விட்டு வெளியேறினாள். தங்கள் குடிசைக்கு எதிரே அதிகாலைக் குளிரை விரட்ட யாரோ சிலர் எரிய விட்டுச் சென்றிருந்த நெருப்பில் அதை விட்டெறிந்தாள். பின் தென்னவனையே நெருப்பில் தூக்கி எறிந்த திருப்தியோடு குடிசைக்குள் சென்று தலைமுழுகினாள். சிட்டு இப்போது தன் மனம் மிகவும் இலேசாகிப் போய்ப் பறப்பது போல உணர்ந்தாள்.

சிட்டு குடிசைக்குள் சென்ற அதே விநாடி, அவ்வழியே வந்த வாண்டுகள் சில எரிந்து கொண்டிருந்த நெருப்பை வட்டமிட்டு ஏதோ கூச்சலிட்டவாறே சுற்றி வர, அதில் ஒருவன் அப்போதுதான் தன்னை எரித்துக் கொள்ளத் தயார்படுத்திக் கொண்டிருந்த அந்தப் புல்லாங்குழலைக் கண்டான். அடுத்த நிமிடம் அந்தச் சிறுவர் குழு குப்பத்தின் ஒரு மூலையில் வட்டமாக அமர்ந்திருக்க, அவர்களுக்கு நடுவில் அந்தப் புல்லாங்குழல் அதற்கே உரிய வசீகரத்தோடு வீற்றிருந்தது!

சேலம் — போஸ் மைதானம் விழாக் கோலம் பூண்டிருந்தது. சேலம் முழுக்க அடித்து ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் தருமனின் கட்சியான பிரதான எதிர்க் கட்சியின் மாபெரும் கூட்டம் அன்றைய மாலை ஆறு மணியளவில் அங்கு நடக்கவிருப்பதைப் பல வண்ணங்களில் பறை சாற்றியது. அதில் பங்கு கொண்டு அக் கட்சியைச் சார்ந்த 'தலைவர், பொதுச் செயலாளர், துணை பொதுச் செயலாளர், பொருளாளர் கொள்கை பரப்புச் செயலாளர் போன்ற அனைத்துப் பெருந்தலைகளும் ஆளுங் கட்சியினரின் அவலப் போக்கைக் கண்டித்து உரையாற்றுவர்' என்ற செய்தியை அச் சுவரொட்டிகள் தெரிவித்தன. அப்போது சேலத்து மக்களிடையே மிகவும் பிரபலமடைந்திருந்த பேச்சாளன் 'அக்னி' ஆதவனின் பெயரும் பேச்சாளர்களின் வரிசையில் இடம் பெற்றிருந்தது, மக்கள் மாபெருங் கூட்டமாய்த் திரண்டு வர, ஒரு முக்கியக் காரணமாய் இருந்தது.

சேலம் 'ஐந்து ரோட்டுப்' பகுதியில் அமைந்துள்ள 'வுட்லேண்ட்ஸ்' ஹோட்டல் வாசலில் மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. ஹோட்டலுக்குள் தமது அறையில், கட்சியின் பொதுச் செயலாளர் முதல் பொருளாளர் வரை அனைவரும்

பாரதிராஜா

அமர்ந்திருக்க, தலைவர் சேலம் மாவட்டத்துச் செயலாளரை எக்குத் தப்பாக எகிறிக் கொண்டிருந்தார்.

''யோவ் யாரைக் கேட்டு நீ கண்டவன் பேரையும் போட்டிருக்கே? இங்க நாங்க இத்தனை பேரு வந்து பேசறதுக்கு வராத கூட்டம் நீங்க போட்டுருக்கறீங்களே... யாரவன்? ஆங்... 'அக்னி ஆதவன்' அவன் பேரைப் போட்டா வந்துடுமா? ஆமா, இப்பப் பட்டமெல்லாம் எப்படி நீங்களே குடுத்துக்கறதா? அவன் யாரு என்னான்ற வெவரமெல்லாம் எனக்கு இப்பத் தெளிவாத் தெரிஞ்சாவனும். இல்லேன்னா அப்படியே எல்லாம் ஊரைப் பார்த்துத் திரும்பிடுவோம்.''

''அண்ணே நீங்க நான் சொன்னா நம்ப மாட்டீங்க... நேருலே ஒருக்கா அவன் பேச்சைக் கேட்டீங்க அசந்துருவீங்கண்ணே!''

''அது யாருய்யா அவன் அப்பேர்ப்பட்ட கொம்பன்? எங்கே... ஆரு இருந்தான்னாக் கூப்பிடு பார்க்கலாம்...''

தலைவர் அசைந்து கொடுக்க, இதுதான் சந்தர்ப்பம் என்று மின்னலாய் வெளியே பாய்ந்து, அதே வேகத்தில் உள்ளே அந்தப் புதுமுகப் பேச்சாளருடன் நுழைந்தார் மாவட்டச் செயலாளர்.

சுத்தமாகச் சவரம் செய்யப்பட்ட முகம். மூக்கின் மீது அமர்ந்த கண்ணாடி. தூய வெள்ளைச் சட்டை. கட்சிக் கரையுடன் கூடிய வெள்ளை வேட்டி. மேல் துண்டு. கையில் அன்றைய கட்சி நாளிதழ், மற்றும் டைரியுடன் நின்று கொண்டிருந்தான் 'அக்னி' ஆதவன்.

கட்சியின் பெருந்தலைகள் அனைத்தும் ஒரே சமயத்தில் அவனை மேலும் கீழும் ஏற இறங்கப் பார்க்க, அவன் அனைவருக்கும் மிகவும் பவ்யமாக ''வணக்கம்'' செலுத்தினான்.

பதிலுக்குத் தலையை மட்டும் ஆட்டியவர்கள் தங்களை ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டபின், தலைவர் தொண்டையைச் செருமியவாறே, ''தம்பி... மாலை பொதுக்





''குடும்பம் நடத்துவதை விட சன்யாசம் வாங்கிக் கொண்டு போவதே மேல்'' ,,என்று போனீர்களே, ஏன் திரும்பி வந்து விட்டீர்கள்?''

'''ருத்திராட்ச மாலை, காவிச் சட்டை கட்டைச் செருப்பின் விலையைப் பார்த்தேன்... சம்சாரமே மேல் என்று திரும்பி விட்டேன்!''

— எம். சீதா.

கூட்டத்துல பேசறதுக்குத் தயாரா இருக்கேல்ல?'' என்றார்.

'அக்னி' ஆதவன் வாய் திறந்தான். கம்பீரமான குரல் வளம் படைத்தவன் என்பதை முதல் வார்த்தையிலேயே அவர்களுக்குப் புரிய வைத்தான்.

''ஐயா அனைத்து விஷயங்களையும் என் நாவின் நுனியில் நிறுத்திவிருக்கிறேன். ஐயா ஆணையிட்டால் அடுத்த வினாடியே நாவை நாட்டியமாடவைப்பேன். செயலாளர் ஐயா பூபதி அவர்கள், ஆண்டாண்டுகளாய் நம் கட்சியினைக் கட்டிக் காக்கும் கல் தூண்களான தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் முன்னிலையில் எனக்குப் பேச வாய்ப்பளித்திருப்பதாக முதலில் கூறிய போது, விவரம் தெரிந்ததிலிருந்தே மேடையேறிப் பேசிப் பழக்கப்பட்ட எனக்குச் சந்தோஷ மிகுதியில் பேச நா எழவில்லை. இது எனக்குக் கிடைத்த மிகப் பெறும் பேறாக நினைத்து, நெஞ்சம் பூரிக்கிறேன். நான் தங்களைப் போன்ற பழுத்த அனுபவசாலிகளிடம் வேண்டுவது, தங்களின் மேலான அன்பையும், ஆதரவையும் ஆசிர்வாதங்களையும் மட்டுமே...'' என்று சடசடவென்று பேசியவன், அறையில் அமர்ந்திருப்பவர்கள் யோசிக்குமுன் அவர்கள் அனைவரது காலிலும் விழுந்து எழுந்திருந்தான்.

அவனது செயலில், பேச்சில் இருந்த ஒருவித வேகம் அவர்கள் அனைவரையுமே வசீகரித்தது. தலைவர் மீண்டும் வாய் திறந்தார்.

''நல்லது தம்பி. அப்பச் சாயந்தரம் பார்ப்போம். பூபதி, நீ பையனை அனுப்பிட்டு வா.''

பூபதியும், ஆதவனும் மறைந்த மறு வினாடி வாய் மலர்ந்தார் கட்சியின் பொதுச் செயலாளர். ''சர்தான்... நாம அப்பப்ப வேஷம் போட்டுட்டு அப்புறம் கலைச்சிருவோம். தம்பி வேஷத்தோடயே பொறந்தவன் போலருக்கு!''

அவர் கூற்றிலும் உண்மை இருந்தது. 'அக்னி' ஆதவன், அவர்களுக்கும் சேலத்து மக்களுக்கும் வேண்டுமானால் புதுமுகமாய் இருக்கலாம். ஆனால் இதே முகத்திற்குத் தாடி வைத்துக் கண்ணாடி தவிர்த்துப் படிய வாரப்பட்டிருக்கும் தலைமுடியைக் கலைத்து விட்டால் சந்தனத்தேவன்பட்டியில் இருக்கும் விரல் சூப்பும் குழந்தை கூட அவனை வேசங்கட்ற தென்னவன் என்று சட்டென்று அடையாளங் காட்டும்!

ஆம், தென்னவன்தான் தற்போது 'அக்னி' ஆதவன் எனும் புதிய வேடத்தில் சேலத்தில் அவதரித்திருந்தான். இப்போது அவனது கொள்கை, லட்சியம், குறிக்கோளெல்லாமே கட்சி எனும் மாமலையில் ஏறித் தன் கொடியை எப்பாடுபட்டேனும் நாட்டி விட வேண்டுமென்பதே. அதற்காக அவன் என்ன விலையும் கொடுக்கத் தயாராயிருந்தான்.

போஸ் மைதானம் மாலை நான்கு மணிக்கே நிரம்பிவிட்டிருந்தது. பேருந்து நிலையத்திற்கு எதிரிலேயே அமைந்திருந்ததால் அக்கம் பக்கம் இருந்த அனைத்துக் கிராமங்களிலிருந்தும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேருந்துகளில் வந்து இறங்கியிருந்தனர். போதாத குறைக்கு, 'அக்னி' ஆதவன் அவனது செலவிலேயே ஆறு லாரிகளில் வழிய வழிய ஆட்களை ஏற்பாடு செய்திருந்தான். அவர்கள் அனைவரும் கூட்டத்தினரிடையே பரவலாக அமர்ந்திருந்தனர்.

மாலை ஆறு மணியளவில் பெருந்தலைகள் எல்லாம் வந்து மேடையில் கூட, கூட்டம் ஆரம்பித்தது. தலைவர் எழுந்து 'ஆதவனை' முதலில் பேச அழைத்தார்.

தென்னவன் கூட்டத்தினரைப் பார்த்து வணக்கம் தெரிவித்தவுடன் உண்மையிலேயே அவனது பேச்சுக்காக அவனது ரசிகர்களாகியிருந்தவர் முதல், அவன் மூலமாக அங்கு 'ஏற்பாடு' செய்யப்பட்டு வந்தவர் வரை அனைவருமாகச் சேர்ந்து கரகோஷமிட்டு விண்ணை எட்டினர். அங்கு அவனுக்கிருந்த ஆதரவைக் கண்டு, தலைவர் முதல், பொருளாளர் வரை அனைவருமே சிறிது ஆட்டங் கண்டனர்.

தென்னவன் வாய் திறந்தான். தனது வெண்கலக் குரலில் கூட்டத்தைத் தன் கட்டுக்குள் முதலில் கொண்டு வந்தான். பின் சரளமாகப் பேச ஆரம்பித்தான். கட்சி ஆரம்பிக்கப்பட்ட முப்பது வருடங்களில் நடந்த அரசியலைப் புள்ளி விவரத்தோடு துல்லியமாகப் பேசினான். ஆளுங் கட்சியினர் அடைக்க மறந்த சிறிய ஓட்டைகளைக் கூடத் தனது பேச்சு சாதுர்யத்தால் மக்களுக்குப் பள்ளமாக்கிக் காட்டினான். ஒரு மச்சத்தின் அளவிற்கே நடந்திருந்த லஞ்ச லாவண்யங்களைக் கூட மலையாக்கிக் கொண்டிருந்

முயற்சி + பயிற்சி = முன்னேற்றம்

நீங்கள் உங்களுடைய நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களிடம் "உங்களில் எத்தனைபேர் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறீர்கள்?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உடனே அனைவரும் கையை உயர்த்துவார்கள். ஏனென்றால் இவ்வுலகில் முன்னேற விரும்பாதவர்கள் எவரும் இல்லை.

அடுத்ததாக "உங்களில் முன்னேறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தனைபேர்? என்று மற்றொரு கேள்வியைக் கேளுங்கள். முதற்கேள்விக்கு சட்டென கையை உயர்த்தியவர்கள் இப்பொழுது என்ன பதிலளிக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பெரும்பாலானவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார்கள் ஆனால் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதில்லை. உதாரணமாக நம்மில் பலர் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறோம். விருப்பம் மட்டும் இருந்தால் போதுமா? அவ்விருப்பத்தை நிறைவேற்றும் வழி என்ன என்று யோசித்து. அதற்கான முயற்சியில் ஈடுபட்டு முறையான பயிற்சி பெறவேண்டுமல்லவா?

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப் புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இக்கல்வி நிலையம் அளிக்கும் ஓர் எளிய பயிற்சியை மேற்கொண்டால் நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாடவும் இலக்கண பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும் முடியும்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு."

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை இன்றே ஒரு தபால் கார்டில் எழுதி "விவேகானந்தா கல்வி நிலையம் (Regd.) 9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை 17. என்ற முகவரிக்கு அனுப்புங்கள் உடனே நாங்கள் இப்பயிற்சி பற்றிய மற்ற தகவல்களை அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முயற்சியும் எங்களது முறையான பயிற்சியும் இணைந்தால் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது, நீண்ட நாளைய விருப்பம் நிச்சயம் நிறைவேறும்.

"Ambition without Effort is Like a Bird without wings."

– NAGA

SALIM ALI SCHOOL OF ECOLOGY
PONDICHERRY UNIVERSITY

ADMISSION

Programme: M. Phil in Ecology — 1990

The Salim Ali School of Ecology invites applications for M. Phil programme in Ecology starting in January 1990. This will be our innovative programme first of its kind in this country. The School has a very distinguished faculty with special training in top institutions in India and abroad with the reputed international authority Prof. V. M. Meher-Homji as Dean.

ELIGIBILITY: Candidates having M. Sc. in Biological Sciences, Earth Sciences and other disciplines having a bearing on Ecology and Environmental Science can apply. Candidates should have secured at least 55 percent marks in M.Sc.

SPECIALISATIONS: 1. Forest Ecology, 2. Genetic Toxicology, 3. Human Ecology, 4. Eco-system Management, 5. Marine Ecology, 6. Ecological Modelling, 7. Evolutionary Ecology, and 8. Pollution.

SELECTION: Selection will be on *all India Basis*, purely based on *merit* through a Test and Personal Interview. Entrance Test will be held at Pondicherry in December 1989.

RESERVATION: There will be reservations for SC/ST and physically handicapped persons.

HOW TO APPLY: Application form can be obtained from the Dean, the Salim Ali School of Ecology, Post Box No. 154, No. 3, Vocomte de Souillac Street, Pondicherry University, Pondichery 605 001, by applying in plain paper with stamped (Rs. 2.50) and self addressed envelope and with a Demand Draft or Indian Postal Order for Rs. 50/- (Rupees fifty only), drawn in favour of the Finance Officer, Pondicherry University, Pondicherry-605 001. The fee is towards application form prospectus and entrance test charges. The SC/ST and physically handicapped candidates are fully exempted from lieu of any fee on production of SC/ST and PH Certificate.

LAST DATE FOR REQUISITION: The last date for submission of the application form is 15th November 1989.

Place: Pondicherry,
Date: September 12, 1989.

B. V. SELVARAJ IAS.,
REGISTRAR.

தான். ஆனால் அவன் நடக்காதவற்றை அங்கு பேசவில்லை. அனைத்துமே நடந்தவைதான்! அதன் அளவுகளை மட்டுமே ஆதவன் சற்று மாற்றியிருந்தான். உண்மையான எண்ணிக்கையோடு சில பூஜ்யங்களை மட்டுமே சேர்த்திருந்தான். இவை அனைத்திற்குமான ஆதாரங்கள் தன்னிடம் கைவசமுள்ளன என்று அஞ்சாமல் அவிழ்த்து விட்டான். ஆளுங்கட்சியை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து, கிழிகிழியென்று கிழித்தான். அவனது பேச்சில் கட்டுண்ட கூட்டம் மகுடிக்கு அடங்கிய பாம்பாய்ச் சிரிக்க வேண்டிய இடத்தில் சிரித்து, ரசிக்க வேண்டிய இடத்தில் ரசித்துக் கைதட்ட வேண்டிய இடத்தில் கை தட்டியது. அவன் மேடையில் பேசிக்கொண்டிருந்தபோதே தலைவர் கட்சியின் இதர முக்கியஸ்தர்களிடம் மேடையிலேயே விவாதித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தார்.

தென்னவன் பேசி முடித்தான். கூட்டம் எழுந்து நின்று கைதட்டியது. தென்னவனுக்குத் தான் குறி வைத்ததைச் சரியாக அடித்து விட்ட திருப்தியிருந்தது. அவன் அதிக ஆர்ப்பாட்டமில்லாமல் மேடையில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து மரியாதையாக வணங்கிய பின், அவர்கள் அமர்ந்திருந்த வரிசைக்குப் பின் சென்று நின்று கொண்டான்.

ஒருவர் பின் ஒருவராகக் கட்சியின் முக்கியப் பிரமுகர்களாய் வரவழைக்கப் பட்டவர்கள் பேசியமர்ந்தனர். இறுதியாகத் தலைவர் பேச அழைக்கப்பட்டார். தலைவர் எழுந்ததும் மீண்டும் ஒருமுறை கரகோஷம் விண்ணைப் பிளக்கத் தலைவர் மெல்லக் கையமர்த்திக் கூட்டத்தை அமைதிப்படுத்தினார். பின்னர் தாமும் தம் பங்கிற்கு ஆளுங் கட்சியினருக்குச் சவால் விடுத்தும், அவர்களது அராஜகங்களைக் கண்டித்தும், கிண்டலடித்தும், உலகத்து உத்தமர் மொத்தமும் தங்கள் கட்சியிலேயே இருப்பதாகவும், அடுத்த கட்சியைச் சார்ந்தவர்கள் அத்தனை பேருமே அயோக்கியர்கள் என்றும் ஆயிரம் முறை சத்தியம் செய்தார். பின் பேச்சை முடிக்குமுன் மக்களை நோக்கி ஒரு முக்கிய அறிவிப்புச் செய்யவிருப்பதாகவும் அறிவித்து, மேடையிலிருந்தோரைச் சில நிமிடம் கலந்து விட்டு மக்களை நோக்கி, "நமது கட்சிப் பணிகள் மேலும் சிறப்புற நடக்க வேண்டுமெனில் அதில் புது இரத்தம் அதிலும் இள இரத்தம் பாய வேண்டியது அத்தியாவசியமான ஒன்று. நமது கட்சி ஆட்சிப் பொறுப்பேற்கும் நாள் இன்னும் வெகு தொலைவில் இல்லை. கோட்டை இப்போதே நம்மை இரு கரம் நீட்டி 'வா, வா' என்று அழைக்கிறது. 'மீண்டும் எப்போது நமக்குப் பொறுப்புத் தரப்படும் — தர்மத்தை எப்போது தலைநிமிரச் செய்து ஆட்சியில் அமரச் செய்வோம்' — என்று நீங்கள் அனைவரும் ஆவலோடு காத்திருப்பதும் எனக்கு உள்ளங்கை நெல்லிக் கனியாய்த் தெரிகிறது.

"இதுபோன்ற நேரத்தில் என் போன்றோர் மேலும் பல இளைஞர்களை ஊக்குவித்தாலன்றி நமக்குப் பின்னே என்ற கேள்வி கட்சியில் எழத்தான் செய்யும். அதனால் தம்பி 'அக்னி' ஆதவன் போன்ற; துடிப்பும், ஆர்வமும், தகுதியும் உள்ள பல இளைஞர்கள் நமது கட்சிப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தகுதியுள்ளவர்களுக்கு நமது கட்சியில் என்றுமே அங்கீகாரம் உண்டு என்பதும், உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இங்கு இப்போது உங்கள் அனைவரது முன்னிலையிலும் தம்பி 'அக்னி' ஆதவனை நமது கட்சியின் இளைஞர் அணித் தலைவராக இந்த வினாடி முதல் நியமிக்கிறேன்."

தலைவர் இதைக் கூறி முடித்ததும் கூடியிருந்த மொத்தக் கூட்டமும் கத்திய கத்தல் காது ஜவ்வுகளுக்குச் சவால் விட்டது. மேடையில் இதைக் கேட்டு நின்ற தென்னவன் ஓடோடி வந்து தலைவரின் காலில் விழ, அவர் அவனை அணைத்து மெல்ல மேலே தூக்கி, "தம்பி, இங்கிருப்பதை விட என்னுடன் சென்னைக்கு வந்தால் கட்சிப் பணிகளை மேலும் சிறப்புறச் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, அவரை என்னுடன் இப்போதே சென்னைக்கு அழைத்துச் செல்ல விழைகிறேன்...." என்று கூட்டத்தினரிடம் கூறினார்.

தென்னவன் அந்தச் செய்தியின் இன்பத் தாக்குதலை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அமைதியாய் ஒரு புன்னகை மட்டுமே செய்து, கூட்டத்தினரை நோக்கி "நன்றி" என்று கூறித் தலைவருடன் அவரது வண்டியிலேயே தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையை நோக்கிப் பயணப்பட்டான்.

(தொடரும்)

"ஸ்வீட் எடுத்துக்குங்க சார்..."

"எதுக்கு?"

"இது நான் அட்டண்ட் பண்ற நூறாவது இண்டர்வியூ!"

— வி. கிருஷ்ணகுமார்.



கலைஞரின் பேரன்:

அடிதடியில் சிக்கிய அறிவுநிதி!





• மு. க. முத்து • அறிவுநிதி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கும் நான்காம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கும் மோதல். முதல்வர் கருணாநிதியின் பேரன் (மு.க. முத்துவின் மகன்) அறிவுநிதி உட்பட பல மாணவர்கள் கைது.

— இது செய்தி.

இதன் பின்னணி என்ன?

ஹாஸ்டல் தினக் கொண்டாட்டங்களை ஒட்டிப் பலவிதப் போட்டிகள் நடை பெற்றன. அந்தப் போட்டிகளில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் பெரும்பாலும் வெற்றி வாகை சூடினார்கள். இதனால் கோபப்பட்ட நான்காம் ஆண்டு மாணவர்கள் அறிவுநிதி தலைமையில் 'களம்' காணப் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு அமைச்சர் பொன். முத்துராமலிங்கத்தின் மகன் மருது பாண்டியன் ஆதரவு! போட்டிகளெல்லாம் முடிந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, திடீரென்று மின்சாரம் நின்று போனது. இது தற்செயலாக ஏற்பட்ட மின்வெட்டா, அல்லது நான்காம் ஆண்டு மாணவர்களின் சதி வேலையா என்று இரண்டாம் ஆண்டு மாணவர்கள் நினைத்துப் பார்ப்பதற்குள் இருட்டில் ஏக கலாட்டா!

அறிவுநிதி ஆரம்பக் கல்வியை சென்னை டான் பாஸ்கோ பள்ளியிலும் பின்னர் இறுதி வகுப்பை செயிண்ட் ஜான்ஸ் பள்ளியிலும் முடித்தவர். நான்கு வருடங்களுக்கு முன்னர், மருத்துவக் கல்லூரியில் சேர ஆசைப்பட்டுத் தாத்தாவை (கலைஞரை) அணுகினார். அப்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியாததால், அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்க்க முடியவில்லை. பின்னர் கலைஞர் எம்.ஏ.எம். ராமசாமியிடம் சொல்லி "நன்கொடை"ச் செலவில்லாமல் அண்ணாமலையில் சேர்த்து வைத்தார்.

மு.க. முத்துவின் வீட்டிற்குச் சென்றோம். கலைஞர் வீடு இருக்கும் கோபாலபுரத்தில், அதே தெருவில் குடியிருக்கும் மு.க. முத்து இப்போது 'ஷாம்பு' ஏஜென்ஸி எடுத்து நடத்திவருகிறார். கலைஞரின் கைவண்ணத்தில் தயாரான 'நியாயத் தராசு' படத்திலும் நடித்திருக்கிறார்.

''அறிவு நிதியை மாணவர்கள் தாக்க வந்திருக்காங்க. 'தற்காப்புக்காகப் போராட வேண்டியதாயிடுச்சு'ன்னு என் மகன் சொல்கிறான்'' என்றார் மு. க. முத்து.

''என் பையன் கெட்டிக்காரன்; அவன் நன்றாக வளர்வதைப் பொறுக்க மாட்டாமல், சொந்தக்காரர்கள் 'சிலர்' செய்யும் சூழ்ச்சி இது. என் மகனைப் பற்றிய தவறான பிரசாரத்தால், என் அப்பாவுக்ும் எனக்கும் உறவு பாதிக்கப்படும் என்ற நப்பாசையில் சொந்தக்காரர்கள் இது போன்ற செயல்களில் இறங்கியிருக்கின்றனர்! அவர்கள் ஆசையில் மண்தான் விழும்'' என்றார் மு. க. முத்து.

நடந்த விஷயங்களை முதல்வரின் மனைவி ராஜாத்தியிடம் தெரிவித்திருக்கிறாராம், மு. க. முத்து. எம்.ஏ.எம். ராமசாமியிடமும் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

அறிவு நிதி உட்பட போலீஸாரால் கைது செய்யப்பட்ட மாணவர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். முதல்வரைச் சந்தித்துப் பிரச்னைக்குத் தீர்வு காண இருக்கிறார்கள். "Boys will be boys என்பது உண்மையானாலும் முதல்வர் மற்றும் அமைச்சர் வீட்டுப் பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் பொறுப்பு அதிகம்'' என்பதைக் கலைஞர் உணர்த்தி அனுப்புவாரோ!

— கௌசல்யா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.


இப்போது!
இரட்டைப் புத்துணர்ச்சி
ஸின்த்தால் + லைம்
புதிய ஸின்த்தால் லைம் சோப்பிலே டிசிசி உடல் துர்நாற்றத்திற்குக் காரணமான பாக்டீரியாக்களை ஒழிக்கிறது. மற்றும் எலுமிச்சை கூடுதல் புத்துணர்ச்சியை வழங்குகிறது.
ஸின்த்தால்
உங்களுக்கு உடல் தன்னம்பிக்கை தரும் சோப்.
Godrej
CINTHOL
THE LIME - FRESH DEODORANT SOAP
LIME
CINTHOL
MADISON-C-59-TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



இதன் பாவு நூலில், இதன் ஊடு இழையில், இதன் நெசவு நயத்தில்...

ஆம். இந்தியா. ஆதியிலிருந்தே பட்டைதீட்டிய வைரம் போன்று ஜொலித்து வருவது. கணக்கற்ற கற்பனை ஊற்றுக்களின் தோற்றுவாயாக விளங்கிவருவது. அதனால்தான் இந்நாள் வரை ஜீவன்ததும்ப தலை நிமிர்ந்து நிற்கிறது. இதனை, கைத்தறித் துணிகளின் மாயாஜால நெசவுக் கலைவண்ணம் எடுப்பாக, அழகாக எடுத்துக் காட்டுகிறது. இந்தியக் கைத்தறித் துணிகள் சிறப்பானவை, நுட்பமான திறன்படைத்தவை, முன்மாதிரியானவை. அவை நவீன நாகரீகப் பாணியைத் தழுவியவை. மண்ணுலக வாழ்விலே விண்ணுலக இன்பம் ஊட்டுபவை. இந்தியாவின் ஆத்மாவே இந்தியக் கைத்தறியில்தான் குடிகொண்டுள்ளது.

...இந்தியாவின் ஜீவன் இழையோடுகிறது.

ஹாண்ட்லூம் ஹவுஸிலுள்ள
**தேசிய டிசைன் கலெக்‌ஷன்கள் முழுவதும் மானிய உதவிபெற்ற விசேடமான விலைகளில் –
இப்போது உங்களுக்குக் கிடைக்கின்றன – ஆண்டு முழுவதும்.**

handloom house

Sarees ○ Dress Materials ○ Readymades ○ Furnishings ○ Carpets ○ Bed, Bath & Table Linen

THE ORIGINAL ONE STOP SHOP

Ahmedabad • Bangalore • Baroda
Bombay • Calcutta • Chandigarh • Coimbatore • Delhi • Ernakulam • Gorakhpur • Hyderabad • Imphal • Jaipur
Madras • Madurai • Patna • Ranchi • Secunderabad • Surat • Vijayawada • Vishakapatnam.

Interact:AIH:176 TAM